உ

தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௫	சுக்கில—மார்கழி, தை.	மலர் ௯-௰

உ

அடம்பும் கடம்பும்.

திருவாளர் ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி 70.)

அடம்பு என்பது ஓர் கொடியென்பது முன்னே விளக்கப்பட்டது. இனிக் கடம்பு என்பது யாதென்று ஆராய்வோம். நிகண்டு நூல்களிலே, மரப்பெயர்த் தொகுதியுள்ளே, கடம்பு என்பது காணப்படும். குறிஞ்சிப் பாட்டில் 'திண்ணிலைக் கடம்பின் திரள் அரை வளைஇய' என வந்திருப்பதுகொண்டு அது ஓர் மரம் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் அக்கடம்பில் எத்தனை வகை உள்ளனவென்று நிகண்டு நூல்கள் வரையறுத்துக் கூறவில்லை. திவாகரம்மட்டும் செங்கடம்பும் வெண்கடம்பும் என இரண்டு வகை காட்டுகின்றது. சூடாமணி நிகண்டுடையார் பொதுவாகக் 'கதம்பம்' 'விசாலம்' 'நீபம்' 'இந்தளம்' 'மரா' என்பன கடம்பிற்குப் பெயராக எடுத்து ஓதினர். மரா என்பது மராம் எனவும் வழங்கும். 'இணர் சேர்ந்த மராமும்' என்பது கலி-26.

இக் கடப்பமரம் முருகக்கடவுளுக்கு உகந்தது. அம்மரமே அக்கடவுளின் உருவமாகக் கொண்டு வழிபடுதல் செய்யப்படும்.

இதனைக் 'கடம்பமர் செல்வன்' 'ஆலுங் கடம்பும் நல்யாற்று நடுவும்' என்னும் பரிபாடலானும், 'கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே' என்னும் தேவாரத்தானும் அறிக. கடப்ப மலர் மாலை முருகக்கடவுளுக்கு உரியது. அதனால் கடம்பன் என்று முருகக்கடவுளுக்கு ஓர் பெயரும் உண்டு.

இத்தகைய தெய்வத் தன்மையுடைய கடப்பமரம் இன்னதென்று இக்காலத்தில் பெரும்பாலார்க்குத் தெரியாது. ஒரு சிலர்க்கு மாத்திரம் தெரிந்துளது. நித்தலும் கடவுட்பூசைக்குத் திருமலர் எடுப்பாரில் சிறந்தாரையும் தேவாரம் ஓதுவாரில் சிறந்தாரையும் வினவியதில் பெரும்பாலார் அது எங்குள்ளதென்று தெரியாதென்றனர். இதற்குக் காரணம் என்னவென்று பார்க்குமிடத்து, சங்கவிலக்கியங்களிலே பயிற்சியில்லாமைதான் என்பது புலப்பட்டது. அச்சங்க விலக்கியங்களும் அவற்றின் அரிய உரைகளும் நமக்கு இற்றைநாள் கிடைத்திராவிடின், அக்கடம்பு இன்னதென்று இன்னும் கண்டு பிடிக்க முடியாது. மரம் மலர் காடு மலை கடல் முதலியவற்றின் இயற்கை அழகுகளைக் கண்ணாடி போல உள்ளவாறே நம் கண்ணெதிரில் தோன்றச் செய்யும் தன்மை சங்க விலக்கியங்களிலே உள்ளது. நம்முடைய புறக் கண்ணுக்கு வெள்ளெழுத்துப் பார்வை என்னும் மங்கற்பார்வை வருதல்போல, அகக்கண்ணுக்கும் இப்போது வெள்ளெழுத்து வரும்படியான காலம் ஆயிற்று. அதற்குச் சங்க விலக்கியங்களே வெள்ளெழுத்துக் கண்ணாடிகள். நெடுமையில் நோக்கும் (தூர திருட்டிக்) கண்ணாடியும் அவைகளே; அக்கண்ணாடிகளை நமக்கு உதவிய பெருந்தகையாரே பெருந்தகையார்.

சங்க விலக்கியங்களிலே, கடம்பு, மரா என்னும் இரண்டு சொற்களே பயின்று வழங்குகின்றன. அவை இரண்டும் தமிழ்ச் சொற்களே. இரண்டு சொற்களும் செங்கடம்பு வெண்கடம்பு என்னும் இருவகைக் கடம்புகளுக்கும் பொதுவான பெயர்களாக வழங்கலாயின. செங்கடம்பு வெண்கடம்பு என்னும் பெயர் வேறுபாடு, பூவின் நிறத்தைப் பற்றியது. வெண்கடம்பு என்ற வழக்கு சிந்தாமணியிலே காணப்பட்டது.

அடம்பு என்னும் கொடியின் இலையும் பூவும் இப்படியிருக்கும் என்று, உவமைகாட்டி விளங்கவைத்தாற் போலவே, இந்தக் கடம்பு என்னும் மரம் இப்படியிருக்கும், செங்கடப்பமலர் இப்படி யிருக்கும், வெண்கடப்பமலர் இப்படி இருக்கும் என்று சங்க நூல்களிலே உவமை யெடுத்துக் காட்டி விளக்கப்பட்டுள்ளது. ஆயினும், இவ்வகைப் பொருள்களின் இயற்கையை ஆழ்ந்து நோக்கும் திறன் வாய்ந்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர்க்கும், இதிலே சிறிது தடுமாற்றம் உண்டுபோலும் என்று நினைக்க ஏது இருக்கிறது.

திருவாரூரில் தேர் வேலை செய்யும் தச்சருள் சிறந்தார் ஒருவர், கடப்ப மரவகையிலே மூன்று உள்ளன வென்கிறார். அவை 'வெண்கடம்பு' 'நீர்க்கடம்பு' 'மஞ்சட்கடம்பு' என்பன. வெண்கடம்பின் பூ வெண்மை, நீர்க்கடம்பின் பூ செம்மை, மஞ் சட்கடம்பின் பூ மஞ்சள் நிறம் அதாவது பொன்னிறம். மஞ்சட் கடம்பின் பலகையும் பொன்னிறமாயுள்ளது. அது மிக அழுத்த மானது. அது தேர் வேலைக்கு ஏற்றது. முன்னே கூறியபடி என்னுடைய நண்பர் 'அடப்ப மரம்' என்று காட்டியதை இத் தச்சர் தலைவர் 'நீர்க்கடம்பு' என்று சொல்லுகிறார். இந்த நீர்க் கடம்பையே செங்கடம்பு என்று சொல்லுவது வழக்கு என்றும் சொல்லுகிறார். மலர் வகைகளை நன்கு தெரிந்துகொண்ட அந்தணர் ஒருவரும் அத்தச்சர் தலைவர் சொல்லியபடியே சொல்வ தோடு நீபம் என்று வடமொழியில் சொல்லப்படுவது இந்த நீர்க் கடம்பே என்றும் சொல்லுகிறார்.

சங்க நூல் வழக்கிலே, வெண்கடம்பு பாலை நிலத்திற்கு உரிய தாகவும், நீர்க்கடம்பு என்னும் செங்கடம்பு மருதநிலத்திற்கு உரியதாகவும், காணப்படுகிறது. குறிஞ்சி நிலத்திற்கு உரியது மஞ்சட்கடம்பு என்று தெரிகிறது.

பாலை நிலத்திலே வெண்கடப்பமரம் வெயிற்காலத்திலே இலை யுதிர்ந்து, அதன் அடியில் இளைப்பாறவந்து அணுகிய வழிப் போக்காளிகளுக்கு, மேலே வலையைக் கட்டிவைத்தால் எப்படியோ அப்படி அரிய நிழலைக் கொடுக்குமென்று சொல்லப்படுகின்றது.

இதனை 'இலையின் மாஅத்த எவ்வம் தாங்கி, வலை வலந்தன்ன மென்னிழல் மருங்கின்' (பொருநாற்றுப்படை) என்பதனுல் அறிக.

வெள்ளைக்கடம்பின் பூ, நந்தியாவர்த்தம் என்பதன் பூப்போலவும், முசுண்டை என்பதன் பூப்போலவும் வலஞ்சுரிந்தது. வலஞ்சுரியாவது வலப்பக்கம் முறுக்குண்டது. கொத்தாக அலர்வது.

'சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மாஅத்து' குறுந். 22.

'வலம்புரி மாஅத்துச் சுரங்கமழ் புதுவீ' அகம். 83.

'நெடுங்கால் மாஅத்துக் குறுஞ்சினை பற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு' ஐங்குறுநூறு.

'அரும்பற மலர்ந்த ஆய்பூ மாஅத்துச்
சுரும்புசூழ் அலரிதைஇ' அகம். 257.

'செங்கான் மாஅத்த வாலிணர் இடையிடுபு' திருமுருகு.

'ஒருகுழை ஒருவன்போல் இணர்சேர்ந்த மாஅமும்' கலி 26.

'வேனிற் பூத்த மாஅங் கோதையோடும்' நாகைத்தேவாரம்.

'அவிழிணர்க் கருங்கால் மாஅத்த வைகுசினை வான்பூ'
ஐங்குறு. 331.

'பூதபூசிய புண்ணியத் தொண்டரே போலும்
மாதர் வெண்மலர் ஊழ்த்தநீண் மாமரத் தொகுதி'
காஞ்சிப்புராணம்.

இவற்றால் வெண்கடப்பமலரின் தன்மை அறிந்து கொள்க.

சிந்தாமணி ஆசிரியர், வெண்கடப்ப மலருக்குப் பந்தை ஒப்பிடுகின்றார்.

'வெண்கடம்பு பந்தணிந்தவே' கனகமாலை 94.

இனி மா என்பது கடப்பமரத்துக்கு ஓர் பெயர் ஆவதன்றி, ஆச்சாமரத்துக்கும் பெயர். யாமரம் என்றும் அதற்குப் பெயர். அதுவும் பாலைக்கு உரியதே. இதனை 'வேனிற் பாதிரிக் கூனி மா மலர்' என்னும் அகப்பாட்டிற் கண்டுகொள்க. அம்மரத்தின் அடி பொரிந்திருக்கும், உள்ளே வயிரமுள்ளது. பட்டை நார் பொருந்

தியது, தீஞ்சாறுள்ளது, இலைகள் கவையாக உள்ளன. இலையும் பட்டையும் யானை உண்ணும் குளகாக அமைவன. அதனல் யானை அம்மரத்தைக் கொம்பால் குத்திப் பிளந்தும் கிளைகளை முறித்தும் பட்டையையும் இலையையும் உண்ணும். இதனை

'மிசைமாஞ் சேர்த்திய கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கின் நீர்வரப் பொழித்துக்
களிறு சுவைத்திட்ட கோதுடைத்து' அகம் 257.

'வரந்புகா வருந்திய மாவெருத் திரலை
ஊற்கால் யானை ஒடித்துண்டெஞ்சிய
யாஅ வரிநிழல் துஞ்சும்' குறுந். 232.

'பொத்தில் காழ அத்த யாஅத்துப்
பொரியரை முழுமுதல் உருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி உயங்குநடைச்
சிறுகட் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப் பியானை கண்டனர் தோழி' குறுந் 255.

இவற்றுல் அறிந்துகொள்க.

'நேரொடுங்கலில் பகைபினை நீதியால் வெல்லும்
சோர்விடம் பெறு உணர்வினன் சூழ்ச்சியே போல
வாரொடும் தொடர்க வட்டொடும் மாமாக் குவட்டை
வேரொடும் கொடு கிரியென நடந்ததோர் வேழம்'

என வரைக்காட்சிப் படலத்தில் கம்பர் புனைந்து கூறியதும் அது.

எழென்னும் எண்ணிடைப்பட்ட மற்ற எல்லாப் பொருள்களோடும், இராமர் பகழியினல் ஊடுருவப்பெற்ற மாமாமும் இதுவேபோலும்.

இனிப் பெரும்பாணாற்றுப்படையிலே 'குறும்பூழ்வண்ணக் கடம்பின் நறுமலரன்ன, வளரிளம்பிள்ளை தழீஇ' என்பதன் உரையில் 'வண்ணக்கடம்பு' என்பதற்கு வெண்கடம்பு என்று பொருள் கூறப்பட்டு, காடைப்பறவையின் குஞ்சுக்கு வெண்கடப்ப மலரை ஒப்பிடப்பட்டிருக்கிறது. காடைப்பறவையின் குஞ்சு மஞ்சள் நிறமுள்ளது. மேலே புன்மயிர் பொருந்தியது வெண்கடப்ப மலரின் வடிவும் நிறமும் மேலே கூறப்பட்டபடி வேறய் இருப்

பதால், கார்டைப்பறவையின் குஞ்சுக்கு ஒப்பிட்டிருக்கும் வண்ணக் கடம்பு வேறென்று காணப்படுகிறது. மஞ்சட்கடம்பு என்பதன் பூ மஞ்சள் நிறமுள்ளதாய், கார்டைக் குஞ்சின் வடிவினையுடையதாய் மேலே துய்யினை யுடையதாய் இருக்கிறது. இது தனித்தனியாய்ப் பூப்பது. கொத்தாகவாவது மாலையாகவாவது பூப்பதில்லை. இது மதுரையிலே மிகுதியாக உள்ளது. இந்தப் பக்கங்களிலேயும் காந்துறை வாழ்க்கையை உடையது. ஆகையால் 'வண்ணக் கடம்பு' என்பது இந்த மஞ்சட்கடம்பே போலும்.

இனி முற் கூறிய வெண்கடம்பு மஞ்சட்கடம்பு என்னும் இரண்டிற்கும் வேறாகச் சிவந்த மலரையுடைய செங்கடம்பு ஒன்று உண்டென்பது 'எரிகான்றன்ன பூஞ்சினை மராஅத்த' என்னும் மலைபடுகடாத்தினால் அறியப்படும். நெருப்பைக் கக்கினாற்போல அம்மரத்தின் கிளைகள் நிறையப் பூக்கும் என்று சொல்லப்படுகின்றது.

'நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை
ஓவத்தன்ன உண்டுறை மருங்கின்
கோவத்தன்ன கொங்கு சேர்பு உறைத்தலின்' (சிறுபாண்)

என்பதனால், குளத்தின் ஓரத்திலே வளர்ந்தோங்கிய, செறிந்த நீர்க்கடம்பின் இணையொத்த மலர்மாலைகளின், இந்திரகோபத்தை (தம்பலப் பூச்சியை) ஒத்த இதழ்கள், உண்ணுநீர் எடுக்கும் துறையின் பக்கத்திலும் நீரிலும் சொரிந்து கிடத்தலால் படம் எழுதப் பட்டதுபோலத் தோன்றும் என்று புனைந்துரைக்கப் பட்டிருக்கிறது. அடப்பமரம் என்று சொல்லப்படுவதன் பூ வண்ணத்தாலும் வடிவாலும் தம்பலப் பூச்சியை ஒத்திருக்கிறது. தம்பலப் பூச்சியைப் பட்டுப்பூச்சி என்பது வழக்கு.

'கடம்பு சூடிய கன்னி மாலைபோல்' (சிந்தாமணி) என்பதனால், மாலையாகப் பூக்கின்றதோர் கடம்பு உண்டென்று அறியப்படும். 'ஆயிரு தொடைக்கும் கிளையெழுத் துரிய' என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில் பேராசிரியர், செந்தொடையும் செய்யுட்பொலிவு செய்யுங்கால், கொன்றையும் கடம்பும் போல நின்ற

வாறே நின்று தொடைப்பொலிவு செய்யும் என்று கூறியுள்ளார். இதனால் கடம்பு, கொன்றையைப்போல மாலையாகப் பூப்பது என்றும், அதன் மலர்கள் செவ்வண்ணம் உடையன என்றும் புலப்படும். இந்த அடப்பமாம் என்று சொல்லப்படுவது அவ்வாறே மாலையாகப் பூக்கின்றது.

அதுவுமன்றி, உருள்பூந்தண்டார் புரளும் மேனியன், (திருமுருகு) என்பதன் உரையில், தேருருளையைப் போலக் கடம்பு பூக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேரின் உருளையை ஒப்புக்கூறியது அளவைப்பற்றியது அன்று, வடிவைப்பற்றியதே. தேரின் உருளையை ஒப்பிட்டுக் கூறிய வெறொரு மலர், மகிழமலர். இதனைக் 'கோடு தையாக் குழிசியோடு ஆரங்கொளக் குயிற்றிய, ஒடு தேர்க்கால் மலர்ந்த வகுளம்' (சிந்தாமணி) என்பதனால் அறிக. இந்த மகிழமலரும், அடப்பமாம் என்று சொல்லப்படுவதன் மலரும், வடிவால் ஒப்புடையன. இக்கூறிய காரணங்களாலும், சங்க விலக்கிய வழக்கிலே அடப்பமாம் என ஒன்று வாராமையாலும், நீர்க்கடம்பு என்பதே அடப்பமாம் என்று மருவி வழங்கப்பெற்றது போலும்.

அடம்பு என்னும் மொழி வழக்கு முன்னர்த் தேவாரங்களிலே காணப்பட்டது. பின்னர் பெரிய புராணத்தில் வந்தது.

'கடம்பு சண்பகம் கன்னிகாரம் கனிகடுக்கை
அடம்பு வில்லமென் போதவிழ் நறுந்துகள் எங்கும்
இடம்பெறு வெயில்செய்தலின் பகலென இரவும்
நெடும் பசும்பொழிற் கயத்துறைநேமி இன்புறுமால்'

என்பது காஞ்சிப் புராணத்துச் செய்யுள். இதனுள் சிவந்தமலரையுடைய கடம்பிற்கு வேறாக அடம்பு என்பதன் மலர் கூறப்பட்டுள்ளது. மற்றை மலர்கள் எல்லாம் கோட்டுப் பூவையே குறிப்பதனால் இந்த அடம்பும் கோட்டுப் பூவென்றே கொள்ளவேண்டியதாயிருக்கிறது. இதைப்பற்றி மலர்பறித்துச் சாத்தும் அந்தணர் ஒருவரை வினவியதில் கதிர்காமம் என்னும் திருப்பதிப் பக்கத்திலே மிகப்பெரிதாகச் செம்மலர் பூக்கும் கடம்பு உள்ளது, ஆனால் அது தனித்தனி பூப்பதோ மாலையாகப் பூப்பதோ தெரியாதென்

றும், மஞ்சட்கடம்பையே செங்கடம்பு என்னும் வழக்கு உண்டென்றும் சொன்னார். அது எவ்வாறாயினும், இந்திரகோபமும் தேருருளையும் ஒப்புமையாதலும் மாலையாகப் பூத்தலும் அடப்ப மரம் என்று சொல்லப்படுவதின் பூவிற்கே ஒத்திருக்கின்றன.

அதுவன்றியும்' வடமொழியில் 'கதம்பமுகுள நியாயம்' என்பது ஒன்று. அதனால் கடம்பின் அரும்புகள் எல்லாம் ஒரு காலத்திலே மலரும் என்று அறியப்படும். அப்படி மலருந் தன்மை இந்த அடம்பு என்று சொல்லப்படுவதன் மலருக்கு உள்ளது. அவ்வாறு மலரும் தன்மை வெண்கடப்ப மலருக்கும் உள்ளது என்பது 'அரும்பறமலர்ந்த ஆய் பூ மாஅத்து' என்பதனால் அறியப்படும்.

ஆகவே (நீர்க்) கடம்பு என்பதே அடம்பு என்று மருவிவழங்கியது போலும் அதுவன்றித் திசைச்சொல் எனினும் அமையும். 'துறுநீர்க்கடம்பின்' என்புழிக் குறிக்கப்பட்டது நீர்க்கடம்பு என்பதோர் கடம்பின் வகையென உரையாது, நீர் என்பதைப் பிரித்து நச்சினார்க்கினியர் பொருள் கூறியது ஆராய வேண்டுவதொன்று. அவ்வாறே வண்ணக்கடம்பு என்பது வெண்கடம்பு என்றதும் ஆராயவேண்டுவது.

இனி, தேவாரங்களிலும், பெரிய புராணத்திலும், கண்ட அடம்பு என்பது இந் நீர்க்கடம்பென்று கொண்டாலும் தவறாகாது.

இத்துணையும் கூறியவாற்றால் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை நிலம் ஆனாற்போல, தமிழின் தன்மையும் கால அடைவில் திரிந்து, கடம்பு அடம்பாகி, அடம்பு குதிரைக் குளம்பாகிக் கரந்துறை வாழ்க்கை பெற்றது காண்க.

இன்னும் இவ்வாறே 'அனிச்சம், ஞாழல், காந்தள், செருந்தி, முதலிய மலர்களும் கரந்துறை வாழ்க்கையை எய்தினவாகும். அவற்றையெல்லாம் வெளிப்படுத்தி உலகில் நிலைபெறச் செய்வது தமிழ் மொழி வளர்ச்சியைக் கருதுவார் எல்லார்க்கும் கடமையாகும். தமிழ்க்கழகங்களின் தோட்டங்களிலே அவை வளர்க்கப்படுமாயின் மிக நன்றாம்.

திருவள்ளுவர் திருக்குறள்.

பாயிர ஆராய்ச்சி.

கடவுள் வாழ்த்து.

திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,

(முன் தொடர்ச்சி 237.)

ஒரு நூலின் தொடக்கத்தின்கண்ணே தோன்றும் கடவுள் வாழ்த்து "வழிபடு கடவுள் வாழ்த்து" எனவும், "ஏற்புடைக் கடவுள் வாழ்த்து" எனவும் இருவகைப் படும். "வழிபடு கடவுள் வாழ்த்து" என்பது நூலாசிரியன் இயற்றத் துணிந்த நூல் இனிது முடியுமாறு தான் வழிபடுங் கடவுளை வணங்குதல். "ஏற்புடைக் கடவுள் வாழ்த்து" என்பது நூலாசிரியன் இயற்றத் துணிந்த நூலை ஏற்போர் கடவுளை வாழ்த்துதற்காக நூலாசிரியனால் கூறப்படுவது.

"ஏற்புடைக் கடவுள் வாழ்த்து" என்பது நூலாசிரியன் இயற்றத் துணிந்த நூற்கு ஏற்புடைக் கடவுளை நூலாசிரியனே வாழ்த்தி வணங்குதல் என்று கூறலாகாதோவெனின், ஆகாது. என்னை? நூலியற்றும் அறிவும் ஆற்றலுமுடையான் தான் வழிபடு கடவுளையன்றிப் பிறிதொரு கடவுள் உண்டெனக் கொள்ளான், வாழ்த்தான், வணங்கானுகலான்.

'கடவுள் வாழ்த்துக்' கூறியே நூலியற்றுதல் வழக்கு. அவ்வாறே நம் திருவள்ளுவரும் கடவுள் வாழ்த்துக் கூறியே தமது நூலை இயற்றியிருக்கின்றனர். திருக்குறட் பாயிரத்தின் முதலாவது அதிகாரமாக இப்போது காணப்படுகின்ற கடவுள் வாழ்த்து நம் திருவள்ளுவர் கூறியதே என்று பலர் கூறுகின்றனர். கடவுள் வாழ்த்துக் கூறி நூல் இயற்றும் வழக்குப் பிற்காலத்தது

என்று தெரிகின்றது. தொல்காப்பியம் முதலிய தொன்னூல்களில் கடவுள் வாழ்த்துக் காணப்படாமையானும், கடவுள் வாழ்த்துக் கூறியே நூல் இயற்ற வேண்டும் என்று விதிக்கப்படாமையானும் இப் பிற்காலத்து வழக்குப்பற்றி இக் கடவுள் வாழ்த்துப் பாக்கள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டவை என்று கூறுதல் பொருந்தாது.

திருக்குறட் பாயிரத்தின் முதலாவது அதிகாரமாக இப்போது காணப்படுகின்ற "கடவுள் வாழ்த்துப்" பாக்கள் பத்தில் கடவுளுக்குக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களில் ஒன்றேனும் திருக்குறளின் ௩௬-வது அதிகாரமாகக் காணப்படுகின்ற "மெய்புணர்தல்" பாக்கள் பத்தில் கடவுளுக்குக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களில் ஒன்றற்கேனும் ஒத்ததாயில்லை. அதனைப் பின்னர்க் காட்டுதும். இக் கடவுள் வாழ்த்துப் பாக்களை "ஏற்புடைக் கடவுள் வாழ்த்துப் பாக்களாக நம் திருவள்ளுவர் கூறினர்" என்று கோடல் ஆகாதோவெனின், ஆகாது. என்னை? இவ்வுலகத்தில் வழங்கும் பல மதங்களில் எந்த மத நூலாகவும் திருக்குறளைத் திருவள்ளுவர் கூறிற்றிலர் என்பதனைப் புலவரெல்லாரும் ஒப்புக்கொள்ளுகிற படியால் ஏற்புடைக் கடவுள் வாழ்த்துக் கூறுவதற்கே காரணமில்லை யாகலான்.

"சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களால் மூன்றாகிய அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப் பொருள்களைக் கூறலுற்றார் அம்மூன்று பொருள்களால் மூவாகிய தேவரை வாழ்த்துதல் முறைமையாகலின் அம்மூவர்க்கும் பொதுப்பட இக் கடவுள் வாழ்த்தினைத் திருவள்ளுவர் கூறினார்" எனப் பரிமேலழகர் உரைத்திருப்பது அவர் புலமைத்திறமையுள் ஒன்றாகிய கற்பனைத் திறமையைக் காட்டுகின்றதேயன்றி உண்மையொன்றையும் நாட்டவில்லை. உரையாசிரியர் பலரும் புலவர் பலரும் கருதியதுபோலப் பரிமேலழகரும் இக்கடவுள் வாழ்த்துப் பாக்கள் திருவள்ளுவரால் கூறப்பட்டவை என்று கருதியபடியால் அப்பாக்களின் தன்மையை உயர்ந்ததாகக் காட்டக் கருதி மேலே கண்டவாறு கற்பித் துரைத்தனர் என்று தெரிகின்றது.

முதற் குறள்.

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

எழுத்தெல்லாம் அகர முதல என்பது உவமானம். உலகம் ஆதிபகவன் முதற்று என்பது உவமேயம். எழுத்தெல்லாம் அகர முதல என்பதற்குப் பொருள் எழுத்துக்களெல்லாம் அகர மாகிய எழுத்தை முதலாக உடையன என்பது. உலகம் ஆதி பகவன் முதற்று என்பதற்குப் பொருள் உலகம் ஆதி பகவனை முதலாக உடையது என்பது. இப் பொதுப்படையான பொருள் உரையாசிரிய ரெல்லாருக்கும் புலவரெல்லாருக்கும் ஒப்பமுடிந்த தொன்று.

எழுத்து "ஒலி எழுத்து" எனவும், "வரி எழுத்து" எனவும் இருவகைப்படும். வரி எழுத்து கண்ணினது காட்சிக்குப் புலப்படும் உருவெழுத்து. இக்குறட்பா ஆசிரியர் வரிஎழுத்தைக் குறித்து அகரம் எனவும் எழுத்து எனவும் கூறினர் எனின், உவமேயத்திலும் கண்ணினது காட்சிக்குப் புலப்படும் உருவுலகத் தையும் உருக் கடவுளையும் குறித்து ஆதிபகவன் எனவும் உலகு எனவும் கூறினர் என்றுவது அல்லது கண்ணினது காட்சிக்குப் புலப்படாத அருவுலகத்தையும் அருக் கடவுளையும் குறித்து உலகு எனவும் ஆதிபகவன் எனவும் கூறினர் என்றுவது கொள்ளல் வேண்டும். கண்ணினது காட்சிக்குப் புலப்படும் உருவுலகத்திற்குக் கண்ணினது காட்சிக்குப் புலப்படாத அருக்கடவுள் முதல் என்று கூறினு ரென்றுரைப்பது மிகையே யாகும்.

இனி ஒலி எழுத்துச் செவியினது காட்சிக்குப் புலப்படுவ தொன்று. இக்குறட்பா ஆசிரியர் ஒலி எழுத்தைக் குறித்து அகரம் எனவும் எழுத்து எனவும் கூறினர் எனின், உவமேயத்தி லும் செவியினது காட்சிக்குப் புலப்படும் ஒலி உலகத்தையும் ஒலிக் கடவுளையும் குறித்து உலகு எனவும் ஆதிபகவன் எனவும் கூறினு ரென்றுவது, அல்லது செவியினது காட்சிக்குப் புலப்படாத அரு வுலகத்தையும் அருக்கடவுளையும் குறித்து உலகு எனவும் ஆதி

பகவன் எனவும் கூறினரென்றுவது கொள்ளல்வேண்டும். செவியினது காட்சிக்குப் புலப்படும் ஒலி யுலகத்திற்குச் செவியினது காட்சிக்குப் புலப்படாத அருக்கடவுள் முதல் என்று கூறினர் என்றுரைப்பது மிகையே யாகும்.

உவமேயத்தில் காட்சிக்குப் புலப்படும் ஒரு வரி எழுத்து அல்லது ஒலி எழுத்து காட்சிக்குப் புலப்படும் மற்றைய வரி எழுத்துக்களுக்கு அல்லது ஒலி எழுத்துக்களுக்கு முதல் ஆதல்போலக் காட்சிக்குப் புலப்படும் உருவுலகத்திற்கு அல்லது ஒலியுலகத்திற்குக் காட்சிக்குப்புலப்படும் உருக்கடவுள் அல்லது ஒலிக்கடவுள் முதல் என்று உரைப்பதே குறளின் சொற்களுக்கு நேரிய பொருள் உரைத்தலாகும். அல்லாமல் உவமானத்திலுள்ள அகரச் சொற்கும் எழுத்துச் சொற்கும் காட்சிக்குப் புலப்படும் அகரம் எனவும் எழுத்து எனவும் உரைத்து, உவமேயத்திலுள்ள 'ஆதி பகவன்' என்னும் சொற்குக் காட்சிக்குப் புலப்படாத கடவுள் எனவும் 'உலகு' என்னும் சொற்குக் காட்சிக்குப் புலப்படும் உலகம் எனவும் உரைத்தல் சொற்குப் பொருள் உரைக்கும் முறையன்று. இவ்வாறு முறைபிறழ்ந்து பொருளுரைத்தாலன்றிப் பொருத்தமான பொருள்தாராத உவமானத்தையும் உவமேயத்தையும் நம் திருவள்ளுவர் கூறினர் என்பது அவர் புலவர் அன்று என்று கூறியதோடொக்கும். வரியெழுத்து அல்லது ஒலி எழுத்து என்ற ஒன்றையே குறித்து எழுத்து எனவும் அகரம் எனவும் கூறினர் எனின், அது குன்றக் கூறல் என்னுங் குற்றத்தின்பாற்படும். அக் குற்றத்தையுடையதொரு பாவை நம் திருவள்ளுவர் கூறினரென்றல் அவர் குற்றஞ்சான்ற புலவர் எனக் கூறியதோடொக்குமன்றே? 'முதல்' என்னும் சொல் உவமானத்திற்கோ உவமேயத்திற்கோ அவ்வளவு பொருத்தமான சொல்லன்று. முதல் என்பதைப் பெயர்ச் சொல்லாக வழங்குங்கால் அது மற்றொரு பொருளை உண்டாக்கும் ஒரு பொருள் என்றே பொருள்படும். "முதல் இலார்க்கு ஊதியம் இல்லை" என்பது சான்று. அகரத்திலிருந்து மற்றைய எழுத்துகள் பிறக்கின்றனவா? கடவுளிலிருந்து உலகம் பிறக்கின்றதா? இல்லை.

அகாம் மற்றைய எழுத்துக்களுக்கு ஆதாரம் எனலாம். அவ்வாறே கடவுள் உலகத்திற்கு ஆதாரம் எனலாம். அது பற்றியே நம் திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் "சார்பு" என்றனர்.

'எழுத்தெல்லாம்' என்பது தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும் மட்டும் அடக்கி நிற்கின்றதா? அல்லது தமிழ் எழுத்துக்க ளெல்லாவற்றையும் ஆரிய எழுத்துக்களெல்லாவற்றையும் மட்டும் அடக்கி நிற்கின்றதா? அல்லது உலகத்தில் வழங்கும் மொழிகளில் எல்லாவற்றினுடையவும் எழுத்துக்களெல்லாவற்றையும் அடக்கி நிற்கின்றதா? என்னும் ஒரு வினு எழுகின்றது. அது தமிழ் எழுத்துக்களெல்லா வற்றையும் அடக்கி நிற்கின்றதென்ருல், அச் சொல் அங்கு ஒருவாறு பொருந்தும் அப்பா தமிழ்ப்பாவாகலான். அது தமிழ் எழுத்துக்களெல்லாவற்றையும் ஆரியவெழுத்துக்க ளெல்லாவற்றையும் மட்டும் அடக்கி நிற்கின்றதென்ருல், அச்சொல் ஆங்குப் பொருந்தாது. அது உலகத்தில் வழங்கும் மொழிகளெல்லாவற்றி னுடையவும் எழுத்துக்களெல்லாவற்றையும் அடக்கி நிற்கின்றதென்ருல் அச் சொல் ஆங்குப் பொருந்தாது, அகாத்தை முதலாகக் கொள்ளாத மொழிகள் சில இவ்வுலகத்தில் வழங்குகின்றமையான். 'ஆதி', 'பகவன்' என்னும் சொற்கள் இரண்டும் ஆரியச் சொற்கள். ஒப்புயர்வற்றதொரு நூலைத் தமிழ்மொழியிற் செய்யப் புகுந்த தமிழ்ப் புலவனுன தமிழ் மகன் ஒருவன் தன் நூலின் முதற்பாவின்கண்ணே ஆரியச் சொற்கள் இரண்டைப் புகுத்தானென்றல் சைவ சமயத்தைப் போதிக்கப் புகுந்த சைவ ஒழுக்கமுடைய சைவ மகனெருவன் புலால் உண்டான் என்றலை யொக்கும்.

ஆதியும் பகவனும் தமிழ்ச் சொற்களே என்று கூறும் வாயடிக் கையடிக்காரருடன் போர்புரிய எனக்கு ஆற்றலில்லை. தமது தாயாகிய ஆதியையும் தமது தந்தையாகிய பகவனையும் குறித்துச் செய்ந்நன்றி யறிதலாக அச் சொற்களைத் தமது முதற்பாவின்கண்ணே நுழைத்தனர் நம் திருவள்ளுவர் என்றல் அவர் ஆதி யென்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் அந்தணனுக்கும்

பிறந்தவர் என்னும் பொய்க்கதையை மெய்க்கதையெனக் கொள்ளும் புல்லறிவாளர்க்கே சாலும். மற்றைப் பேரறிவாளர்க்குச் சாலாது என விடுக்க. இப்பா இவ்விரண்டு சொற்களைக் கொண்டிருத்தல் ஒன்றே இப்பா மேற்கூறிய பொய்க் கதையை மெய்யெனக் கொண்ட பிற்காலத்துப் புலவன் ஒருவனால் பாடப்பட்டதென்பதற்குப் போதிய சான்றுமென்பது எனது துணிவு. இனி உலகு என்னும் சொல்லையும் தனித் தமிழ்ச் சொல்லென்று சொல்வதற்கு இடம் இல்லை. பிறப்பு என்னும் வாய்பாட்டுச் சொல் ஒற்றில்லாமல் வெண்பாவின் இறுதிச் சீராக முடிந்து வருவது வழக்காயினும், அவ்வாறு அச்சீரில் வெண்பா முடிவது அவ்வளவு சிறப்பன்று.

மேற் கூறியவாறு சொல்லினும் பொருளினும் இழுக்குகள் பலவற்றைக் கொண்டுள்ள இப்பாவை நம் திருவள்ளுவர் இயற்றினார் என்றல் அவரது புலமையையும் பெருமையையும் பழித்ததேயாகும். அப் பழிப்பினைச் செய்யத் துணிந்தாரே இப்பா அவருடையதென்பர். ஏனையோர் இப்பாவை அவருடையதென்னார்.

(தொடரும்.)

உ

காவிரிப்பூம்பட்டினம். *

திரு. ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

"சோழவளநாடு சோறுடைத்து" "மண்ணுவதும் சோழ மண்டலமே" என்பன ஔவையார் அளித்த புகழ் மொழிகள். இப்புகழ்மொழிகளைப் பெற்ற சோழவளநாட்டிற்கு முற்காலத்திலே பல இடங்கள் தலைநகரங்களாக இருந்தன. அவற்றுள் ஒன்று காவிரிப்பூம்பட்டினம்.

இந்நகரத்துக்கு அக்காலத்திலே பட்டினம் என்பது பெயராக இருந்தது. இது, பொன்னி என்னும் காவிரிநதி கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்துள்ளதாதலின் காவிரிப்பூம் பட்டினம் என்ற பெயரைப் பெற்றது. இதற்கு இந்தக் காரணத்தினால் சங்க முகத்துறை, பொன்னித்துறை என்ற வேறு இரண்டு பெயர்களும் உண்டு. மேலும், இந்த நகரத்தில் உள்ளவர்கள் எந்தப் பொருளையும் வேண்டி வேற்று நகரத்துள் புகார் ஆதலினாலும் இந்த நகரத்தின் காவல் மிகுதியினைக் கண்டு பகைவர் அஞ்சிப் புகார் ஆதலினாலும் இந்தப் பட்டினத்திற்குப் புகார், பூம்புகார் என்ற வேறு பெயர்களும் வழங்கப்பட்டு வந்தன.

இக்காவிரிப்பூம் பட்டினம் அக்காலத்திலே புறநகர், அகநகர், இடைநகர் எனப் பிரிந்திருந்தது. உறுதியான அரண்களையும், அழகிய சோலைகளையும், நறுமணம் வீசும் நந்தன வனங்களையும் பிறவளங்களையும் உடையதாகவும் இருந்தது.

---

* இது, பண்டைத் தண்டமிழ் நூல்களிலே காணப்படுகிற செய்திகளை மாணவர்கள் எளிதில் அறிந்துகொள்ளத் துணையாமாறு சுருக்கித் தொகுத்ததாகும். இதனால், மாணவர்கள் அக்காலச் சோழ அரசர்களின் ஆட்சிச் சிறப்பையும், நகர அமைப்பையும் ஒரு வகையில் உணரலாகும்.

புறநகரில் நிலாமணி முற்றங்கள், பலகணிகள், உபரிகைகள் முதலியன அமைந்த வெண்சுதை தீற்றப்பெற்ற பல மாளிகைகள் இருந்தன. அழகிய அணிகலன்கள் முதலியன பெய்து நிரம்பி இருக்கும் பலசரக் கறைகள் இருந்தன. கூலவாணிகர் தமது வீதியில் இருந்து * எட்டுவகைக் கூலங்களையும் குவியல் குவியல்களாக வைத்துக்கொண்டு விற்பர். பெருங்குடி வணிகர்களது வீதியில் அணி, மணி, பொன், பவளம் முதலியன இவ்வளவு என எண்ணி அறிய முடியாதனவாய் விற்பனையின் பொருட்டுக் குவித்து வைக்கப்பட்டிருக்கும். சாலியர் தமது வீதியிலே பட்டினும் பருத்தியினும் எலி மயிரினும் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சித்திர ஆடைகள் பலவற்றை நெய்யாநிற்பர். பூ, சாந்தம், ஆரம், அகில், வண்ணம், சுண்ணம், விரை, நறியன பிற ஆகியவற்றை விற்று ஊதியம்பெற முயல்வோர் இத்தெருத் தோறும் திரிந்து விற்பர். பூ, பூங்கொத்து, வாடாமாலை பொய்க் கொண்டை, பறவை, விலங்கு ஆதியனபோன்ற கண் காட்சிப் பொருள்களைக் கிடை, கிழி முதலியவற்றால் கண்கவர் வனப்பை உடையனவாகச் செய்து விற்று ஊதியம்பெறும் நெட்டித்தொழிலாளர் ஒரு புறத்தே தங்கித் தொழில் நடத்துவர். தச்சர், கொல்லர், கன்னார், உருக்குத் தட்டார், பணித்தட்டார், சித்திரக்காரர், ஓவியக்காரர், காரகர், சிப்பியர், செம்மார் முதலிய கைத்தொழிலாளர்கள் ஒவ்வொரு புறத்திலே சேர்ந்து சேர்ந்து வாழ்வார்கள். அப்பம், பிட்டு, எண்ணெய் முதலியவற்றை விற்பவர்களும், உமணர், பரதவர், பாசவர் முதலிய குழுவினர்களும், பாணர் முதலிய குற்றேவல்புரியும் மக்களும், யவனர் முதலிய வேற்று நாட்டு மாந்தர்களும் சிற்சில இடங்களிலே தங்கி வாழ்வார்கள்.

அகநகரில் அரசர்வீதி, வணிகர்வீதி, ஆவணவீதி முதலியன பொலிவுபெற்று விளங்கும். வேளாளர், மருத்து நூல் வல்லோர்,

---

* நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி என்பன எட்டுவகைக் கூலங்கள். எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை என்றவற்றையும் சேர்த்துக் கூலம் பதினாறு வகையாம் என்பதும் உண்டு.

சோதிடம் வல்லோர் முதலியோருடைய இருக்கைகள் அமைந்திருக்கும். முத்தினைக்கோப்பவர், சங்கு வளையல்களைச் செய்வோர் ஆகிய தொழிலினர் தெருவும் ஒருபால் தோன்றும். குதிரைகளைப் பழக்குவோர், யானைப்பாகர், தேர்த்தொழிலாளர், போர்வீரர் ஆகியவர்களுடைய கூட்டம் ஒரு புறம் இருக்கும். இசைக் கருவியாளர், குற்றேவல் மகளிர் முதலாயினர் சிற்சில இடங்களிலே தங்கியிருப்பர்.

இடைநகர் என்ற பாகுபாடு பெருவழக்கில் இல்லை. புறநகர், அகநகர் என்ற இரண்டிற்கும் இடையிலுள்ள பொது இடமே இங்கே இடைநகர் என்னப்பட்டது. இந்த இடத்திலே * நாளங்காடி, அல்லங்காடி என்ற பெயருள்ள கடைவீதிகள் இருக்கும். சோலைகளிலுள்ள மரங்களையே தூண்களாகக் கொண்ட சிறு கடைகளும் உண்டு. அங்கே எப்பொழுதும் கொள்வோர் கொடுப்போரது ஓசை நிறைந்திருக்கும். ஒவ்வொரு பண்டகசாலையிலும் அடையாளக் கொடிகளும் அரசனது வெற்றிக்கொடியும் கட்டப்பட்டிருக்கும்.

நிற்க, இக் காவிரிப்பூம் பட்டினத்திலே ஐந்து மன்றங்கள் இருந்தன. அவை வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம் என்பன. இவற்றுள் வெள்ளிடை மன்றம் கள்வரை நடுங்கச் செய்யும் தொழிலினை உடையது. இலஞ்சி மன்றம் கூனர், முடவர், ஊமர், செவிடர், தொழுநோயாளர் முதலாயினர் முழுகினால் அவர்களை நல்லுடம்பு பெறுமாறு செய்யவல்ல பொய்கையை உடையது. நெடுங்கல் மன்றம் மருந்து ஊட்டப்பெற்றுப் பித்தானவர், நஞ்சினையுண்டவர், அராக் கோட்பட்டவர், பேய்க் கோட்பட்டவர் ஆகியவர்கள் வலம் வர அவர்களுடைய குறைபாடுகளைப் போக்கும் இயல்பினை யுடையது. பூதசதுக்கம் அரசனுக்குத் தீங்கு செய்ய எண்ணுபவர், கற்புநிலை தவறியவர், துறவிபோல நடிப்பவர்,

* நாளங்காடி—பகற்பொழுதிலே பண்டமாற்று நடைபெறும் இடம்.
அல்லங்காடி—இராப்பொழுதிலே பண்டமாற்று நடைபெறும் இடம்.

பொய்ச்சூளுரைப்பவர் ஆகியவர்களை அறைந்து கொல்லும் தொழிலினையுடைய பூதம் ஒன்றைப் பெற்றிருப்பது. பாவை மன்றம் அறத்தவிசோர், அரசன் முதலாயினோர் நீதி நெறியிலே தவறி நடப்பாராயின், அதைக்கண்டு வாய் பேசாது கண்ணீர் சொரிந்து அழும் இயல்பினைக் கொண்ட பாவை ஒன்றைப் பெற்றிருப்பது. இம்மன்றச் சிறப்புக்கள் இந்நகருக்கே உரியன.

இன்னும் இந்நகரிலே வச்சிரக்கோட்டம், வாசவன்கோட்டம், குமர கோட்டம், சிவன் கோயில், பலதேவர் கோயில், மால் கோயில் முதலியன சிறப்பொடு பூசனை முதலியவற்றிலே சிறிதும் குறைவின்றித் திகழ்ந்துவந்தன. அருகர், புத்தர் முதலாயினோர் பள்ளிகளும், திருக்கோயிலும் இருந்தன. இந்த இடங்களிலே துறவிகள் புராணங்களைப் படித்துக்கொண்டிருப்பார்கள். கல்வித்துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் பொழுது போக்கும் வித்தை விநோதங்களுக்குரிய பட்டி மண்டபங்கள் (கலாசாலைகள்) சிற்சில இடங்களிலே இருந்தன. நோயாளர்களை நோயற்றவர்களாகச் செய்யும் மருத்துவ சாலைகள், அகதிகளுக்கு உணவளிக்கும் அன்னசாலைகள், தவச்சாலைகள், விளையாட்டிடங்கள் முதலியனவும் பலவாக அமைந்திருந்தன.

இந்தப் பட்டினத்தின் துறை முகத்திலே சீனம் முதலிய பிற நாடுகளில் இருந்தும் வங்கம், ஈழம், குடகம், கொல்லம் முதலிய உள் நாட்டிடங்களிலிருந்தும் ஏற்றுமதி, இறக்குமதி செய்தற் பொருட்டுப் பல கப்பல்கள் வந்து தங்கி நிற்கும். இரவிலே கடலிலே வந்துகொண்டிருக்கும் கப்பல்களுக்குத் துறைமுகத்தைத் தெரிந்துகொள்ளத் துணையாமாறு கட்டப்பட்டிருந்த கலங்கரை விளக்கம் ஒன்றும் இருந்தது. சுங்கன் வரியை விதிக்கும் தொழிற்றலைவன் ஏற்றுமதி, இறக்குமதிகளின் பொருட்டு வரும் பண்டங்களின்மீது அரசனது புலிப்பொறியை அடையாளமாக வைப்பன். பன்னாட்டு வணிகர்களும் இனிது தங்கிச் செல்வதற்குத் தக்க வசதிகள் நிரம்பிய பல இடங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்வளவேயோ இந்த நகரத்தின் பெருமை! எல்லா வளங்களும் நிறைந்த இந்த நகரிலேதான் கற்புக்கரசியாராகிய கண்ணகி,

ஆதி மந்தி, மணிமேகலை முதலிய பெண்மணிகள் தோன்றினார்கள். இந்த நகரத்திலிருந்துதான் கரிகாற்பெருவளத்தான், கிள்ளிவளவன் முதலான பெரும் அரசர்கள் ஆண்டுவந்தார்கள். இளங்கோவடிகள், கூலவாணிகன் சாத்தனார், கடியலூர் உருத்திரன் கண்ணனார் முதலான புலவர் பெருமான்களாகிய தண்டமிழ்ச் சான்றோர்கள் இப் பட்டினத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

இத்துணைச் சிறப்புவாய்ந்து பரந்த புகழுடன் * அக்காலத்து விளங்கிய காவிரிப்பூம் பட்டினம் இக்காலத்திலே ஒரு சிறிய ஊராகத் தஞ்சாவூர் சில்லாவிலே கீழ்கடற்கரையிலே இருக்கின்றது. பிற்காலத்திலே பட்டினத்தடிகள்போன்ற முற்றத் துறந்த ஞானிகள் தோன்றுவதற்குச் சிறந்த இடமாக அமைந்த பெருமையையும் காவிரிப்பூம் பட்டினம் பெற்றுளது.

---

* சற்றேறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது.

உ

இலவசக் கட்டாயக் கல்வியின் இன்றியமையாமை.

திரு. E. R. அங்கப்பா அவர்கள், ஆசிரியன், மலையப்பட்டி.

ஓர் நாடு சிறந்தொளிர வேண்டுமெனின் அதன்கண் வாழும் மக்கள் ஒத்த கல்வியும் செல்வமும் ஓங்கப் பெற்றவராய் இருத்தல் வேண்டுமென்பதே ஆன்றோர் பலரால் ஒப்பமுடிந்ததோர் உண்மைக் கூற்றாம். இப் பொருள்களிரண்டும் விதை மரத்திற்கும் மரம் விதைக்கும் காரணமாதலேபோன்று ஒன்றற்கொன்று காரணமாயுள்ள ஒத்த தன்மை வாய்ந்தன வென்பதும் மறுக்கக் கூடா வுண்மையாம். ஆகவே ஒன்றிலதேல் மற்றொன்றும் நிலை பெறாதென்பது பெற்றாம்.

நம் நாட்டில் இவ்விரு இன்றியமையாப் பொருள்கட்குமே பஞ்சமெனின் நாட்டின் முன்னேற்றத்தை எங்ஙனம் எதிர் நோக்கல் கூடும்? 'பொன்னும் மணியும் புலவரும் செறிந்த தெங்கள் நாடு' எனப் புலவர் புராணத்தையும் புலவர் கதைகளையும் நோக்கிய வண்ணங் கூறலாமேயன்றி உண்மையில் நந்நாடு அந்நிலையுற்றிருக் கின்றதா வென்று பார்க்கின் உண்மைவிளங்கா நிற்கும்- என்னை? நம் ஊக்கக் குறைவான் ஒரு கூறும் கல்வியறிவின்மையான் மற்றொரு கூறும் நந்நாட்டை இந்நிலைக்கண் புகுத்தலாயின. ஊக்கக்குறைவை நீக்கும் பொறுப்பு நம்மாட்டேயுளது. கல்வியறிவின்மையைப் போக்கும் பொறுப்பும் நம்மாட்டேயுளதெனினும் தீக்கடைக் கோலால் தீயைப் பெருக்கலேபோன்று நம்மாட்டுள்ள பொறுப்பை நமக்குணர்த்தும் பொறுப்பு அரசாங்கத்தார் பாலே யுளதாகும். அன்னார் அதைச் சட்டத்தாற் செய்தலியலும். நம் பொறுப்பை நாமே யுணரற்பாலமல்லமோவெனிற், கூறுதும்.

இத்தஞ்சை ஜில்லாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள கள்ளர் வகுப்பார்களையும் ஆதித் திராவிடர்போன்ற ஒடுக்கப் பட்டார்களை யும் அறிவுறச் செய்வான்வேண்டிப் பல்வேறு கழகங்களும் நிலையங்களும் (Offices) நிறுவப்பெற்று அவற்றின் சார்பில் பல்வேறு கல்விக் கூடங்கள் நிறுவப்பெற்று மாணவர் பலர் இலவசக் கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றனர். ஆயினும் இவற்றான் அன்னவர்கள் அடையும் பயன் மிகச்சிறிதென்றே துணிதற்கிடனுளது. அன்னவர்கள் தம்மக்கட்குக் கல்விவேண்டுவது இன்றியமையாததென வுணரமாட்டாராய் அவர்களைக் கல்விக் கூடங்கட் கனுப்பாது, தம் வறுமைப் பிணியைப் போக்குவான் வேண்டிப் பல்வேறு தொழில்கட்கு மனுப்பிவிடுவதோடு ஆசிரியர்கட்கும் அல்லல் விளைக்க முற்படுகின்றனர். 'எம்மக்கள் கையெழுத்துப் போடக் கற்றுக்கொண்டாற் போதும், அவர்கள் போய்த் தாசில் பண்ணப் போகின்றனரா'? எனக் கழறுகின்ற முழுமூடமக்கள் ஈண்டிருக்க இவ்விலவசக் கல்வித் திட்டம் என் செயவல்லது! இவற்றை ஆசிரியர்கள் தம் மேலதிகாரிகட் கறிவிப்பின் அன்னவர்கள் ஆசிரியர்கள் ஊக்கக் குறைவான் இக்குறைகள் காணற்கிடனு யிற்றென்றும் மாணவர் வரவைப் பெருக்கிக் கல்விக் கூடத்தை முற்போக்கடையச் செய்யாவிடின் ஆசிரியர்கள் தம் தொழிலை விடுத்தேக நேருமென்றும் சுற்றறிக்கைகள் (Circulars) விடுக்கின்றனர். அந்தோ! என் செய்வர் ஏழை யாசிரியர்கள்! அவர்கள்பால் மாணவர்க்குக் கற்பித்தலேயன்றிப் பிறிதோர் அதிகாரம் இன்மையின் மாணவர்களைத் தவறாதனுப்புமாறு பெற்றோர்களை மன்றாடி வேண்டக் கடமைப்பட்டுளார். பெற்றோர்கள்பாற் கடுகளவு கடுமொழியேனும் கூறின் அவற்றான் ஆசிரியர்கள் அடையும் பயனை ஆண்டவனே யுணர்வான். 'நன்மை செயுங்கால் நான் கிடையூறு' என்னும் பழமொழி இன்னார்பாலே விளக்கமடையா நிற்கும். கல்விக்கூடப் பார்வையாளர்களும் (Inspectors) இவற்றையுணராராய் ஆசிரியர்கள்பாலே குற்றஞ் சுமத்த முற்படுவாரா கின்றனர்.

இவற்றிற் கஞ்சி ஏழை யாசிரியர்கள் தம் திங்கட் கணக்குகளில் (Monthly returns) மாணவர்கள் மென்மேலும் வந்து

பயின்றிருப்பதாகக் குறித்தனுப்புவதும் இவற்றைக் கண்டு அதிகாரிகள் தங்கடமைகள் நிறைவேறின வெனக் கனவு கண்டு கொள்வதுமாயுள்ளதே யன்றிக் கடுகளவு பயனும் இல்லா தொழி கின்றது. ஆகவே இம் முயற்சிகள்யாவும் விழலுக் கிறைத்த நீரையே ஒக்கும்; பயன்றாவென விடுக்க.

'பெற்றோர் தம் (ஆண் பெண்) மக்களை இத்தனை யாண்டி லிருந்து இத்தனை யாண்டு வரைக்கும் கல்விக் கூடங்கட்கனுப்பத் தவறின் இன்ன தண்டனை' என அரசாங்கத்தார் ஓர் சட்டம் செய்வாராயின் சட்டத்திற்கஞ்சியேனும் மக்களைப் பெற்றோர் பள்ளிக்கனுப்பத் தவறார். மேற்கண்ட அல்லல்கள் யாவும் பகலவன் முன்னர்ப் பனியெனவோடும். நம் நாட்டில் படியாதார் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து (95 per cent) என்ற குறிப்பும் தலைகாட்டாதோடும் என்பது உறுதி.

ஆகவே கட்டாய இலவசக் கல்வித்திட்டமொன்றே பய னளிக்கற்பால தென்பது பெற்றும். இம் முறையிற் கல்வித் திட்டத்தை யமைக்குமாறு அரசாங்கத்தாரை வற்புறுத்த ஆங்காங் குள்ள சங்கங்களும், சீர்திருத்தக்காரர்களும், தலைவர்களும், தேசீயவாதிகளும், சமயத்தொண்டர்களும் முதலில் முனைந்து முயற்சிப்பாரா? இத்திட்டம் விரைவில் எய்துமாறு இறைவன் திருவருளைச் சிந்திப்போமாக.

உடல் இயலும் உடல் நல வழியும்.

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T.,
உரத்தநாடு.

(முற்றொடர்ச்சி 192-ம் பக்கம்.)

VII. படலம்

கழிவாய்கள்.

தோல்:—நம்முடலை மூடிக்காத்துக்கொண்டும், ஊறு (தொடுதல்) என்னும் உணர்ச்சியைக் கொடுத்துக்கொண்டும், நம்முடற் சூட்டு நிலையை மாறாது வைத்துக்கொண்டும், குண்டிக்காய்க்கு உதவியாயிருந்து அது நீக்கும் கழிபொருள்களையெல்லாம் நீக்கிக் கொண்டுமிருக்கிற ஓர் அருமையான உறுப்பு தோலாகும். இதைப்போல் முழுமீட்சி (Perfectly Elastic) யுடையபொருள் உலகில் வேறொன்றுமில்லையெனின் இதன் பெருமை மிகுந்ததே. இதனாற்றான் நாம் நம் உடலை அசைக்கவும், நீட்டவும் முடக்கவும் முடிகின்றது. இன்றேல் நாம் ஓர் இருப்புச்சட்டை யணிந்தவர் போல் திமிர் பிடித்திருக்க வேண்டியதுதான். இது மிகுதியாய் நீளக்கூடியதென்பதை நீர்த்தங்கல் (Dropsy) என்னும் நோயுண்டாய் உடல் மிகப்பருக்கும்பொழுது இது இடங்கொடுப்பதைக் கொண்டறியலாம். இது மிகுதியாய்ச் சுருங்கவுங்கூடும். எனினும் சுருக்கத்திற்கு ஓர் அளவுண்டு. அவ்வளவிற்கு மேற் சுருங்க நேரின் தோலில் பலமடிப்புகளுண்டாகின்றன. இதனாற்றான் கிழவர்களின் தோல் சுருங்கியிருக்கிறது. நம் தோல் இருபங்குகளாலாயது; ஒன்று மேற்றோல் (Epidermis); மற்றொன்று கீழ்த்தோல் (Dermis). நாம் சுட்டுக் கொள்வதினால் கொப்புளம் உண்டாகும்பொழுது நம்மேற்றோல் படலாக எழும்பிவிடுகிறது.

மேற்றோல்:—இது உயிரற்றது; இவ்வாறிருப்பதினாற்றான் இது கீழ்த்தோலைத் தூசிகளினின்றுங் காப்பாற்றமுடிகிறது. இது

மிக மெலிந்திருக்கும் இடமாகிய மூட்டுகளிலுங் கண்ணிரப்பை போன்ற விரைவுடன் நகருமிடங்களிலும் $\frac{1}{200}$ அங்குலம் தடித்தும், ஏனைய தடித்த விடங்களில் $\frac{1}{20}$ அங்குலந் தடித்தும் உள்ளங்கை கால்களில் இன்னும் மிகவுந் தடித்தும் இருக்கிறது. இதன் அடிப் பங்கின் கூடுகளிலுள்ள நிறப்பொருளே (Pigments) மக்களின் சிவப்பு, கறுப்பு, மஞ்சள், வெள்ளை முதலிய பல நிறங்களுக்கு அடிப்படையாகும். உடலெங்கும் கீழ்த்தோல் மேடுபள்ளமுடையதாயிருந்தும் மேற்றோல் அதை நிரப்பி ஒத்தபடி பண்ணுகிறது. ஆனால் உள்ளங்கை கால்களிலோ கீழ்த்தோலின் மேடுபள்ளங்களுக்கிசையவே மேற்றோலு மிருக்கிறது. இதனால் பல கீறுகள் (இரேகைகள்) இருக்கின்றன. இவை ஒருவனுக்கிருப்பதுபோல் மற்றொருவனுக்கு மிருக்காவாகையால் தக்க அடையாளங்களாகித் திருடர்களைக் கண்டுபிடிக்கவும் உதவுகின்றன. இதனாற்றான் கையெழுத்துப் போடத் தெரியாதவரின் அடையாளமாகத் தேய்ந்திராத அவர் இடதுகைக் கட்டைவிரலின் மடிப்புகளைக் குறியாக எடுத்துக் கொள்ளுகின்றனர். இம்மேற்றோலில் குருதிக் குழாய்களில்லை யாதலின் ஊசியை ஊடே செருகினுங் குருதி வெளிப்படாது. இதன் மேற்பரப்பில் நரம்புகளுமில்லை யாதலின் ஊசியைச் செருகுகையில் வலியும் இருக்காது. இதன் கீழ்ப் பங்கில் மிகச் சில நுண் நரம்புகளே யிருக்கின்றன. இம்மேற் றோலே கை கால்களின், விரல் நுனிகளைக் காப்பாற்றும் பொருட்டுப் படைக்கலமாகப் பயன்படவும், உகிர்களாகவும், தலையையும் ஏனைய பல விடங்களையுங் காப்பாற்ற மயிராகவும், வாயின் வேலை நன்றாய் நடக்க மடிப்புற்றுப் பற்களாகவும், விலங்குகள் பறவைகளிடத்துக் கூரிய உகிர்கள், வளைந்த உறுதியான மூக்கு, இறக்கையாகவும் வளருகின்றது எனின் நீங்கள் வியப்புறுவீர்கள்.

கீழ்த்தோல்:—இது பலப்பல குருதிக் குழாய்களும் நரம்புகளும் நிறைந்த இணைத் தசைநார்களால் (Connective Tissues) ஆயது. இதுதான் விலங்குகளிலிருந்து உரிக்கப்பெற்று, பதன் செய்யப்பெற்று செருப்பு முதலிய பலபொருள்களாகப் பயன் படுத்தப்படுகிறது. பாடஞ் செய்கையில் உயிரற்ற பங்காகிய

மேற்றோல் சுரண்டப்பட்டு உதிர்ந்து விடுகிறது. இக்கீழ்த்தோலின் மேற்பக்கம் மேடுபள்ளமாக இருக்கிறது. இம்மேடுகளாய பலபருக்கள் (Pabillac) ஒரு போகாக (Parallel) இருக்கின்றன. இவற்றில் ஒவ்வொன்றும் குவிந்த (Conical) வடிவுடையன. இவற்றுள் சிலவற்றுள் மயிர்க் குழாய்ப் பின்னல்களும் (Plexus of blood Capillaries) சிலவற்றுள் தொடு முட்டைகள் (Touch Corpuscles) என்னும் ஒருவகை நரம்பு நுனிகளுமிருக்கின்றன. இம்முட்டைகள்தாம் ஊறு (தொடுதல்) என்னும் உணர்ச்சிக்கு முதலாகும். (இவற்றின் செயலை நரம்புக்கூட்டம் என்னும் படலத்துள் விளக்குவாம்) இக்கீழ்த்தோலின் கீழுள்ள பங்கு தளர்ந்த இணைத் தசைநார்களாலாயதால் தோலை நெருடி மேலிழுக்கும்போது இதுவுஞ்சேர்ந்து வருகிறது. இதில் கொழுப்புக் கூடுகள் கூட்டங் கூட்டமாக இருக்கின்றன. இவையன்றி இதில் வேர்வைப்பைகளும் * இருக்கின்றன. இதன் கீழேதான் தசைகளிருக்கின்றன.

வேர்வைப்பைகளும் அவற்றின் வேலைகளும்:—நமது கையைப் பெருக்கிக் காட்டுங் கண்ணுடிக்கீழ் வைத்துப் பார்ப்போமாயின் பல துளைகள் வரிசை வரிசையாகப் புலப்படும். இவையே கீழுள்ள வேர்வைப் பைகளின் வாயில்களாகும். இவ்வாயிலின் வழிச் செல்லின் மேற்றோல், கீழ்த்தோல் வழியே ஊடுருவிச்செல்லும் ஓர் வளைந்த குழாய் சுருட்டிச் சுருட்டிக்கொண்டு திறப்பில்லாமல் முடிவதைக் காணலாம். இச்சுருட்டே வேர்வைப்பை. இப்பையின் சுவரிலுள்ள கூடுகள் தமக்கருகிலுள்ள மயிர்க்குழாய்களுள் வருங் குருதியிலிருந்து வேர்வையைப் பிரிக்கின்றன. இவ் வேர்வை இக்குழாயின் வழியே மேற்செல்லுகிறது. ஒவ்வொரு குழாயும் சராசரி காலங்குல நீளமும், ·04 அங்குல குறுக்குமுடையன. இவை நம்தோலின் மேற்பரப்பில் உள்ளங்கைபோன்று மிகுத்திருக்குமிடத்து சதுர அங்குலம் ஒன்றில் 3000 விழுக்காடும் முதுகுபோன்று குறைந்திருக்குமிடத்து 300 விழுக்காடும் இருக்கின்றன. நமது உடலின் 19 சதுர அடியிலும் ஏறக்குறைய

* இப்பைகள் இவ்விணைத் தசைநார்களுக்கு மேலுள்ள கீழ்த்தோலின் கீழ்ப்பங்கிலுமிருக்கின்றன.

2,400,000 பைகளிருக்கின்றன. இவற்றால் பிரிக்கப்பெறும் வேர்வை சிறிது காரமான (Alkaline) நீர்ப் பொருளாம். இதில் சிறிது சோற்றுப்பும், சிறிது கரிக்காற்றும், மிகச் சிறிது மூத்திர உப்புமிருக்கின்றன. இத்துடன் மயிர்ப்பைகளின் கழிநீர் (Secretion) சேர்வதால் இதன் புளிப்புத் தன்மை வேர்வைக்கு முண்டாகிறது. இவ்வேர்வை இடைவிடாது சிறுகச்சிறுக உண்டாய்க் கொண்டேயிருக்கிறது. இது நமக்கு நேரே புலப்படுவதில்லையாதலின் இதற்குப் புலப்படா வேர்வை (Insensible Perspiration) என்று பெயர். எனினும் நாம் குளிர்ந்த கண்ணாடியையாவது, வழவழப்பான மண் பொருளையாவது (உலோகம்) தொடும்பொழுது அதில் ஒட்டிக் கொள்வதால் நமக்குப் புலனும். ஆனால் இறுக்கத்திலும், வெயில், நெருப்பின் முன் நிற்கையிலும், முறுக்காக உடற்பயிற்சி செய்யும்பொழுதும் வியர்வை மிகுத்து ஒழுகுவதால் அதற்குப் புலப்படும் வேர்வை (Sensible Perspiration) என்று பெயர். புலப்படா வியர்வையைப் போல் புலப்படும் வியர்வைவேண்டுமாயின் 40 பங்கு மிகவுங்கூடும். இவ்வாறு மிகுவதாலுங் குறைவதாலும் நம்முடற் சூடு எப்பொழுதும் ஒரே நிலையிலிருக்கிறது. எவ்வாறெனின் குருதி எவ்வாறேனுஞ் சூடடைந்து மூளைக்குச் சென்றதும் அது சிறிது அளவான சூட்டு வேற்றுமையையும் உணர்ந்து எண்ணிறந்த வேர்வைப்பைகளையும் சூட்டின் அளவிற்குத் தக்கபடி சுறுசுறுப்பாய் வேலைசெய்யக் கட்டளையிடுவதன்றி அப்பைகளுக்குச் செல்லுங் குருதியையும் தக்கபடி மிகுதிப்படுத்த மயிர்க்குழாய்களையும் பெருக்கும்படி செய்கிறது. உடனே வேர்வை குருதியிலிருந்து பிரிக்கப்பட்டு மிகுதியாக வெளிப்படுகிறது. இவ்வேர்வை ஆவியாக மாற உடற் சூட்டையே பயன் படுத்துவதால் உடலின் வெப்பந் தணிகிறது. இதற்குமாறாகக் குருதி குளிரடைந்தால் வேர்வையும் மிகக் குறைந்து சூடு குறைபடாமலிருக்கிறது. இவ்வாறு நம்முடற் சூடு எப்போதும் ஒரே நிலையாக 98·6° F லேயே இருக்கிறது. இதுதான் நம்முடல் நலமுற்றிருக்கையில் வாய் அல்லது அக்குளில் கண்டு பிடிக்கப்படுகிற சூட்டு நிலையாகும். உள்ளுள்ள குருதி இதனினும் 2° F கூட விருக்கிறது. மிகுதியான பொருள் திரிபு (Chemical Change) நடக்கு

மிடங்களாகிய கல்லீரல், மூளை, தசைகள் ஆகியவை இன்னும் மிகுந்த சூடுடையன; மேற்பரப்பிலிருக்கிற தோலிலிருந்தும், ஓரங்களாகிய மூக்கு நுனி, கை விரல்கள், காலடிகளிலிருந்தும் சூடு மிகுதியாக வெளிப்படுவதாற் சிறிது குளிர்ந்துமிருக்கின்றன. தசைப்பயிற்சி முறுக்காக நடக்கும்பொழுதும், வெப்புநோயுறும் பொழுதும் 1. அல்லது 2. சூடு ஏறி அனற்றலுண்டாகிறது. இவ் வனற்றல் தோலிற்குச் சூட்டுக் குருதி மயிர்க்குழாய்களின் வழியே மிகுதியாய்ப் பாவுவதால் ஆங்குள்ள நரம்பின் ஓரங்களிற் பட்டுப் புலனாகிறது. ஆனால் வெளியிடங் குளிர்ந்திருக்கும்போது இம் மயிர்க் குழாய்கள் சுருங்கிக் குருதி குறைந்து குளிர் உணர்ச்சி உண்டாகிறது. இதனால் குளிரும்பொழுது தோல் வெளுத்தும் அனற்றும்பொழுது சிவத்தும் வருகிறது. இவ்வழியன்றி வெளிக் காற்றிலுள்ள நீராவியைப் பொறுத்தும் நாம் இறுக்கத்தையும் குளிரையும் உணருகிறோம். எடுத்துக் காட்டாக, மழை வருமுன் காற்று சூடாக இல்லாவிடினும் வேர்க்கிறது. ஏனெனில் அப் பொழுது காற்றில் நீராவி மிகுத்திருப்பதால் நம்முடலின்வேர்வை ஆவியாக மாறுவதில்லை, அதனால் நம்முடற் சூடு குறையாது அனற்றுகிறது. இன்னுமொரு வழியாலும் நாம் சூட்டுணர்ச்சியை அடைகிறோம் நாம் குளிரை மாற்றப் போர்த்துக் கொள்ளும் போது போர்வை சூடுண்டாக்குவதால் குளிர் நீங்குவதில்லை; ஆனால் போர்வை கெட்ட சூடு செலுத்தி (Non-Conductor) ஆத லின் உடற் சூட்டை வெளி விடாமற் றடுப்பதாற்றான் குளிர் அடங்குகிறது.

நம்முடற் சூடு வெளிப்படும் வகையும் அளவும்:—நம் முடற் சூட்டில் நூற்றிற்கு (1) 77 பங்கு வெளிக்காற்றினால் கவரப்படுவ தினாலும், வியர்வையை ஆவியாக்குவதினாலும் நீங்குகிறது. (2) 20 பங்கு நுரையீரலுக்கு வரும் நீரை ஆவியாக்கி மூச்சுடன் வெளிப் படுத்துவதிற் செல்கிறது. (3) எஞ்சிய 3 பங்கு சிறுநீர், எருவுடன் வெளிப்படுகிறது; ஒரு சிறிது நாம் உட்கொள்ளும் குடி, உணவு களைச் சூடு படுத்தவும் பயன் படுகிறது.

மயிர்கள் :—இவை மேற்றோல், உட்டோலுள் நெடுந்தொலைவாக வளர்ந்து செல்வதாலாகும் இடுக்குகளாலாய மயிர்த்துளைகளில் இருக்கின்றன. ஒவ்வொரு பையினடியிலும் ஒவ்வொரு உட்டோலின் பரு இருந்துகொண்டு மயிரை வளர்க்கச்செய்கிறது. இதனால் மயிர்கள் வேருடன் பிடுங்கப்படினும் அவை உட்டோல் பருக்களிலிருந்து மறுபடியும் முளைத்து வருகின்றன. ஆதலின் மயிரும் ஒருவகை மேற்றோற் கூடுகளாலானவையே. மயிரின் வெளிக் கூடுகளிலுள்ள நிறப்பொருளே அதைக் கறுப்பும், செம்பட்டையும் ஆக்குகிறது. இந்நிறப்பொருள் உண்டாக்கப் படாவிடின் நரைக்கிறது. ஒவ்வொரு மயிரையும் ஒட்டி உட்டோலிலுள்ள மயிர்ப்பைகள் (Sebaceons glands) உண்டாக்கும் ஓர் வகை நெய்ப்பொருள் மயிர்த் துளைகளின் வழியே வெளிப்பட்டு மயிரையுந் தோலையும் வழுவழுப்பாக்குகிறது. இந்நெய்ப்பொருள் நீரை உள்விடுவதில்லை. உள்ளங்கை, கால்களில் இப்பைகளில்லையாதலின் நீரில் நெடும்பொழு திருப்பின் ஊறிப்பெருத்து வெள்ளையாகிறது. மயிர்கள் மிகச்சிறுத்திருக்கிற மூக்கு, கன்னம், பிடரி முதலிய விடங்களில் இப்பைகளின் வாய்கள் தோலின்மேற் பரப்பிலேயே திறந்திருக்கின்றனவாதலின் இப்பைகள் எண்ணெய் அழுக்கால் நிறம்பிக் கரிய பருக்களாக முளைக்கின்றன. இவை வாராமற்றடுக்க நன்றாய்க் கழுவுதலும், அடிக்கடி குளிர் நீரால் தோலை நனைத்து இப்பைகளை ஊக்கப் படுத்துவதுமே தக்க வழிகளாம்.

மயிர்களின் வேலைகள் :—(1) மயிர்கள் ஊறு (தொடுதல்) என்னும் உணர்ச்சியை உண்டாக்கத் தோலுக்கு உதவியாயிருக்கின்றன. ஒருவன் தோலைத் தொடாது மயிரைமட்டுந் தொட்டாலும் அவனுக்கு அவன் தொடுதல் புலப்படும். பூனைமுதலிய விலங்குகளின் மீசை இவ்வுணர்ச்சியால் அவைபோகும் வழியின் அகலம் போதுமானதா அன்றா என்றுணர்த்துகின்றது. (2) உலகின் சூட்டுநிலை மாறுதலாலுண்டாங் கேடுகளிலிருந்து தோலை, மயிர் காப்பாற்றுகிறது. (3) உடலின் மென்மையான பங்குகளை மயிர்கள் தூசியினின்றுங் காப்பாற்றுகின்றன. மூக்கு மயிரின் பயனை

முன்பு கற்றீர்கள். கண், புருவம், இமை இவைகளிலுள்ள மயிரும் இவ்வாறே கண்ணைக் காப்பாற்றுகின்றன.

மயிர் நலவழி :—(1) மயிர்களைப் பிடுங்கினும், வெட்டினும் அவை முளைக்கும் இயல்புடையனவேனும் காற்றோட்டமில்லாத தொப்பிகளையும் தலைப்பாகைகளையும் எப்பொழுதும் அணிவதால் மயிர்கள் சூடுற்று, குருதிக் குறைவால் விழுந்து விடுவதால் மண்டை வழுக்கையாகி விடுகிறது. இது வாராதிருக்க அவைகளைக் கூடியவரை எடுத்துவிடலும், மண்டைத்தோலை நன்றாய்த் தேய்ப்பதுவும் நன்றாம். (2) இக்காலத்தவரிற் பலர் மேனாட்டு முறையைப் பின்பற்ற விரும்பித் தலை மயிரை வெட்டி அழகைக் கொடுப்பதற்காகச் சளிக்க எண்ணெய் தடவி அவற்றை அழகுள்ள சுருள்களாகச் சீவி விடுகின்றனர். இவ்வெண்ணெய் கூடிய விரைவில் கெட்டு ஒருவகைச் சிக்கு நாற்றத்தை உண்டு பண்ணுவதன்றி வெளியிலுள்ள தூசிகள் யாவும் படிவதற்கு ஓர் நிலைக்களமாவதால் உடற்கும் மயிர்களுக்கும் மிகக்கெடுதியே. ஆதலின் மேனாட்டாரைப்போல் எண்ணெய் தடவாது சீவி விடவேண்டும்.

உகிர்கள் :—இவை இருபங்குகளாலாயவை. ஒன்று தசையுடன் ஒட்டியிருப்பது; மற்றையது ஒட்டாதது. ஒட்டியிருக்கும் பங்கு வளர்ந்துகொண்டே வந்து கடைசியில் ஒட்டாத பங்காகிறது. இவ்வாறு ஒட்டியிருக்கும் பங்கு அடியிலிருந்து நுனிவரை வளர நான்கு திங்கள்கள் ஆகின்றமையின் ஆண்டு ஒன்றிற்கு மும்முறை புதிப்பிக்கப்படுகிறது. ஒட்டாத பங்கு அடிக்கடி அழுக்குச் சேரும் இயல்புடையதாதலின் அதை அடிக்கடி களைதல் நன்று. இதை விரல்நுனிகளின் வளைவுக்குத் தக்க வளைவாகக் களையாது கண்டபடி கடித்தும் பிய்த்தும் உள் உகிரையுங்கெடுப்பது மிக்க மதியின்மையாம். இவ்வுள் உகிர்தான் பழங்களை உரிக்கவும், முடிச்சவிழ்க்கவும், எழுதவும் பல நுண்ணிய வேலைகளைச் செய்யவும் விரல் நுனிக்கு உறுதி கொடுக்கிறது. ஆதலின் இதைக் காப்பாற்றவேண்டியது இன்றியமையாததே.

உடை :—முன்னேற்றம் (நாகரிகம்) முதிர முதிர உடையும் மிகுந்துகொண்டே வருகிறது. இதனால் நம்மியற்கை யுடையாகிய தோலின் வலிவும் வரவாக் குன்றிச் சிறிது பொழுது ஆடையற்றிருப்பினும் நீர் கொள்ளல், வெப்புநோய் முதலியன உண்டாகின்றன. இதற்கு மாறாக எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக ஆடையணிகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நன்று. மிகக் குளிர்ந்த நாடாகிய கனடா (Canada) நாட்டு ஆட்சியாளர் (Governer) ஒருவர் அந்நாட்டுப் பழமக்கள் தலைவரொருவரைத் (Indian Chief) தம்மை வந்து பார்க்கும்படி சொல்லியனுப்பினர். அவர் வரும் பொழுது குளிர்காலமாதலின் ஆட்சியாளர் பல மயிர் (கம்பளம்) உடைகளை யணிந்து கையை இறுக்கிக் கட்டிக்கொண்டு, நடுக்கலுடன் நெருப்பின்முன் ஓரறையுளிருந்தார். ஆனால் அத்தலைவரோ தம் அம்மணத்தைமூட இடுப்பில் மட்டும் சிற்றுடை ஒன்றை யணிந்து கையை வீசிக்கொண்டு வெளிப்புறத்திருந்து வந்தார். உடனே ஆட்சியாளர் பெரும் வியப்புற்று "இக்கொடிய குளிரை ஆடையின்றி எவ்வாறு தாங்குகிறீர்?" என்று வினவினர். அதற்கு அத் தலைவர் புன்னகை புரிந்து "நீர் உம் மூஞ்சியை மூடாது எவ்வாறு குளிரைப் பொறுக்கிறீர்?" என்று எதிர் வினவினர். உடனே ஆட்சியாளர் "அது நெடுநாட் பழக்கமாகும்" என்றார். "இதுவும் எங்கள் நீண்ட பழக்கமாகும். எங்கள் உடம்பெல்லாம் மூஞ்சியாகும்" என்று அறிவுறுத்தினர். ஆதலின் அவ்வாறு பழகுதலே தோலிற்கு வலிவுதரும்.

எனினும் நம்மை அழகுபடுத்திக் கொள்வதற்காகவும், பலருடன் பழகும்பொழுது நம் வேர்வை அவர்கள் மேற்படாதிருப்பதற்காகவும், மிகக் குளிர்ந்த பொழுதுகளிலும் நாடுகளிலும் உடை அணியநேரும்.* அதற்குத் தக்க உடைகளைத் தேர்தலே

* பல இளங் குழவிகள் பின்பனிப்பொழுதில் விடியற்காலையில் குளிர் பொறுக்காது நோயுற்று இறக்கின்றன. அவைகளை இரவிற் படுக்க வைக்கையில் குளிரற்றிருப்பதால் போதுமான ஆடை அணியாமல் படுக்க வைக்கின்றனர். பின் விடியுமுன் எழுந்து குளிருக்குத்தக்கபடி ஆடை அணிவிப்பதில்லை. ஆதலின் அப்பொழுதுகளில் இரவு மூன்று மணிக்குத் தவறாது எழுந்து வேண்டிய ஆடையை உடுத்தவேண்டும்.

கலம். தமிழ் நாட்டினராகிய நாம் குளிர்ப்பொழுதிலுங்கூடக் கம்பள ஆடை அணியவேண்டியதில்லை. ஏனெனில் நமக்குண்டாங்குளிர் குறைந்த வலிவுடையதாகலின் மயிர் ஆடை அளவிற்கு மிஞ்சி நம்முடலைச் சூடுபடுத்திவிடுவதால் கண் பொங்கி நோயுறுவோம். அத்துடன் இவ்வுடை நம்வேர்வையை உரிஞ்சிக் காயவைப்பதும், மிக்க விலையுயர்ந்ததுமாகும். பருத்தியுடை வேண்டிய அளவு சூடுபடுத்துமாதலின் மயிர்க்கம்பளங்களைவிடத் துப்பட்டியே சிறந்த போர்வையாம். சட்டை முதலிய ஏனைய உடைகளும் கலப்பாக நெய்த பருத்தித் துணியாற் செய்யப்படின் மிக நன்று. ஏனெனின் இது உடற் சூட்டை வெளிப்படுத்தாததாகவும், ஈரத்தை உரிஞ்சி உலர்த்துஞ் செயலை உடையதாகவும் இருக்கிறது. ஆனால் பட்டிற்கு இவ்வாறு வியர்வையை நீக்குஞ்செயல் மிகக் குறைவேயாதலின் அது சிறந்த உடையன்று. கலப்பாக நெய்த உடை ஞாயிற்றின் வெளிச்சத்தை வேண்டிய அளவு உடலிற் படச்செய்து நலந்தரும். கறுப்புத்துணி வெளிச்சத்தையும் சூடாகமாற்றி, வெளியிலுள்ள சூட்டையெல்லாம் இழுத்துக்கொள்ளுஞ் செயலுடையதாதலின் குளிர்ப்பொழுதிற் கடுத்ததேயன்றி ஏனைப்பொழுதில் கெடுதி கொடுக்கக் கூடியதாகும். அன்றியும் நமக்குப் புலப்படாவண்ணம் வேண்டிய அழுக்கைச் சேமித்து உடற்கு நோய் தருமியல்புடையதுமாகும். ஆதலின் வெண்ணிற உடையே சிறந்தது. வேண்டுமாயின் கறுப்பு நீங்கலாக ஏனைய நிறங்கள் (தடிப்பாகவின்றி) சிறிதே புகட்டப்பட்ட ஆடைகளைக் கொள்ளலாம்.

எந்த ஆடையாயினும் அது தூய்தாக விருக்கவேண்டும். 'கந்தை யானாலுங் கசக்கிக்கட்டு' என்னும் பழமொழியை மறக்க வொண்ணாது. அன்றாடம் துவைத்த துணியே நன்று. சட்டைபோன்ற ஆடைகளை நாடோறுந்துவைக்க இயலாதாயின் சிறிது நாற்றமும் உண்டாகாதிருக்கும்வரை அணியத்தகும். நம் தோல்வழியேயுஞ் சிறிது காற்று உரிஞ்சப்பெறுவதால் சிறிதேனும் நாற்றமுண்டானவுடன் தோய்த்துலர்த்தி அணிதலே நன்று. வண்ணான் பலர் ஆடைகளையும் கலந்து துவைத்தலால்

ஒருவர் நோய் மற்ருெருவருக்குப் பரவும்வழி ஆவன். வண்ணான் நோயென்று பெயர்பெற்ற எச்சிற்றழும்பு இவ்வாறே பரவுகிறது. இதை நீக்க நாமே தோய்த்துக் கொள்ளல் நன்று. அன்றி வண்ணான் தோய்த்ததைத் தூய நீரில் அலசிக் காயவைத்தணிதல் நன்ரும். ஒவ்வொரு நாளுந் தவருது படுக்கை, விரிப்பு, தலைக் கணை, சட்டை, ஆடை முதலியவற்றைக் காற்று, வெய்யிற்படும்படி பெருங் கொடிகளை வெளிப்புறத்துக் கட்டி மூன்று மணியாவது விரித்துலர்த்திப் பயன்படுத்தல் சிறந்த உடல் நலவழியாம்.

முழுக்கு :—உடலைத் தூய்மைப்படுத்தவும் நோயை நீக்கிக் கொள்ளவும் இது மிகச் சிறந்த வழியாம். இது பலதிறப்படும். அவையாவன :—1. வெயில் முழுக்கு 2. துவர்த்தல் 3. குளித்தல் 4. குளிர்நீர் முழுக்கு 5. வெந்நீர் முழுக்கு 6. கடல்நீர் முழுக்கு 7. எண்ணெய் முழுக்கு 8. உரோமர் முழுக்கு (Roman Bath) 9. துருக்கர் முழுக்கு (Turkish Bath) முதலியனவாம். இவற்றின் நன்மை தீமைகளை ஆய்வோம்.

வெயில் முழுக்கு :—வீட்டில் அல்லது தோட்டத்தில் தக்க வெயில் முற்றம் ஒன்று கட்டிக்கொண்டு அதில் மாலை கால்மணிப் பொழுதாவது ஆடையின்றி, அல்லது மிகக் குறைந்த ஆடையுடன், உடல் முழுதும் வெயிற்படும்படி காய்ந்துகொண்டிருத்தல் மிக நன்று. இது தோலைத் தூய்மைப் படுத்தி நன்ருய் வேர்க்கச்செய்து வலிவுபடுத்தும். இன்னும் பல நோய்களையும் நீக்கித் தோலை அழகுறச்செய்யும். ஞாயிற்றின் வெப்பம் உடலைத் திமிர்ப்படுத்தும் (Paralyses); ஆனல் அதன் வெளிச்சம் ஊக்கப் படுத்தும் (Stimulates). ஆதலின் சூடு மிகுத்துள்ள நடுப்பகலில் காயாது மாலை வெய்யிலிற் காய்தல் நன்று. காலை வெய்யிலில் ஞாயிறுவணக்கஞ் செய்தலும் நல்லதே. குருதி இத்தகைய இள வெய்யிலின் வெளிச்சத்திலிருந்து சூட்டையடைவதால் உடல் முழுதும் சூடுபடுத்தப்படாது, அது (குருதி) மட்டும் வேண்டிய சூட்டைத் தருகிறது. இதனல் குழந்தைகள் உடல் வலிவையும் கணைநோய் (Rickets) நீக்கத்தையும் அடைகின்றன.

துவர்த்தல் :—இது நோயுற்றிருப்போரும், முழுக இயலாதவர்களும் தோலைத் தூய்மையாக்கிக் கொள்ளத் தக்கதொரு வழியாம். தூயதொரு துண்டை நோயுற்றோர் மிகச் சூடான வெந்நீரிலும், ஏனையோர் தண்ணீரிலும் நனைத்துப் பிழிந்து தேய்த்துக் கொள்ளல் தோலுக்குத் தக்க பயிற்சியாவதுடன் அதற்குத் தூய்மையும் செய்யும். தேய்க்கும்பொழுது குருதி ஏற்றத்தை நோக்கித் தேய்த்தல் வடிகுழாய்களின் அழுக்குக் குருதி ஓட்டத்தை மிகைப்படுத்தும். காலையில் முழுகும் பழக்கமுடையோர் மாலையில் உடற்பயிற்சி செய்து வேர்வை அடங்கியதும் முழுக முடியாவிடின் இவ்வாறு துவர்த்தல் நன்று.

குளித்தல் :—தலை மயிர் மிகுதியாக உடையோரும், நோயுற்றோரும் தலை முழுக இயலாவிடிற் குளிக்கலாம். பெண்கள் தலையில் எண்ணெய் தடவிச் சீவிக்கொண்டு குளித்தல் வழக்கம். இதனால் தலை தூய்மை யுறாவிடினும் உடல் முழுதுந் தூய்மையுறும். இவ்வாறு குளிக்கும்போது தேய்த்துக் கழுவுவது நன்று. அப்பொழுது பின்வரு மிடங்களை மறவாது தேய்த்துக் கழுவுதல் வேண்டும். அவையாவன :—1. கண்ணின் ஓரங்கள். 2. மூக்கின் உட்புறம். கூடுமாயின் அண்ணாந்து நாலைந்து சொட்டு நீரை ஒவ்வொரு மூக்குத் தொளைவழியே விட்டு வாயால் காரித்துப்புவது மூக்கை அடைத்திருக்குஞ் சளியை நீக்கித் தூய்மைப் படுத்தும். 3. காதின் மடிப்புக்கள், பின்புறம். 4. வாய், பற்கள், பல் விடுக்குகள், ஈறு, கடைவாய்கள், வாயின் உட்புறம். 5. அக்குள் 6. கொப்பூழ். 7. கவட்டி. 8. கை கால்களின் விரல்களின் நகங்கள், இடுக்குகள், அடிப்புறம் முதலியனவாம். தேய்க்கும் போது சிறு சொரிகல்லைப் பயன்படுத்தலாம். சவர்க்காரம் (Soap) மிகுந்த காரப்பொருள்களால் ஆனதால் தோலைத் தின்று வறவறப்பைக் கொடுக்குமாதலின் பயனுறுத்தாமையே மிக நன்று. வேண்டுமாயின் சிகைக்காய் தூய்மையாக்குவதுடன் தீமையற்ற, மலிவான அழுக்குநீக்கும் பொருளாதலின், அதைப் பயன்படுத்தலாம். பெண்கள் மஞ்சட் குளிப்பது மயிர் முளையாமற் செய்வதுடன் வியர்வை நாற்றத்தையும் நீக்குமாதலின் மிக நன்று.

குளிர்நீர் முழுக்கு :—இது ஆறு, குளங்களில் மூழ்கல், குழாய் நீர் கிணற்றுநீரைத் தலையில் ஊற்றிக்கொள்ளல், திவலை முழுக்கு (Spray bath) முதலிய பலவகைப்படும். இவற்றுள் ஆறு குளங்களில் அலர முழுகல் உடலின் சூட்டைத் தணித்துக் குளிர்விப்பதுடன் உடற்பயிற்சியிற் சிறந்த நீந்துதலுக்கும் இடங்கொடுக்கிறது. நீந்தும்பொழுது எல்லாத் தசைகளும் வேலைசெய்து பயிற்சியுறுவதன்றி அப்பயிற்சியால் உண்டாகுஞ் சூடும் நீரால் இழுக்கப்பெறும். நெடுநேரம் நீந்தினால் கெண்டையேறிக் குறக்குளி உண்டாகுமாதலின் தக்கபொழுதில் நிறுத்திக்கொள்ளல்வேண்டும். நம்மையன்றி குறக்குளி உண்டாய்விட்டாலும் மல்லாந்துகொண்டு குறக்குளி ஏறும் பங்கை நீட்டிக்கொண்டிருந்தால் நலனுற்றுப் பின் கரையேறிவிடலாம். குருதியேற்ற நோயுற்றிருப்பவர்களும், வேறு கொடிய நோயுற்றிருப்பவர்களும், முழுகியபின் கை கால் விரல்கள் சில்லிட்டு வெளுத்துச் சூவையேறுகிறவர்களும், முழுகியபின் ஒருவகைச் சூட்டுணர்ச்சியின்றிக் குளிர் நடுக்கலுண்டாகிறவர்களும் குளிர் நீரில் முழுகக்கூடாது. அவ்வாறின்றி உடல் வலிவுடனிருப்பவரின் தோலுக்குக் குளிர்நீர் முழுக்கால் மிகுதியாகக் குருதி பாய்வதால் அது கதகதப்பைக் கொடுத்துக் குளிரை நீக்குகிறது. இதற்குத் தோலின் எதிர்ப்பு (Reaction) என்று பெயர். மிகுதியாக உடையணிபவர்க்கும், வெந்நீரிலேயே முழுகுபவர்க்கும், நெருப்படியிலேயே இருந்துகொண்டு குளிர்காய்ந்துகொண்டே யிருப்பவர்க்கும், நீரிற்பழகாதே இருப்பவர்க்கும் தோல் வலிவற்றுப் போவதால் இவ்வெதிர்ப்பு இருக்கிறதில்லை. இவர் இப்படியே தோலைக் காத்துக்கொண்டே யிருந்துவரின் யாதொரு கேடுமில்லை. ஆனால் பலமுறைகளில் உடை குறையவும், தண்ணீரிற் பழகவும், நெருப்பின்றி இருக்கவும் நேரும். அப்பொழுது முன் மூச்சுறுப்புப் படலத்துட் கூறியவாறு இவர்களின் சளித்தோல் வெந்து நோயுறுவர். ஆதலின் இவ்வாறு தோல் வலிவற்றோர் சிறிது சிறிதாகவேனும் குளிர்நீர் முழுக்கைப் பழக்கத்திற்குக் கொண்டுவரல் வேண்டும். முதலில் கையைக் குளிர்நீரிற் கழுவிப் பழகிப், பின் காலைக்கழுவிப்பழகிப், பின் சிறிது

சிறிதாகக் குளிர் நீர்ப்படும் பங்கை மிகைப்படுத்தல் நன்று. * இவ்வாறு பழகிப் பழகிக் குளிர் நீர் முழுக்கை நாள்தோறும் குளிர்ப் பொழுதிலும் விடாத் பழகிவரல்வேண்டும். இவ்வாறு தோல் வலிவுறும் உச்சிப்பொழுதில் முழுகுவதினும் காலை அல்லது வைகறையில் முழுகுதல் நன்று. உண்பதின் முன் அல்லது உண்டு இரண்டு மணிகளுக்குப் பின் முழுகல் நன்று. இல்லாவிடின் உணவு சமிக்காது. பத்துதுடி நேரம் மூழ்கல் போதுமானது. முழுகும்போது தலையை நன்றாய்த்தேய்த்து மயிரிலும் மண்டைத்தோலிலுமுள்ள அழுக்கை நீக்கல்வேண்டும். வேண்டுமாயின் சிகைக்காயைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

வெந்நீர் முழுக்கு :—நன்றாய் வேலைசெய்து களைப்புற்றோர், தசைப் பயிற்சி செய்தோர், எண்ணெய் முதலியன தேய்த்துக் கொண்டோர் இதை விரும்புவது நலம். இது தோலை நெகிழச் செய்து (Relaxes) களைப்பை நீக்குவதால் இவ்வாறு மாலையில் முழுகல் நன்று.† இது குருதியை மூளையிலிருந்து சூடுபட்ட தோலிற்குக் கொண்டுவரும் இயல்புடையதாதலால் தூக்கத்தையும் உண்டுபண்ணும் இயல்புடையது. இன்னும் எண்ணெய் தேய்த்துக்கொள்வோர் வெந்நீரில் முழுகல் நன்று. ஏனெனில் எண்ணெய் குளிர் நீரிற் கட்டியுற்றுப் பிடித்துக்கொள்ளும், ஆனால் வெந்நீரில் இளகிவிடும். இது அழுக்கையும் நன்றாய்க் கரைத்து

---

* நீர் முழுக்கு சூட்டளவைப் பொறுத்தமட்டில் அறுவகைப்படும். அவற்றின் பெயரும் வெப்பளவும் வருமாறு :—1. மிகக் குளிர்முழுக்கு (Cold) 33—65°F. 2. குளிர் முழுக்கு (Cool) 65—75°F. 3. நடுத்தர முழுக்கு (Temperate) 75—85°F. 4. வெதுவெதுப்பு முழுக்கு (Tepid bath) 85—92°F. 5. வெந்நீர் முழுக்கு (Warm bath) 92—98°F. 6. சுடுநீர் முழுக்கு (Hot bath) 98—112°F. இவற்றுள் சுடுநீர்முழுக்கு முழுகுவோர், சூட்டைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைத்து மிகக்குளிர் நீரில் முழுகும் பழக்கஞ்செய்துகொள்ளின் பின் சளிநோய் எளிதில்வராது. இன்னும் இது குருதியின் கூடுகளை மிகுதியாய்ப் பல்கச்செய்து கொசுக் காய்ச்சல் (Malaria) போன்ற நோய் வாராமலுந் தடுக்கிறது.

---

† களைப்பிலாது வெந்நீரில் முழுகியதும் குளிர்நீரை உடல்மேல் தெளித்துக்கொள்ளல் நன்றெனப் பல மருத்துவர் எண்ணுகின்றனர்.

நீக்குமியல்புடையது. எனினும் அடிக்கடி வெந்நீரில் முழுகல் தோலை மெலியவும், காடு முரடாகவும், வறளவுஞ் செய்கிறது.

கடல்நீர் முழுக்கு :—அடிக்கடி கடல்நீரில் முழுகினால் உப்புப் படிந்து சிரங்கு வரும்; எரிச்சலுண்டாகும். திங்களிருமுறை முழுகல் மிகையாம். இதனாலுண்டாம் மாறுதல் உடற்கு மிக நன்று.

எண்ணெய் முழுக்கு :—எண்ணெய் நீரிற் கரையாத அழுக்கை யுங் கரைக்கு மியல்பினதாதலின் நம் தோலின்மேற் பூசின் ஆங் குள்ள கோடிக்கணக்கான தொளைகளின் வாயை அடைத்திருக்கும் அழுக்கைக் கரைத்துவிடும். பின் அவ்வெண்ணெய் சிகைக்காய், அரப்பு முதலியவற்றால் நீக்கப்பெறாவிடில் உடலுட் சோர்ந்து கெடுதி பயக்குமாதலின் துப்புறக் கழுவப்படல் வேண்டும். நாள் தோறும் உச்சியில் எண்ணெய் வைத்துக்கொண்டு வெறுந்தலை முழுகுவோரும் கழுத்து, முதுகு, மார்பு முதலிய விடங்களில் எண்ணெய் படியாதிருக்கச் சிகைக்காய்த்தூள் போட்டுத் தேய்க்க வேண்டும். இவ்வாறு வறள முழுகுவதால் தோல் தூய்மை யடைந்து நம்மழுக்கே நம்முடலுட் சோராது நீக்கப் பெறுவதால் பல நோய்கள் வாராமற்றடுக்கப்படுகின்றன; முக்கியமாகத் தோல், குண்டிக்காய், நுரையீரலுக்கு வரும் நோய்கள் நீக்கப்படுகின்றன. உடலுருக்கி (Consumption) என்னும் நோய் நுரையீரலின் நோ யாகமட்டும் எண்ணப்பெறாது தோலின் நோயாகவுங் கருதப் பெறுவதால் தோலுக்கு நலத்தையும், உணவையும் அளிக்கத் தக்க நெய்களைத் தேய்ப்பதால் நீக்கப்படுகிறது. இன்னும் நம் தோல் நீரை உள்ளிழுத்துக் கொள்ளாதேனும் அதன் மேற்றேய்க் கப்படும் எண்ணெய் கொழுப்பு முதலியவற்றை உள்ளிழுத்துக் கொழுப்புக் கூடுகளிற் சேமித்துவைக்கும் இயல்பினது. இதனால் எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் சிறிது கொழுப்பு உட்கொள் ளப்படுகிறது. இஃதன்றிச் சில மருந்துகளையும் எண்ணெயிற் கரைத்து உட்புகட்டலாம். மூக்கு அறுவறுக்கின்றதும் குழந்தை களின் பசுங் குடர்களால் சமிக்கப்படாததுமான மீனெண்ணெயும் Cod-liver-oil) இவ்வாறே புகட்டப்பட்டு உடலுட் சோருகிறது.

இன்னும் நெடுந்தொலை நடந்தோர் அல்லது வண்டியிற் சென்று நலிந்தோர் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் முழுகுவதால் மிக்க ஆறுதலடைகின்றனர். எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் மயிர்ப்பைகள் செய்யும் வேலை இரண்டு மூன்று பங்கு மிகுவதால் மயிர் நன்றாய் வளர்ந்து கறுக்கிறது.

உரோமர் முழுக்கு :—உரோமானியச் செல்வர்கள் பொதுப் பெருமுழுகிடம் (Public baths) கட்டி முழுகிவந்தமுறை உடற்கு நலந்தருவதாகும். முதலில் மிகக் குளிர் நீர் நிறைந்த குளத்தில் நீந்தி முழுகுவர். பின் ஆடையைக் களைந்து சிறிது வேர்வையை உண்டாக்கும் வெப்பறை (Warm room) யுட் சென்று வேர்வை அரும்ப நிற்பர். அதன் பின் இன்னுஞ் சூடு மிகுத்த ஓர் அறை யுட் சென்று அங்குள்ள மிகச் சுடுநீரால் உடலைக் கழுவுவர். அதன் பின் ஓர் சூட்டறையுட் சென்று வேர்வை ஒழுக ஒழுக நிற்பர். பின் எலும்பாற் செய்த கலன்களால் அவர்கள் உடலி லுள்ள வேர்வையும் அழுக்கும் சுரண்டப்படும். பின் உலர்ந்த துண்டால்துவர்த்திச் சிறிது எண்ணெயைத் தேய்த்துக்கொள்வர். இதனால் சுறு சுறுப்பும், சில நோய்களின் நீக்கமும் உண்டா கின்றன.

துருக்கர் முழுக்கு :—இது வேது பிடித்தலுக்கு ஒப்பாகும். 125° முதல் 180° வரை சுடு காற்றால் சூடுபடுத்தப்பட்ட அறைக் குட்செல்லின் தோலில் குருதி மிகுதியாய்ப்பாய்ந்து நன்றாய் வேர்க்கிறது. இதனால் உள்ளுறுப்புகளில் அழுக்குப் படிந்திருத் தலால் உண்டாம் நோய்கள், ஊளைச்சதை நோய், (Gont) திமிர் நோய் (Rheumatism), குண்டிக்காயின் விடாநோய் (Chrnic disease), தோலில் குருதி ஓட்டக் குறைவினால் வரும் நோய்கள் முதலியன நீங்கும். இம் முழுக்கை நோயுற்றோர் மருத்துவரைக் கேட்டுக் கொண்டுதான் எடுத்துக் கொள்ளவேண்டும். இதன் பின் தோலை நன்றாய்த் தேய்த்துக் குளிர் நீரில் முழுகினால் தோலின் குருதிக் குழாய்கள் பதப்படும். இவ்வாறு சூட்டறை இல்லாவிடின் நம் நாட்டு முறைப்படி வேது பிடித்தல் நலந் தரும்.

உடலைத் தேய்த்தலும் பிடித்தலும் (Massage) :—மண்டைத் தோலை நன்றாய்த் தேய்த்தலினால் இளநரை நீங்கும்; முது நரையும் நாட்பட்டு வரும். தோலைக் கையாலும், துண்டாலும் தேய்த்தலினால் கிழத்தனத்தின் சிறந்த குறிகளாகிய தசை நார்களின் தளர்ச்சியும் தோலின் சுருக்கங்களும் நீங்கும். இதனால் இழந்துபோன ஆண்மையையும் வலிவையும் ஒருவாறு அடையக் கூடும்.

கை கால்களன்றி நெஞ்சு, வயிறு, விலா, முதுகு முதலியவற்றையும் பிடித்துக்கொள்ளல் உடற்கு நல்ல பயிற்சி தரும். வேறு வழியில் உடற்பயிற்சி செய்ய இயலாதவர்கள் இவ்வாறாவது செய்து கொள்ளல் நன்று. தேர்ச்சியுள்ளவர்கள் உடலைப் பிடித்தால் சிறுபொழுதில் பெருநன்மையை அடையலாம். இதனால் சமிக்கும் உறுப்புகள் நன்றாய் வேலை செய்கின்றன. தசைகள் தக்க பயிற்சியையும் சுறு சுறுப்பையும் அடைகின்றன. இது வயிற்றின் சுவரிலும் (Abdomen) குடர்களிலும் மிகுத்துள்ள கொழுப்பைக் குறைத்து அவைகளுக்குச் சுறு சுறுப்புண்டாக்குவதுடன் அழகையு முண்டுபண்ணுகிறது. குருதியேற்றத்திலும் அவற்றின் பக்கத்திலும் சேமிக்கப்பெறுங் கொழுப்பு உயிர்க்கே ஊறுசெய்யக் கூடியதாதலின் அதனையுங் குறைக்கிறது. கை கால்கள் வலுவடைகின்றன. தோலின் தளர்ச்சியும் சுருக்கங்களும் நீக்கப்பெற்று அது அழகடைகிறது. கடைசியாக நெடுந்தொலை நடந்தால் அல்லது ஓடினதாலுண்டாம் வலியும் களைப்பும் நீங்குகின்றன. இவ்வாறு பலபயன்களை யளிக்கும் இப்பயிற்சியைப் போற்றுதல் நன்றாம்.

தோலின் நோய்களும் அவைகளைப் போக்கும் வழிகளும் :— தோலின் நோய்களாவன வேர்க்குரு, சிரங்கு, எச்சிற்றழும்பு முதலியவைகளாம். இவற்றுள் வேர்க்குரு மிகுதியான சூட்டினாலும் அடிக்கடி நன்றாய்த் தேய்த்துக் குளிக்காததினாலும் உண்டாவதாகும். இது முதுகுப்புறம் குளிக்கையில் நன்றாய்த் தேய்க்கப் பெறாததனால் ஆங்கு மிகுதியாய் உண்டாம். இதை நீக்கக் காலை முழுக்கும், நாளொன்றிற்கு இருமுறை முழுகலும், சிகைக்காயை மிகுதியாய்ப் பயன் படுத்தலுமே தக்க வழிகளாம்.

சிரங்கு:—இது ஒருவகை நுண்புழுவினால் உண்டாவதாகும். இது கண்ணிற்குப் புலப்படாது. இதன் உடல் தட்டையாயும் வட்டமாயு மிருக்கிறது. இதற்கு எட்டுக் கால்களுண்டு. முன் கால்களில் உறிஞ்சுங் குழாய்களும், பின் கால்களில் முட்களு மிருக்கின்றன. இவைகளின் உதவியால் பெண் புழுக்கள் தோலை நோண்டி முட்டை யிடுகின்றன. இம்முட்டைகள் அரிப்பை உண்டுபண்ணுகின்றன. இவ்வரிப்பு சொரியச் சொரிய மிகுகிறது; தோலும் வெந்துபோகிறது. ஆண் புழு பெண்ணைவிடச் சிறிது. தோலின் மேற்புறத்திலேயே வாழ்கிறது; ஒன்றுந் தீங்கிழைப்பதில்லை. இப்புழுக்கள் அழுக்குடையவர்களிடத்திற்றான் உண்டாகின்றன. இவர்களுடன் பழகும் தூய்மையுடையவர்களையும் இப்புழு பற்றிக்கொள்கிறது. ஆதலின் இது ஒட்டுவாரொட்டி நோயாகும். இந்நோய் பலதிங்கள்வரை யிருக்கும். இதை நீக்க வெந்நீரில் சிரங்குகளின் மேற்றோல் போம்படி தேய்த்துச் சீயக்காய் போட்டுக் கழுவி அப்புழுவின் பொந்துகளைத் திறந்துவிடல்வேண்டும். பிறகு கந்தகங் கலந்த மருந்து தடவினால் இப்புழு மாளும். இந்நோயுடையோரின் ஆடைகள் வழியேயும் இது பரவு மாதலின் அவைகளையும் வெளுத்துத் தூய்மையாக்கல் வேண்டும்.

எச்சிற்றழும்பு:—தோலில் முளைக்கும் காளான் (Fungus) களாகும். இது வரவரப் பரவுகிறது. இதை நீக்கப் பலவகை எண்ணெய்களுண்டு. ஆனால் தவறாது தீர்ப்பது புதுக்கதிர்களே (X Rays). இதுவும் ஒட்டுவாரொட்டியாதலின் இந்நோயுடையோருடன் பழகலும் அவர்கள் உடையைப் பயன்படுத்துவதுந் தீயனவே.

மயக்கப் பொருள்களின் மாண்பு:—சாராயச்சத்து குருதியைத் தோலில் மிகுதியாய்ப் பாயச்செய்து சிவக்கச் செய்கிறது. இதனால் கண்களும் மூக்குநுனியுஞ் சிவக்கின்றன. இது மக்களை அறிவிழந்து புரண்டு தூங்கச்செய்கிறதால், குளிர் உணர்ச்சியின்றி ஆடையற்றிருக்கச் செய்வதால், உடல் குளிரால் நலிகிறது. இதனால் சளி, வெப்பு, உடலுருக்கி முதலிய நோயுண்டாய் இறக்கின்றனர்.

நெருப்புச் சூட்டிற்கும் நீர்ச்சூட்டிற்கும் வெந்துபோதலுக்கும் முதலுதவி :—நெருப்புச்சூடு தீப்பிடித்தலினாலும், பழுத்த இரும்பு மேற்படுதலினாலும் உண்டாகிறது. நீர்ச்சூடு கொதிநீர், கஞ்சி, காய்ச்சப்பட்ட எண்ணெய், நீராவி என்றிவை படுதலினால் உண்டாகிறது. வெந்துபோதல் கந்தகப் புளிப்பு முதலிய பல புளிப்புக்களும் சாம்பற்காரம் (Potassium hydrocide) முதலிய பல காரங்களும் படுவதனால் உண்டாகிறது. இவற்றிற்கு முதலுதவி பின் வருமாறு செய்யவும்.

உடையில் தீப்பிடித்தால் உடனே ஓடவாவது குதிக்கவாவது கூடாது. முதலில் எரியுமிடம் மேலிருக்கும்படி படுக்கவேண்டும். தீ மேல்நோக்கியே எரியுமாதலின் இவ்வாறு கிடப்பின் தானகவே அணைந்துவிடும். இன்னும் விரைவில் அணைக்கக் கம்பளி, சாக்கு, பாய் இவைகளின் ஓரம் தீயிற்படாதபடி தீயின்மேற் போட்டு மூடல்வேண்டும். வேறொருவனை இவ்வாறு மூடும்போது தன் மேற் தீப்பிடிக்காதபடி தன்னைச்சாக்கு முதலியவற்றால் போட்டு மூடிக்கொள்ளல்வேண்டும். ஒருவருமின்றேல் தன்னைத்தானே முறம் முதலியவற்றால் ஒற்றிக்கொண்டு அணைத்துவிடலாம். இவ்வாறு அணைத்ததும் தீப்பட்டு வெந்த இடத்தின் மேலுள்ள துணியை நீக்கல்வேண்டும். கூடியவரையில் மெதுவாக எண்ணெய் தடவி வலிக்காது நீக்கல்வேண்டும். எளிதில் வாராதவிடத்தை விட்டுவிட்டு வந்தவரை கத்தரித்தெடுத்தல்வேண்டும். பின் கட்டுக் கட்டல்வேண்டும். வெந்தபங்கில் காற்றுப்பட்டால் நச்சுக் கூடுகள் படிந்து சிக்கோத்துக் கொள்ளுமாதலின் கூடிய விரைவில் கட்டுக் கட்டுவதற்காக எரிந்த பங்கின் மேலுள்ள துணியை எடுக்கும்பொழுதே கட்டுக் கட்டுவதற்கான பொருள்களைத் தயாரித்தல்வேண்டும். எரிந்த பங்கின்மேல் எண்ணெய்த்துணி (தேங்காயெண்ணெய் மிக நன்று), அல்லது மாவு அல்லது உருளைக் கிழங்குப்பொடி போட்டுக் காற்றுப்படாமல் மூடவேண்டும். அதன் மேல் தூய வெள்ளைத்துணி போட்டுக் கட்டல்வேண்டும். எண்ணெய்த்துணி போடும்பொழுது காயம் பெரிதாயிருந்தால் பல நீண்ட சிறு துண்டுத் துணிகளை நனைத்துப் போட்டால் அவை

பின்எடுக்கையில் எளிதில்வரும். மூஞ்சிவெந்திருந்தால் கண், மூக்கு, வாய் இவைக்காகத் துளை கத்தரிக்கப்பட்ட ஓரே துணிபோட்டுக் கட்டல் எளிது. இவை யாவுங் கிடைக்க நெடும்பொழுதாகு மாயின் எரிந்த பங்கை உடற்சூட்டிற்கொத்த சூடுடைய (98·6°F.) வெந்நீரில் முழுக வைத்திருத்தல் நன்று. பின் கட்டுக்கட்டலாம். கட்டியதும் மூர்ச்சையா யிருந்தால் அதற்கு முதலுதவி செய்யல் வேண்டும். அதற்காகத் தூயகாற்று, நல்ல வெளிச்சம் படுமிடத்திற்குக் கொண்டு வரல்வேண்டும். சுற்றிலும் மக்கள் கூட்டமா யிருந்தால் விலக்கிவிடல் வேண்டும். பின் அவனைக் கால் உயரமாகவும் தலை தாழ்வாகவு மிருக்கும்படி படுக்கவைக்கவேண்டும். இதனால் மூளைக்குக் குருதிபாய்ந்து அவனை எளிதில் தெளிவடையும்படி செய்யும். அவன் மூக்கில் நாற்ற உப்பைப் பிடிக்கவேண்டும் (Smelling salt). உள்ளுக்கு நாற்ற உப்புக் (Sal Volatile Ammonium Carborate) கலந்த நீரைக் கொடுக்கலாம். உடல் சூடடையும்படி மூடி வெந்நீரொத்துக் கொடுக்க வேண்டும். பின் தெளிவடைந்தவுடன் மிகுதியான சர்க்கரை கலந்த பால், காப்பி முதலிய சூடான குடிநீர் கொடுக்கவேண்டும். இவ்வாறே சூடான இரும்பு, எண்ணெய், நீர் முதலியவற்றால் உண்டாய சூட்டிற்கும் முதலுதவி செய்யலாம்.

புளிப்பு, காரத்தினலுண்டாம் எரிச்சல்களுக்கு முன்போல் துணிபோட்டுக் கட்டுமுன் சிறிது மாற்றுக் கொடுக்கவேண்டும். அதற்காக புளிப்புப் பட்டிருந்தால் ஓர் இளங்காரமுள்ள அப்பள உப்பு, மக்கனு (Magnesia) முதலியவற்றுள் ஒன்று கரைத்த இள வெந்நீராற் கழுவிப் பின் கட்டல்வேண்டும். காரம் பட்டிருந்தால் சிறு புளிப்புக்களாய எலுமிச்சம்பழச்சாறு, காடி முதலியவற்றாற் கழுவிப் பின் கட்டல்வேண்டும்.

தேட்கோட்டு :—தேள் கொட்டிய விடத்தில் வேர்வையும் பல ஊசிகளால் குத்துகிறாற்போல் வலியுந்தோன்றும். பின் நச்சு ஏறி கவட்டி, அக்குள் முதலிய விடங்களில் அண்டை கட்டும். இந்நஞ்சு குருதி ஓட்டத்துடன் சென்று பரவாதபடி கொட்டு வாய்க்குமேல் இறுக்கிக் கயிறு, துணி முதலியவற்றுள் யாதுஅகப்

படுகிறதோ அதனல் கட்டவேண்டும். கட்டுக்குமேல் சிறிது தொலையில் ஒரு கட்டு, அதற்குமேல் மற்றொருகட்டு, இவ்வாறாக இரண்டு மூன்று கட்டுகள் குருதி ஓட்டத்தை நிறுத்தும்படியாகக் கட்டுதல் நஞ்சைப் பரவாதபடி கட்டாயம் தடுத்துவிடும். பின் கொட்டுவாயில் நவச்சாரக்காரம் (Ammonia), ஈரவெங்காயத் துண்டு, புகையிலைச் சாறு முதலியவற்றுள் ஒன்றை வைத்துத் தேய்த்தல் நன்று. அல்லது தக்க நிறைமொழியாளரிடம் (மந்திரவாதி) செல்லின் நஞ்சு இறங்குவதை நேரில் உணரலாம். நண்டுத் தெறுக்கால் கொட்டினும் இவ்வாறே செய்தல் நலம்.

குளவி, தேனீ முதலியவற்றின் கொட்டு :—இதனல் வலியும் வீக்கமும் உண்டாம். கடுமையான கொட்டாயிருந்தால் மயக்கம், வாயாலெடுத்தல், கழிச்சல், நினைப்பறல் (Unconsciousness) முதலியன உண்டாம். சிலபொழுது மூஞ்சி, கை, கால்களில் வீக்கமும் உண்டாகின்றது. கொட்டுவாயில் இப்பூச்சிகளின் கொடுக்கு முறிபட்டிருப்பதால் அதை நீக்கச் சிறு சாவியின் துளையை வைத்து அமுக்கி எடுக்கவேண்டும். பின் நவச்சாரக் காரநீர் (Liquid ammonia), அரைஉப்பு முதல் கரிக்காற்று (Sodium-bi-carbonate). ஈர வெங்காயத்தோடு, வெடியுப்பு முதல் மங்கனு (Potassium Permanganate) இவைகளிலொன்றைபிட்டுத் தேய்த்தல் நன்று. சாராயப் புகைக்கல் (Tincure of Iodine) எல்லாவகைக் கொட்டுகளுக்குந் தக்க மருந்தாம்.

அரணை நக்கல் :—அரணைக் குட்டியே மிகுந்த நஞ்சுடையதாம். இது நக்கினல் நினைவற்றுப் போய்க் கிடக்க நேரும். இதற்குத் தக்க மாற்று பருத்திவேராகும். இதை நன்றாய் அரைத்துக் கரைத்து உள்ளுக்கு அடிக்கடி கொடுத்துக் கொண்டிருந்தால் தெளிவடையச் செய்யும்.

நாய்க்கடி :—இதனல் நினைவு மாறலும், பித்தும், கடைசியில் சாக்காடும் உண்டாம். எந்நாயும் நம் ஆடைமேல் கடித்தால் நமக்கு அத்துணை நஞ்சில்லை. ஏனெனில் அதன் எச்சில் துணியிற் சுவரிவிடுகிறது. பித்துப் பிடித்த நாய்க்கடியே மிகுந்த

நச்சுள்ளதாம். அத்தகைய நாய் கடித்தால் அது பத்து நாளைக்குள் தானகவே இறந்துவிடுமாதலின், கடித்த நாயைக் கொல்லவே கூடாது. அதைப் பத்து நாளைக்குக் கட்டிவைத்துப் பித்துப்பிடித்ததா அன்று என்று கூர்ந்து நோக்க வேண்டும். எவ்வாறுயினும் அதன் எச்சில் பாவாதபடி தேட் கொட்டிற்குக் கட்டுவதுபோல் நன்றாய்க் கட்டவேண்டும். பின் ஆங்குள்ள நச்சை நீக்கக் கத்தியால் கீறிக் குருதியை ஒழுகச் செய்யவேண்டும். இவ்வொழுக்கு மிக வேண்டின் அப் பங்கைக் கீழ்த் தொங்கவிடலும், வெந்நீரில் நனைத்தலுந் தக்க வழிகளாம். அல்லது வாயிற் புண்ணில்லாத ஒருவனை விட்டு உறிஞ்சித் துப்பச்சொல்லலாம்; புண்ணிருப்பின் அதன் வழியே அவனுக்கும் நச்சேறிவிடும். பின் அக்கடித்த விடத்தைத் தீப்புளிப்பு (Nitric acid), கரிப் புளிப்புகளால் (Carbolic acid) வேகவைத்தல் வேண்டும். பின் கட்டுக் கட்டிவிட்டுக் கூடிய விரைவில் அவனை அருகிலுள்ள 'பாஸ்டர்' மருத்துவ நிலையத்திற்கு (Pasteur Institute) அனுப்பவேண்டும். பித்தில்லா நாயாயின் தக்க மருந்தும், நெய்யும், உப்பில்லாப் பத்தியமும் நலனுறச் செய்யும்.

பாம்புக்கடி :—நீர்ப் பாம்புகள் நஞ்சற்றன. நிலப்பாம்புகளிற் கொடிய நஞ்சுடையன நல்லபாம்பு, விரியன் முதலியவைகளே. இவற்றினும் பத்துப் பன்னிரண்டு பங்கு நஞ்சுடையன கடற் பாம்புகள். இவைகளுள் நஞ்சு மிகுந்த பாம்புகள் கடித்திருக்கின்றனவென்பதற்கு, ஒரு அங்குலத் தொலைவிற்குள் குருதி ஒழுகும் இரு துளைகளே அடையாளங்களாம். இந் நச்சு குருதியுட் கலந்து உடல் முழுதும் பரவிக் கொல்லும். இதைத் தடுக்க நாய்க் கடிக்குச் செய்வதுபோல் இரண்டு மூன்று கட்டுக் கட்டி குருதியை ஒழுகச் செய்யவேண்டும். பின் அக்காயத்தில் வெடியுப்புமுதல் மங்கனத் (Potassium Permanganate) தூளைவைத்து அமுக்கினல் அல்லது கரைத்த நீரில் கடிவாயை வைத்தால் அது நஞ்சைக் கெடுத்துவிடும். இது அகப்படாவிடில் பழுத்த இரும்பு, நெருப்பு, வெடியுப்புக்காரம் (Potassium hydroxide), தீப்புளிப்பு (Nitric acid), கரிப்புளிப்பு முதலியவற்றுள் ஒன்றால் அக்கடிவாயை வேகவைத்தல் நன்று. அல்லது வாயால் முன்போல்

உரிஞ்சிப் பின் கட்டுக் கட்டலாம். உரிஞ்சின வாயைச் சாராயத்தால் கொப்பளித்துக் கழுவல் நன்று. கடிபட்டவன் நினைவற்று விழுந்தாலும் பின் அவனுக்கு வாழைப்பட்டைச்சாற்றைப் பிழிந்து இரண்டு மூன்று சேர் கொடுத்தல் நலம். அல்லது உக்கா குடிப்பவர்களின் குடுக்கையினடியில் ஒருவகை அடை உண்டாகும். அதைத் தூள்பண்ணிக் கடிவாய்க்குமேல் நாலைந்து விடங்களில் சதையைச் சிறிது கீறி அதில் அத்தூளைப் போடலாம். இவை ஒன்றிலுந் தீராவிடில் பண்டைக்காலத்து மருத்துவரொருவர் மறைத்துக் கூறியபடி செய்யலாம்.

"மண்ணில் வேந்தனும் மாமலை ஆதியும்
உண்ணுஞ் சோற்றிற்கு உருசி உண்டானதும்
கண்ணு மூக்குச் செவியிற் பிழிந்திட
விண்ணிற் சென்ற விடம திறங்குமே" †

அதாவது வெற்றிலை, மிளகு, உப்பு இம்மூன்றிற் சிறிதே எடுத்து வெள்ளைத் துணியில் வைத்து நசுக்கிக் கண், மூக்கு, செவியில் ஒவ்வொன்றிற்கு ஒன்று அல்லது இரண்டு சொட்டுவிடின் உடனே தலைக்கு ஏறியிருக்கிற நச்சும் இறங்கும் என்பதாம். இது மிகக் காரமானதால் கடைசி வழியாகக் கொள்ளல் வேண்டும். இது கைகண்ட மருந்து. இதுவன்றித் தக்க நிறைமொழியாளரும் இந் நச்சை நீக்கும் வன்மையுடையோராவர்.

---

† மண்ணில் வேந்தனென்பது நிலத்தில் வேந்தனைப்போல் வெற்றியோடு முளைக்கும் வெற்றிலையாம். மாமலை யாதியென்பது மலைபடு மருந்துகளில் முதன்மைத்தாகிய மிளகாம். உண்ணுஞ் சோற்றிற்கு அதன் சுவையைக் கொடுப்பது உப்பாம். இம் மூன்றையும் பிழியின் விண்ணுகிய தலைக்கு ஏறிய நஞ்சும் இறங்குமென்பதாம். பண்டைப்பெரியோர் இத்தகைப் பெரிய நோயை வெகு எளிதில் நீக்கும் வழியை நாம் புறக்கணிக்காதிருக்குமாறு எவ்வளவு மறைவாய்க் கூறியிருக்கின்றனர்.

(தொடரும்.)

உ

தமிழ் மொழியும் தமிழ் நாட்டார் வழக்க ஒழுக்கங்களும்.

திருவாளர் ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி 305.)

இனி வடமொழியாளர் போற்றிக்கொண்டாடும் வேதம் என்பதுதான் எப்படிப்பட்டது? அதில் சொல்லப்பட்டிருக்கும் பொருள்தான் என்ன? அப்பொருள்களும் தமிழ் மறைகள் என்று மேற்குறித்தவைகளில் சொல்லப்பட்ட பொருள்களைப் பார்க்கிலும் எவ்வகையில் மேலானவையென்று நாம் தெரிந்துகொள்ளவேண்டியது நம் கடமையன்றோ? இருக்கு வேதமானது வடமொழியாளராலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதிலே சிலபாடல்களின் மொழி பெயர்ப்பைக் கீழே காண்க.

'இந்திரன் தன்னை வணங்குகிற ஆரியனைப் போரில் காக்கிறான். கணக்கற்ற போர்களில் எல்லாம் அவனைக் காக்கிறான். ஆரியர்களுடைய நன்மையைக் கருதி, வேள்வி செய்யாதவர்களை அடக்குகிறான். பகையாளியின் கருநிறம் பொருந்திய தோலை உரித்து அவனைக் கொல்லுகிறான். அவனை நீறாக்குகிறான். கொடியவர்களை அவன் சுட்டெரிக்கிறான்.' (இருக்கு 1-130-8).

'பகைவர்களை அழிப்பவனே! அலைகிற சேனைகளின் தலைகளைக் குவித்து வைத்து, அவர்களை உன் அகன்ற அடியால் நசுக்குவாயாக. உன் அடி அகன்றது.' (இருக்கு 1-133-2).

குறிப்பு:—இப்பொருளுரையின் தலைக்குறிப்பு முன்னம் 'தமிழ் இலக்கணமும் தமிழ் மக்கள் இல்லற வாழ்க்கை முறையும்' என்று வெளியாயிற்று. அது 'தமிழ் மொழியும் தமிழ் மக்கள் வழக்கவொழுக்கங்களும்' என்று மாற்றிக்கொள்ளப் பட்டது.

'ஓ இந்திரா! இந்தச் சேனைகளை அழி. அவர்களைப் பெரிய குழியில் எறிந்து வீழ்த்து.' (இருக்கு 1—133—3.)

'ஓ இந்திரா! இப்படிப்பட சேனைகள் நூற்று ஐம்பது வரையில் நீ அழித்தாய். மனிதர்கள் உன்னைப் புகழ்கிறார்கள். ஆனால் உன்னுடைய வன்மைக்கு அது எம்மாத்திரம்?'

(இருக்கு 1—133—4).

'ஓ இந்திரா! உன்னுடைய ஆற்றலை முனிவர் புகழ்கிறார்கள். போரை முடிக்கவேண்டிப் பல பகைவர்களை நீ அழித்தாய். ஒரு கடவுளையும் வணங்காத பகைவர்களுடைய பட்டணங்களை நீ அழித்தாய். ஒரு கடவுளையும் வணங்காத பகைவர்களுடைய ஆயுதங்களை நீ வளையச் செய்தாய்' (இருக்கு 1-174-7-8.)

'குயவன்' என்பவன் பிறரிடம் பொருள் இருப்பது தெரிந்து கொள்ளையிடுகிறான். அவன் ஆற்றில் வசிக்கிறான். அதனால் ஆற்றைத் தூய்மையற்றதாகச் செய்கிறான். அவன் மனைவிகள் ஆற்றில் குளிக்கிறார்கள். அவன் மனைவிகள் சிப்பா ஆற்றில் ஆழ்ந்து தொலைவாராக.' (இருக்கு 1—104—3).

'ஆயு என்பவன் தெரியாத இடத்தில் வசிக்கிறான். நீர் பெருகினவுடன் கிளம்புகிறான். 'அஞ்சசி' 'குலிசி' 'வீர பத்தினி' என்னும் ஆறுகள் அவனைக் காக்கின்றன.'

(இருக்கு 1—104—4.)

'கரிய பகையாளி அஞ்சுமதி ஆற்றங்கரையில் பதினாயிரம் படைகளுடன் வசித்தான். பெருங்கூச்சல் இடும் அந்தத் தலைவனை இந்திரன் தெரிந்து கொண்டான். ஆரியர் நன்மைக்காக அவனை அழித்தான்.' (இருக்கு 8—96—13.)

'அந்தக் கரிய தலைவனைப் பார்த்தேன் என்று இந்திரன் சொன்னான். மேகத்தில் சூரியன் மறைந்து இருப்பதுபோல அஞ்சுமதி ஆற்றங்கரையில் அவன் மறைவாக இருக்கிறான். ஓ மருத்துவே! (இந்திரனே) அவனுடன் போர்தொடுத்து அவனை அழிக்கவேண்டும்.' (இருக்கு 8—96—14).

'துணியை எடுத்துக்கொண்டு ஓடுகிற திருடன் பின்னே மனிதர்கள் கூச்சல் இடுவதுபோல, போர்க் குதிரையைக் கண்ட மாத்திரத்தில் பகைவர்கள் கூச்சல் இடுகிறார்கள். வல்லூறு என்னும் பறவையைக் கண்டதும் மற்ற பறவைகள் எப்படிக் கத்துகின்றனவோ அப்படி அக்குதிரையைக் கண்டவுடன் பகைவர்கள் கத்துகிறார்கள்'. (இருக்கு 4—38—5.)

'நாம் வில்லைக்கொண்டு பசுக்களைக் கவர்ந்து கொள்வோம். பகைவர்களை வில்லைக்கொண்டு வெல்வோம். பகைவர்களின் தந்திரங்களை வில் தகர்த்துவிடும்.' (இருக்கு 6—75.)

'இந்திரனே, வருணனே உன்னை வணங்குகின்றவர்கள் பசுக்களைக் கவரக் கிழக்குநோக்கிப் போகிறார்கள். உன்னுடைய உதவியை வேண்டுகிறார்கள். சூடன் என்பவனைக் காப்பாய் பகைவர்களை அழிப்பாய்.' (இருக்கு 7—83.)

'இந்திரன், அவனுடைய கொடிய இடியைக்கொண்டு விருத்திராசுரனைக் கொன்றான். அவன் கை கால்களை வெட்டித் தள்ளினான்.' (இருக்கு 1—32.)

'சூரியனே! நாங்கள் புறப்பட்டுப்போக உதவிசெய்க. வழியில் எல்லா இடையூறுகளையும் நீக்குக.'

'சூரியனே! எங்களை வழிமறித்துக் கொள்ளையிடும் திருடர்களை விலக்குக.' (இருக்கு 1—42.)

'யமன் அரசனாயிருக்கும் மேலுலகத்துக்கு என்னைக்கொண்டு போகட்டும். அங்கே நான் அழிவில்லாதவனாயிருப்பேன். இந்திரனுக்குச் சோமரசம் கொடு.' (இருக்கு 11—113.)

மேற்கண்ட வடமொழி மறைகளின் பகுதி முதலியவற்றை உய்த்து நோக்கின், அம்மறைகள் பெரும்பான்மையும் ஆரியர் என்னும் ஒருவகுப்பினர்க்கே உரித்தாகப் பல முனிவர்களால் ஓதப்பட்டனவென்பதும் ஆரியர் என்பார் வடதேசத்திலிருந்து படையெடுத்து வந்து இப்போது (Panjab) பஞ்சாப் என்று

சொல்லப்படும் தேசத்தில் புகுந்து, அங்கிருந்த பழங் குடிகளை அரசர்களோடும் வென்று அவர்களைத் துரத்திவிட்டார் என்பதும், ஆரியர் உழவுத்தொழிலும் மாடு வளர்க்கும் தொழிலும் புரிந்து வாழ்ந்தவர் என்பதும், ஆரியர் வேள்விகளைச்செய்து மது மாமிசம் உண்ணும் வழக்கினர் என்பதும், அங்ஙனம் வேள்வி நடத்து வதைப் பழங்குடி மக்கள் இகழ்ந்து அவர்க்குத் தீங்குபுரிந்தார் என்பதும் வெளியாகின்றன. ஆரியர் வழிபடும் தெய்வங்கள் சூரியன், அக்கினி, இந்திரன், வருணன், யமன் முதலியோர் என் பதும் தெரிகின்றது. கடவுளின் இயல்பும், உயிர்களின் இயல் பும், உயிர்கள் கடவுள் மாட்டு அன்புசெய்து வழிபடும் முறையும் பிறவும் இம்மறைகளில் காண்பதரிது. இக்கருத்துப் பற்றியே

'வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம்இங் கொருகால் ஓதில்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே'

(நால்வர் நான்மணி மாலை.)

என்று சான்றோர் ஒருவர் அறைவார் ஆயினர்.

இனித் தமிழ் மறைகள் எல்லாம் இறைவன் இயல்பும் பெரு மையும், உயிர்களின் இயல்பும் சிறுமையும் காட்டி, உயிர்கள் சிறுமையின் நீங்கி இறைவன் திருவடியில் சேர்ந்து உய்யும் திறனை வேண்டிக் கொள்ளுதலே கருத்தாக உள்ளன. சுருங்கச் சொல்லின், தன்னை மறந்து இறைவனையே நாடச் செய்வனவாம். ஒரு வகுப்பினர் வரலாற்றையாவது போர் எழுச்சியையாவது பேசுவனவே அல்ல. இதனை அடியில் காட்டும் பாடல்களைக் கொண்டு அறிந்து கொள்க.

'கோணகப் போல்தற் கோல்வளைக்கை மாதாள்
பூணகம் பாகமாப் புல்கி அவளொடும்
ஆணகம் கர்தல்செய் ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே'

'மாறாத வெங்கூற்றை மாற்றி மலைமகளை
வேறாக நில்லாத வேடமே காட்டினான்
ஆறாத தீயாடி ஆமாத்தூர் அம்மானைக்
கூறாத நாவெல்லாம் கூறாத நாக்களே'

'தாளால் அரக்கன்தோள் சாய்த்த தலைமகன்றன்
நாள் ஆதிரை யென்றே நம்பன்றன் நாமத்தால்
ஆளானார் சென்றேத்தும் ஆமாத்தூர் அம்மானைக்
கேளாச் செவியெல்லாம் கேளாச் செவிகளே'

(திருஞான-தேவாரம்-திருவாமாத்தூர்.)

'மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில்உள்ளது நீறு
செந்துவர்வாய்உமை பங்கன்திரு வாலவாயான்திரு நீறே

'முத்திதருவது நீறு முனிவர்அணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர்புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவஇனியது நீறு
சித்திதருவது நீறு திருவாலவாயான் திரு நீறே'

'வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல
[வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென் உளமே
[புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
[சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கும்
[மிகவே.

(ஷை—திருவாலவாய்.)

'இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடு துறையரனே'
(ஷை—ஆவடுதுறை.)

'ஒரு முழமுள்ள குட்டம் ஒன்பது துளையுடைத்தாய்
அரைமுழம் அதன் அகலம் அதனில் வாழ் முதலை ஐந்து
பெருமுழை வாய்தல் பற்றிக் கிடந்து நான் பிதற்றுகின்
றேன்
கருமுகில் தவழும் மாடக் கச்சியே கம்பனீரே'
(திருநாவுக்கரசு—திருவேகம்பம்.)

'மனமெனும் தோணிபற்றி மதியெனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச் செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போதறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே'
(ஷை—திருவொற்றியூர்.)

'உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர் நெய் அட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கின்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே'
(ஷை—தனித்திருநேரிசை.)

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்
[சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்
[ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'
(ஷை.—கோயில் திருவிருத்தம்.)

'பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலர்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலர்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை யாகிக் கழிவரே'

'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்க்கச் சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.'

'விறகிற்றீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே'

(ஷை—தனித்திருக்குறுந்தொகை.)

'இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எரியும் [காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்ட [மூர்த்தியாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவும் [தம்முருவும் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர் புன் சடையடிகள் [நின்றவாறே'

(ஷை—நின்றதிருத்தாண்டகம்)

'தேடுவன் தேடுவன் செம்மலர்ப்பாதங்கள் நாடொறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன் கைபிடித்து மகிழ்ந்துளே
ஆடுவன் ஆடுவன் ஆமாத்தூர் எம்மடிகட்கே'

(சுந்தரமூர்த்தி—தேவாரம்—திருவாமாத்தூர்)

'பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே'

(ஷை—திருத்தொண்டத்தொகை.)

'சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக்காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித்தமிய னேற்கே'

(திருவாசகம்.)

'இன்றெனக்கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீ அல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே' (ஷை)

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே' (திருமந்திரம்)

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு' (திருக்குறள்)

'குரைகடலை அடல் அம்பால் மறுக எய்து
குலைகட்டி மறுகரையை அதனால் ஏறி
எரி நெடுவேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன்
இன்னுயிர் கொண்டு அவன் தம்பிக்கு அரசும் ஈந்து
திருமகளோடு இனிதமர்ந்த செல்வன் தன்னைத்
தில்லை நகர்த் திருச்சித்திர கூடந்தன்னுள்
அரசமர்ந்தான் அடி சூடும் அரசையல்லால்
அரசாக எண்ணேன் மற்றரசு தானே'

(பெரிய திருமொழி).

ஈண்டு எடுத்துக் காட்டப்பட்ட தமிழ் மறைகளை வடமொழியாளர் உய்த்துணர்ந்து கொள்ளும் தவப்பயன் திருவருளால் வாய்க்கப்பெறும் காலத்தில், அவர்க்கு அவ்வடமொழி மறைகள் கரும்பும் பாலும் ஆனல், தமிழ் மறைகள் கட்டியும் நெய்யும் ஆமெனக் கண்டு கொள்வர்.

பண்டைக் காலத்து வடமொழியாளர் தமிழ் மொழியிலே இருந்த மறைகளை மிகவும் பாராட்டி உள்ளார். காமிகாகமம் என்னும் வடமொழி நூலிலே, 'தமிழ்த் தெய்வப் பாட்டுக்களை நிருத்த முடிவாகவும் ஓதுக,' என்று கூறப்பட்டிருப்பது காண்க.

இனி வடமொழி மந்திரங்களின் தன்மை யாதென்று ஆராய்வாம்.

இருக்கு வேதத்தில் கண்ட விவாகமந்திரம்.

மணமகனுக்கும் மணமகளுக்கும் எடுத்துச் சொல்வது.

'நீங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். பிரிந்திருக்கலாகாது. பலவிதமான உணவுகளை உண்ணுங்கள். உங்கள் வீட்டிலேயே இருந்து உங்கள் பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும் இனிதுற வாழ்க.'

மணமகனும் மணமகளும் விடையாக மொழிவது.

'கடவுள் எங்களுக்குப் பிள்ளைகளைக் கொடுப்பாராக. எங்களைக் கடவுள் முதிர்ந்த வயதிலும் ஒற்றுமைப்படுத்தி வைப்பாராக.'

மணப் பெண்ணுக்கு எடுத்துச் சொல்வது.

'நல்ல காலத்தில் உன்னுடை நாயகன் வீட்டுக்குள் தங்கியிருப்பாயாக. நம்முடைய ஆண் வேலைக்காரர்களுக்கும் பெண் வேலைக்காரர்களுக்கும் நம்முடைய மாடுகளுக்கும் நல்லது செய்வாயாக.'

'உன்னுடைய கண்களில் கோபக்குறி காட்ட வேண்டாம். உன்னுடைய நாயகனுக்கு இன்பத்தை உண்டு பண்ணுக. நம்முடைய மாடுகளுக்கு நன்மை செய்க. உன் மனம் மகிழ்ச்சியோடு இருக்க. உன் அழகு விளங்க. உன் பிள்ளைகள் வீராயிருக்க. கடவுளிடத்தில் அன்பாயிருக்க.'

'ஓ இந்திரனே, இந்தப் பெண் செல்வமுடையவளாகச் செய்க. நல்ல பிள்ளைகளைப் பெற அருள் செய்க. இவளுக்குப் பத்துப் பிள்ளைகள் பிறக்க வேண்டும். குடும்பத்தில் பதினொரு ஆண் பிள்ளைகள் இருக்க வேண்டும்.

'உன் மாமனாரும் மாமியாரும் உன் சொல்லுக்கு இணங்கும்படி நடக்க. உன் நாயகன் தம்பிகளையும் தங்கைகளையும் ஆளுக.'

மணமகனும் மணமகளும் விடை சொல்வது.

'தெய்வங்கள் எல்லாம் எங்களது மனத்தை ஒற்றுமைப் படுத்தி வைக்கவேண்டும். எங்களை அவர்கள் சேர்த்துவைக்க வேண்டும்' (இருக்கு 10-85. 42-47)

இனி, வடமொழியாளர் எப்போதும் போற்றி உச்சரிக்கும் 'காயத்திரி' என்னும் மந்திரம்.

'ஓம் தத்ஸவி தூர்வரேண்யம் பர்க்கோ தேவஸ்யதீமஹி தியோ யோந; ப்ரசோதயாத்.' என்பது.

இதற்குப் பொருள்;

'நாம் அன்போடு செய்யும் யாகங்களுக்கு உதவி செய்யும் சூரியன் என்னும் தெய்வத்தின் விரும்பத் தக்க ஒளியை நாம் சிந்திக்கிறோம்.' என்பது.

இதற்குச் சைவசித்தாந்தக் கொள்கையாளர் பொருள் கூறுவது ஒருவகை. அது வருமாறு.

'எது நம்முடைய அறிவை எழுப்புகின்றதோ அந்தச் சூரியனிடத்தில் விளங்கும், வணங்கத் தக்க பர்க்கன் என்னும் சிவபிரானுடைய அருளொளியை நாம் சிந்திக்கிறோம்.' என்பது.

அரதத்த சிவாசாரியர் 'உயர் காயத்திரிக்கு உரியபொருள் ஆகலின்' என்று ஓதியதும் அதுபற்றி. ஆயினும் இக்காயத்திரி மந்திரம் பல மதத்தினரும் பலபடியாகப் பொருள்கொள்வதற்கு ஏற்றதா யிருந்தமையால் வடமொழியாளருட் பெரும்பாலார், உண்மைப் பொருள் கண்டு உய்யும்வகை யறியாது மயங்கினர் என்பது 'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்

அருக்கனுவான் அரனுரு அல்லனோ
இருக்கு நான்மறை ஈசனையே தொழு
கருத்தினை நினைப்பார் கன்மனவரே.' என்னும்

திருநாவுக்கரசர் தேவாரத்தால் அறியக் கிடக்கின்றது. இத் திருநாவுக்கரசர் வீடு பெறுவதற்குத் துணைசெய்தது இக்காயத்திரி மந்திரம் அன்று; பண்டைத் தமிழ் மந்திரமேயாம்.

மேலே கூறியபடி, வடமொழியில் காணப்படும் மந்திரங்களின் வேறாக, நம் தமிழ்மொழியிலே மந்திரங்கள் பண்டைக் காலத்தில் இருந்தன என்பது

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப.' என்னும்

தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தாலும், அச்சூத்திரவுரையில் 'தானே என்று பிரித்துக் கூறினன், இவை தமிழ்மந்திரம் என்றற்கும், பாட்டாகிய அங்கதம் எனப்படுவனவும் உள' அவை நீக்குதற்கும் என உணர்க' என்று பேராசிரியர் உரைத்ததனாலும் துணிந்து கொள்ளப்படும்.

'ஆகவே, அப்பேராசிரியர், 'பிறப்பே குடிமை' என்னும் மெய்ப் பாட்டியற் சூத்திரவுரையிலே, 'யாண்டென்பது ஒத்த வாறு என்னையெனின், பன்னீரி யாண்டும் பதினாறி யாண்டும் பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவம் என்பது வேதத் தின் ஒப்ப முடிந்தது' என்று கூறிச் சுட்டிய வேதமும் தமிழ் மறையே யாமெனத் துணியப்படும்.

'பெயர் நிலைக் கிளவியின் ஆஅகுநவும்' என்னும் சொல்லதி காரச் சூத்திரத்திலே, 'மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும்' என்பதனால் சுட்டப்பட்ட மந்திரமொழி இத் தமிழ் மந்திர மொழியே யாம். இச்சூத்திரத்துக்குச் சேனாவரையர் கூறிய உரையிலே, 'இம்மந்திரமொழியின் இயல்பை மந்திர நூல் வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்றார். அதனால் மந்திரநூல் என்ப தொன்று தனியாக அக்காலத்தில் தமிழில் நிலவுற்றதென்பதும் துணியப்படும். மற்று இதனை வடமொழி மந்திரம் என்று கொள்ளலாகாதோ வெனின், கொள்ளலாகாது. வடமொழி முடிபு பற்றிய இலக்கணம் கூறுதல் தொல்காப்பியர்க்கு மர பன்று.

'தெய்வம் அஞ்சல்' என்னும் தொல்காப்பியத்து மெய்ப் பாட்டியற் சூத்திரவுரையிலே, 'அவனில் தான் (தலைவனில் தலைவி) வேறல்லளாக மந்திர விதியில் கூறப்பட்டமையின், அவனால் அஞ்சப்படும் தெய்வம் தனக்கும் அஞ்சப்படும்' என்று அப் பேராசிரியர் குறித்ததும் தமிழ் மந்திரமேயாம்.

'மன்னியஇத் தமிழ்க்கிளவி மந்திரங்கள் கணித்தடியேன்
செந்நெறியில் வழுவாஇத் திருக்காஞ்சி நகர்வரைப்பின்
உன்னனுக்க னாகிஇனி துறைந்திடவும் பெறவேண்டும்
இன்னவரம் எனக்கருளாய் எம்பெருமான் என்றிரந்தான்'

என்னும் காஞ்சிப் புராணச் செய்யுளால் அகத்தியர் ஓதியது தமிழ் மந்திரமாதல் அறிக.

நக்கீரர் ஒருவன் சாவவும் ஒருவன் வாழவும் பாடிய மந் திரமும் தமிழ் மந்திரமே. அவர்

'மா முயல் விட்டுக்
காக்கை பின்போம் கலவர் போலவும்
விளக்கங் கிருப்ப மின்மினி கவரும்
அளப்பரும் சிறப்பில் ஆதர் போலவும்
கச்சம் கொண்டு கடுந்தொழில் முடியாக்
கொச்சைத் தேவரைத் தேவரென் றெண்ணிப்
பிச்சரைப் போல்வோர்
ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
வட்டணை பேசுவர் மானுடன் போன்று'

என்று, கோபப் பிரசாதம் என்னும் திருப்பாட்டில் கூறினர். ஆதலின், ஆரியர் நூல்களும் மந்திரங்களும் அவர்க்குப் பற்றிலா வெனத் தெளிக

புறப்பொருள் வெண்பா மாலையில் 'பூழ்வென்றி' என்னும் துறைக்கு உதாரணமாகக் காட்டப் பட்டுள்ள

'சொல்லும் சுவட்டவர் சொல்லுக சொல்லுங்கால்
சொல்லும் பலவுள சொன்னபின்—வெல்லும்
நலம்வர நாடி நடுங்காது நூற்கண்
புலவரால் ஆய்ந்தமைந்த பூழ்.' என்னும்

வெண்பா வுரையிலே, 'சொல்லக் கடவ மந்திரம் பல ஆவன:— தீற்றும் அரிசி ஓதும் மந்திரமும், பச்சிலை பிசைந்து தடவும்போது சொல்லும் மந்திரமும், செவியுள்ளூறுத்து ஓதும் மந்திரமும்.' என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மந்திரமெல்லாம் தமிழ் மந்திரங்களே. வடமொழி மந்திரம் அன்று. ஆகவே, காடை என்னும் பறவைக்கு ஒரு நூல் பண்டைக் காலத்தில் தமிழில் இருந்தது என்பது தேற்றம். அந்நூலில் 'கோழிவொன்றிப்' பாட்டின்உரையால்கோழிக்கும் ஒரு நூல் பண்டைக் காலத்தில் தமிழில் இருந்ததென்று அறியப்படுகின்றது.

யானைக்கு ஒரு நூல் பண்டைக் காலத்தில் தமிழில் இருந்த தென்பது 'பொருளொடு புணராச் சுட்டுப் பெயராயினும்' என் னும் சொல்லதிகாரச் சூத்திரத்துச் சேனாவரையர் உரையால் அறியக் கிடக்கின்றது.

அவ்வாறே குதிரை, ஆடு, எருது முதலிய விலங்குகளுக்கும், கிளி, பூவை, கவுதாரி, காரி முதலிய பறவைகளுக்கும், பாம்பு, தேள் முதலியவற்றிற்கும், மருந்துவகைக்கும் நூல்கள் இருந்தன.

கொல்லன், தச்சன், கொற்றன் முதலியோர் தொழில்களுக்கும், பொன் வகை மணி வகைகளுக்கும், நிலவளவு, நெல்லளவு, பொழுதளவு முதலியன பற்றிக் கணக்கு நூல்களும் இருந்தன. வான நூலும் இருந்தது. சுருங்கக் கூறுமிடத்துத், தமிழில் இல்லாத நூல் பிறமொழியில் இல்லையென்று துணிந்து சொல்லலாம். ஆயினும் அவையெல்லாம் பிறமொழி நூல்களாகிய பாம்புகளால் மறைபட்டுக் கிடக்கின்றனவென அறிக.

இத்துணையும் கூறியவாற்றால், இவ்வுலகத்தில் மக்களால் பேசப்படும் மொழிகள் எல்லாம் காரியப் பொருள் ஆதலாலும், சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய மக்களால் உண்டாக்க முடியாமையாலும், பேரறிவும் பேராற்றலும் உடைய இறைவனாலே, மக்கள் என்று தோன்றினார்களோ அன்றே உண்டாக்கப்பட்டன என்பதும், அம்மொழிகளுள்ளே தமிழ் மொழியும் வடமொழியுமே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களையும் எடுத்தோதும் சிறப்புடையன என்பதும், அவ்விரு மொழியுள்ளும் அந்நான்கு பொருளையும் பழுதற ஓதும் முறைமையினாலே தமிழ் மொழியே சிறந்தது என்பதும், தமிழ் என்பதற்கு இனிதாகிய மொழி என்பது பொருள் என்பதும், தமிழ் ஒரு தனி மொழி யென்பதும், தமிழைப்பற்றி இலக்கணக் கொத்து நூலாரும் பிரயோக விவேக நூலாரும் கூறியது தவறென்பதும், தமிழிலே முற்காலத்திலே மறைகளும் மந்திர நூல்களும் பிற நூல்களும் நிலவுதலுற்றன என்பதும், வடமொழி வேதங்கள் பெரும்பாலும் ஆரியர் படையெழுச்சியை அறிவிப்பன என்பதும், வெறும் வேதமும் மந்திரமும் வீடு பெறுவதற்கு வாயில் அல்லவென்பதும், அன்பே வாயிலாக வீடு பெற்றார் தமிழே ஓதிய பெரியார் பலர் என்பதும், இருக்கு முதலிய வடமொழி வேதங்களினும் தேவாரம் திருவாய்மொழி முதலிய சிறப்புடையன என்பதும் உணர்த்தப்பட்டன. (தொடரும்.)

உ

கல் வெட்டுக்களால் அறியப்படும் சில தமிழ்ப் புலவர்கள்.

திருவாளர், T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், கும்பகோணம்.

நம் நாட்டில் எடுப்பிக்கப்பெற்ற திருக்கோயில்கள் பலவாகும். அவற்றுள் சில பிற வேந்தர்களது படையெழுச்சியினுலும் வேறுபொருட்டுக்களாலும் அழிந்தொழிந்தன. ஆயினும் எஞ்சியுள்ள திருக்கோயில்கள் இன்னும் நிலைபெறுடையனவாகி நம் தமிழ் மக்களது பண்டைச் சிறப்ப வன்மையை இனிது விளக்கும் கலங்கரை விளக்குகள் என்று புகழுமாறு நிலவுகின்றன. பழைய தமிழ் வேந்தர்களான சேர சோழ பாண்டியர்களது ஆட்சிக் காலங்களில் பொறிக்கப் பெற்ற கல் வெட்டுக்களையும் பிற கல் வெட்டுக்களையும் இத்திருக் கோயில்களில் நாம் இன்றுங் காணலாம். இக் கல் வெட்டுக்களால் உணரப்படும் அரிய பெரிய பழைய செய்திகள் எத்துணையோ பலவாம். இவற்றுள் சில புலவர்களைப் பற்றிய செய்திகளும் உள்ளன. இப்புலவர்கள் கல் வெட்டுக்களாலன்றி வேறுவகையில் நம்மனோரால் அறியப்படாதவர்களாயிருத்தலின் இன்னோரைப்பற்றிய வாலாற்றைக் கல் வெட்டுக்களில் கண்ட வளவு அடியில் குறிக்கின்றேன்.

1. உத்தண்ட வேலாயுதபாரதி:—இவர் தொண்டை மண்டலத்தில் காலியூர்க் கோட்டத்திலுள்ள உத்தரமேரூரைச் சார்ந்த மகிபால குல கால சேரியில் வதிந்தவர்; வீரவல்லித் தேவராசப் பட்டர், காசிநாதர், குப்பையன் என்றும் வழங்கப்பட்டவர்; அந்தணர் குலத்தினர்; திருநாவுக்கரைய தேவருக்குச் சூலைநோய் தீர்த்தருளிய திருவதிகை வீரட்டான முடைய மாதேவர் மீது ஒரு கலம்பகம் பாடியவர். இவர் இக்கலம்பகம் பாடியமைக்காகச்

சகம் 1458 ஆம் ஆண்டு துன்முகியில் ஆடித் திங்கள் 10 ஆம் நாளில் திருவதிகைக் கோட்டைக்குள் அந்தணர் வீதியில் ஒரு வீடும் புன்செயில் ஒரு மாவும் நன்செயில் இரண்டு மாவும் இவருக்குப் பரிசிலாக அளிக்கப் பெற்றுள்ளன. இது நிகழ்ந்தது கி. பி. 1536-ஆம் ஆண்டாதலின் இவர் பதினாறாம் நூற்றாண்டின் இடையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் ஆவர். இச் செய்திகள் திருவதிகையிலுள்ள திருக்கோயிலில் வரையப் பெற்றுள்ளன. (Inscription No. 376 of the Madras Epigraphist's Collections for the year 1921).

2. கோடிக் கொண்டான் பெரியான் ஆதிச்ச தேவன் :— இவர் பாண்டி நாட்டில் சிறு பெருச்சியூரில் விளங்கிய புலவர் ஆவர் ; கண்டன் உதயஞ் செய்தான் என்ற ஒரு பாண்டி நாட்டுத் தலைவன் மீது பிள்ளைத் தமிழ் இயற்றி அவனால் சாத்தனேரி என்ற ஊரில் அளிக்கப்பெற்ற நிலங்களைப் பரிசிலாகப் பெற்று வாழ்ந்தவர். இவர் இந்நூலை இயற்றிப் பரிசில்பெற்றது கி. பி. 1230 ஆம் ஆண்டாகும் என்று இராமநாதபுரம் சில்லா திருப்புத்தூர் தாலூகாவிலுள்ள பெருச்சிக்கோயிலில் பொறிக்கப் பட்டுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. (Inscription No. 75 of 1924). ஆகவே இவர் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய புலவர் ஆவர். கண்டன் உதயஞ் செய்தான் தலைவன் இப்புலவரை 'நமது புலவர்' என்று மிகவும் என்னும் பாராட்டி யிருத்தலால் இவர் அவனது அவைக்களப் புலவராக இருந்திருத்தல் வேண்டும்.

3. காராணை விழுப்பரையன் :— இவர் பாண்டி நாட்டில் மதுரைமாநகரில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் ஆவர்; கி. பி. 1216 முதல் கி. பி. 1238 வரையில் பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனது அவைக்களப் புலவராக வீற்றிருந்து பெருமை எய்தியவர் ; எனவே, கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் விளங்கியவராதல் வேண்டும். இவர் மேற்கூறிய 'பெரியார் ஆதிச்சதேவன்' என்ற புலவருக்கு உற்ற நண்பராயிருந்தனரென்று பெருச்சிக் கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. (Ins. No. 75 of 1924).

4. **கவிராயர் ஈசுவரசிவ உடையார்** :—இப் புலவர் 'களர்' என்ற ஊரினர்; முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குத் திறை செலுத்திவந்த பாண்டிநாண்டுக் குறுநில மன்னர்களுள் ஒருவனாகிய திருக்காணப் பேருடையான் மழவச் சக்ரவர்த்திக்குத் தமிழாசிரியராக விளங்கியவர். இவருக்கு விளக்கிளிநல்லூர் என்ற ஊர் இத் தலைவனால் முற்றூட்டாகக் கி. பி. 1236 ஆம் ஆண்டில் அளிக்கப் பெற்றது என்பது திருப்புத்தூர் தாலூகாவில் அரண்மனைச் சிறுவயல் என்ற ஊரிலுள்ள ஒரு கல் வெட்டால் அறியப் படுகின்றது. ஆகவே இப்புலவரும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்தவர் என்பது நன்கு புலப்படுகின்றது. (Inscription No. 47 of 1924).

5. **காசிக்கலியன் கவிராயன்** :— இவர் திருநெல்வேலி சில்லாவிலுள்ள தென்காசியில் வாழ்ந்த ஒரு புலவர் ஆவர்; கலி 4689 ஆம் ஆண்டில் தென்காசியில் முடி சூடிக்கொண்ட வீர பாண்டியன்மீது முடி சூட்டு மங்கல நாளில் நாண்மங்கலம், குடைமங்கலம், வாண்மங்கலம் இவற்றைப்பாடி அரசனைப் பெருமையுறச் செய்தவர். இச்செய்தி, தென்காசியிலுள்ள கோயிற் கோபுரத்தில் வரையப் பெற்றுள்ளது.

'கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்
மற்றடந்தோள் வேல்வீர மாறனுக்குச்—சொற்புனைந்தான்
நாண்மங் கலமும் நவிற்றுகுடை மங்கலமும்
வாண்மங் கலமும் வகுத்து'

என்னும் வெண்பாவினால் இனிது உணரப்படுகின்றது. இப் புலவர், வீரபாண்டியனது முடிசூட்டு மங்கல நாளில் பாடிய பாடல்கள் தென்காசியிலுள்ள விசுவநாத சுவாமி திருக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றை அடியிற் காண்க :—

நாண்மங்கலம்.

சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடைப்
பார்கொண்ட வாள்வீர பாண்டியனென்—றேர்கொண்ட
கானுலா மாலைக் கனகமகு டம்புனைந்தான்
மானவே லான்பிரா மன்.

குடைமங்கலம்.

சேணுலவு வெண்டிங்கட் செல்வனெனத் தண்ணென்று
நீணிலமோ ரேழும் நிழற்றுமே—பேணிவந்து
பூவேந்த ரேத்தும் புகழ்வீர பாண்டியனங்
கோவேந்தன் கொற்றக் குடை.

வாண் மங்கலம்.

பற்றலர்மண் கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூருமே—விற்றடந்தோள்
வில்லவனை வென்று கொண்ட வீரமா றன்செழியன்
வல்லமெறிந் தானேந்து வாள்.

வீரபாண்டியன் முடிசூடிய காலம்.

நண்புற் றெதிர்ந்தகலி நாலா யிரத்தறு நூற்
றெண்பத்தொன் பானி லிருங்கடல்சூழ்—மண்பெற்று
மின்னுமகு டம்புனைந்தான் வேல்வீர மாறனென
மன்னவர்கோ மானபிரா மன்.

நாண்மங்கலம், குடைமங்கலம், வாண்மங்கலம் இவற்றின் இலக்கணங்களைத் தொல்காப்பியம் புறத்திணையியலிலுள்ள 'தாவினல்லிசை' என்னும் சூத்திரத்தினால் நன்கறியலாம். வீரபாண்டியனைப் பாடியுள்ள இப்புலவர் கி. பி. பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர் ஆவர். (Inscription No. 10 of the Travancore Archaeological Series Vol. I.)

6. வீராண்ட பல்லவரையர்:—இவர் மூன்றாங் குலோத்துங்க சோழனது அவைக்களப் புலவருள் ஒருவர். இவரது வேண்டுகோளால் காளவிநோத நிருத்த பேரையன் என்பான் திருக்கடவூர் சிவாலயத்திற்கு நட்டுவ நிலையாக அரசனால் நியமனஞ் செய்யப் பெற்றான். இஃது இக்குலோத்துங்க சோழனது ஆட்சியின் 23-ஆம் ஆண்டாகிய கி. பி. 1201ல் நிகழ்ந்தது. எனவே, இப்புலவர் பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். இச்செய்தி திருக்கடவூரிலுள்ள ஒரு கல் வெட்டால் புலப்படு கின்றது. [Inscription No. 255 of 1925.]

7. பெருநம்பி :—இவர் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த சிறந்த தமிழ்ப் புலவர் ஆவர்; இயல் இசை நாடகங்களாகிய முத்தமிழிலும் வல்லவர்; கடைச் சங்கப் புலவராகிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாது மாபில் தோன்றியவர்; பொய்யாமொழி மங்கலம் என்ற ஊரை முற்றூட்டாகப் பெற்றவர். இவரது வரலாறு செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள திருக்கச்சூர் ஆலக் கோயிலிலுள்ள ஒரு கல் வெட்டால் அறியப்படுகின்றது. [Inscription No. 301 of 1909]

8. பாச்சில்வேள் நம்பன் :—இப் புலவரது இயற் பெயர் நம்பன் என்பது. இவர் சோழ மண்டலத்தில் மழ நாட்டிலுள்ள திருப்பாச்சிலாச் சிராமம் என்ற நகரத்தின் தலைவர். இவர் சுவரன் மாறனாகிய இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையனைப் பாடிய புலவர்களுள் ஒருவர். இம் முத்தரையன் திருக்காட்டுப் பள்ளியின் பக்கத்திலுள்ள நியமம் என்ற ஊரில் ஒரு பிடாரியார் கோயிலெடுப்பித்து அக்கோயிலிலுள்ள தூண்களில் தன் மீது பாடப்பெற்ற பல பாடல்களையும் அவற்றைப் பாடிய புலவர் களது பெயர்களையும் பொறித்துள்ளான்.

அக்கோயில் இடிந்த பின்னர் அதிலிருந்த கற்களையும் தூண்களையும் கொணர்ந்து திருக்காட்டுப்பள்ளிக்கு அண்மையில் இரண்டு மைல் தூரத்திலுள்ள செந்தலை என்று தற்காலத்து வழங் கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்தில் ஒரு சிவாலயம் அமைத்துள்ளனர். இதில் நமது புலவராகிய பாச்சில்வேள் நம்பன் என்பார் பாடிய பாடல்கள் காணப்படுகின்றன. இப் பாடல்கள் எல்லாம் கட்டளைக் கலித்துறைகளாகவும் வெண்பாக்க ளாகவும் இருக்கின்றன; இவற்றுள் சில அடிகளும் சீர்களும் சிதைந்துள்ளன. காலஞ்சென்ற திரு. கோபிநாதராயர் அவர்கள் M. A. இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தவன் என்று கூறியுள்ளனர். (செந்தமிழ்-தொகுதி 6 பக்கம் 10). எனவே, இவ் வேந்தனைப் பாடியுள்ள புலவராகிய பாச்சில்வேள் நம்பன் என்பவரும் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும்.

9. ஆசிரியர் அநிருத்தர்:—இப் புலவர் பெருமானும் மேற் கூறிய பெரும் பிடுகு முத்தரையனைப் புகழ்ந்து பாடியவருள் ஒருவ ராவர். இவரது பாடல்களும் செந்தலையிலுள்ள சிவாலயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இவரது ஊர் முதலான பிற செய்திகள் புலப்படவில்லை.

10. கோட்டாற்று இளம்பெருமானார் :—இவர் கோட் டாறு என்ற ஊரில் வாழ்ந்த புலவர்போலும். இவரும் பெரும் பிடுகு முத்தரையனைப் பாடியவர். இவரது பாடல்கள் செந்தலைச் சிவாலயத் தூண்களில் உள்ளன.

11. அமருண்ணிலையாயின குவாவங்காஞ்சன் :—இப்புலவர் சோழமண்டலத்துக் கிழார் கூற்றத்திலுள்ள பவதாயமங்கலம் என்ற ஊரில் வாழ்ந்தவர். பெரும் பிடுகு முத்தரையனைப் பாடிய வருள் இவரும் ஒருவர் ஆவர். இவர் அவ்வேந்தன் மீது பாடிய பாடல்கள் செந்தலைக்கோயிலிலுள்ள தூண்களில் வரையப்பட்டிருக் கின்றன. ஆசிரியர் அநிருத்தர், கோட்டாற்று இளம்பெருமானர், அமருண்ணிலையாயின குவாவங்காஞ்சன் ஆகிய இப்புலவர்கள் எல்லோரும் பெரும் பிடுகு முத்தரையன் காலமாகிய கி. பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்கள் என்பது ஒருதலை. இனி, இவர்கள் பாடிய பாடல்களுள் சிலவற்றை அடியிற்காண்க.

ஏறி விசும்பு மிருநிலமாய்த் தென்பவால்
மாறன் செருவேன் மறங்கனன்று—சீறக்
கொடிமாடத் தண்கொடும்பைக் கூடாத மன்னர்
நெடுமா மதிலிடிந்த நீறு. (அமருண்ணிலை பாடியது.)

எண்கி னிருங்கிளையு மேறற் கரியவேய்
வண்கைச் செருமாறன் வாள்காய்த்தி—விண்படர்வான்
சேணுடு தாழூர்ந்த மாநாடக் கண்ணனூர்க்
கோநாடர் புக்கொளித்த குன்று. ஷ

வெங்கட் பொருக (ளஞ்) சேர் வெல்கொடியோன் வாண்மாறன்
செங்கட் கரும்பகடு சென்றுழக்க—அங்குலந்தார்
தோழுந்தி மாவழுந் நச் செங்குருதி மண்பரந்த
வூழுந்தி யூரொன்னு மூர். (பாச்சில்வேள் நம்பன் பாடியது.)

திருச்சுழியல் வெண்பா அந்தாதி.

திரு கி. அரங்கராசன் அவர்கள், தஞ்சை.

(முற்றொடர்ச்சி துணர் 5, பக்கம் 154.)

அக. ஓதிற் புவனேசா! உன்னடியார்க் கேவழங்கச்
சூதிற் பொருள்செய்த தூயவரோ—வாதிற்
பொருள்செய் எமர்களோ மூர்க்கரெவர்? போந்திங்
கிருள்செய் மிடற்றாய்! இயம்பு.

தூயவர்—பரிசுத்தரான நாயனார்; எமர்களோ—(தம் நலங் கருதும் பரர்களான) நாங்களோ; மூர்க்கர்—மூர்க்க நாயனார்; முரட்டுத்தனத்தை யுடையவர், போந்திங்கு இயம்பு—என் முன்னே வந்து சொல்வாயாக. இக்கவியை

'சூதினாற் பொருள்செய் துன்னடி யார்க்கே துறத்தமெய் யன்பரோ மூர்க்கர்
வாதினாற் பொருள்செய் தண்டுடுத் துவக்கு மறத்தொழி லெமர்களோ மூர்க்கர்
சீதளக் கதிரோ னெனவுல கேத்தத் தினமும்வெண் மதி மலர் ததைந்த
காதநீள் சுனையின் மூழ்கிநின் றேறுங் கற்குடி மாமலைப் பானே'

என்ற பின்னுள்ளார் கவியோடு ஒப்புநோக்குக.

அஉ. இயக்கித் தளைநீக்கிப் பாற்பசுவை யெல்லாம்
வியக்கும் வயலூரின் மேய்ப்பான்—நயக்கும்
நறுங்குழற் சிற்றிடைச்சி நாயகனுங் கொன்றை
யுறுங்குழல் அண்டர்கோ னுய்த்து.

நறும் குழல் சிற்றிடைச்சி—நறிய குழலையும் சிறிய இடையினையுமுடையவளான துணைமாலை அம்மையினது [நறிய குழலினையுடையாளோர் ஆயர் மங்கையின்] நாயகனும்—நாயகனாகிய, கொன்றை உறும் குழல்—கொன்றை மலர்மாலை தங்கப்பெற்ற குழலையுடைய [கொன்றைப் பழத்தாலாகிய குழலினையுடைய] அண்டர்கோன்—தேவாதி தேவனான திருமேனிப்பிரான் [இடையர்கள் தலைவனான திருமேனி நாதன்], பால் பசுவை எல்லாம்—மூவகைப்பட்ட ஆன்மாக்களை யெல்லாம் [பால் பொழியும் பசு நிறைகளை யெல்லாம்], தளை நீக்கி இயக்கி—கர்மத் தொடர்பை நீக்கி நன்னெறியில் உய்த்து [தாம்பு தறித்து நடத்திக்கொண்டு], வியக்கும் வயலூரில் உய்த்து—யாவரும் கண்டு வியக்கத்தக்க வளத்தையுடைய வயலூர் என்னும் திருச்சுழியலில் சேர்த்து [வியக்கத் தக்க வயல் நிலங்கள் மிக்க ஊர்களிலே சேர்த்து], மேய்ப்பான் நயக்கும்—பாதுகாக்க விரும்புவான் [மேய்க்க விரும்புவான்].

கொன்றை யுறுங்குழல்—கொன்றைப் பழம்போல நீண்டொழுகிய குழல் எனினுமாம். இச்செய்யுட் கருத்து

'பாச நீக்கிமூ வகைப்ப சுக்களை
மாசின் முத்தியாம் வனத்தின் மேய்த்திடு
மீசன் மின்னைநே ரிடைச்சி காதல
னாசில் பால்வணத் தண்டர் நாதனே'

என்ற திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதிச் செய்புளினும் பயின்று வருதல் காண்க.

அரு. உய்யும் வகையா லுயர்சுழியற் கண்ணுதலைக்
கொய்பு மலர்தூவிக் கும்பிட்டால்—நையுங்
கடைநா ளியமன் கடாவருமுன் எந்தை
விடைதான் வருமால் விரைந்து.

நையும் கடைநாள்—இந்திரியம் அடங்கி அறிவு குன்றும் அந்திம சமயத்தில், எய்யும் மலர்தூவி நுதற்கண்ணுக் கிலக்காகி உயிரிழந்த காமனைப்போல் அல்லாமல் என்பார் 'உய்யும்

வகையால் உயர்சுழியற் கண்ணுதலைக் கொய்யும் மலர்தூவிக் கும்பிட்டால்' என்றார் போலும்.

அச. விரையார் பதத்துணையில் முத்திபுர வேந்தே!
குரையார் கழற்கமலங் கூறார்—பரையார்
சிலம்படியை யேத்தித் தினம்பணிவா ரென்னே
புலம்படியு மேலோர் புகழ்ந்து.

விரை ஆர் பதம்—வாசனை வீசும் திருவடி; கழற்கமலம் என்றது வலது திருவடியை; பரை யார் சிலம்படி என்றது இடது திருவடியை. வாமபாகத்திலேயுள்ள அம்மையினது திருவடியாதலான், பரையார் சிலப்படி என்றார். புலம்படியும் மேலோர்—ஞானக் கடலிலே மூழ்குகின்றவர்களாகிய பெரியோர்; அவர் தாம் சேக்கிழார் முதலியோர் என்க. நற்பதவி யருளுந் திருவடி யாகலானும், கூற்றுதைத்த திருவடி யாகலானும் பெரியோர் எல்லாம் அம்மையினது திருவடியாகிய நின் இடது திருவடியையே பணிகின்றார்களாதலின், வலது திருவடியாகிய கழற்றாமரைக்குள்ள ஏற்றமென்பதேது என வினவுவார்போற் புகழ்கின்றார், என அறிதற்பாற்று.

பிரிவாற்றாத நிலையில் தலைவி குயிலைநோக்கி இரங்கல்.

அரு. புகழ்ச்சிக் குரியையால் பூங்குயிலே! நின்வாய்க்
கிகழ்ச்சி யிலாத்தளிரை யீவேன்—திகழ்ச்சிபெற
பூமான் பணியும் புவனேச னுமெனது
கோமான் வரவொருகாற் கூவு.

தளிர்—மாவின்தளிர். திகழ்ச்சிபெற—(இரணியக் கண்ணனால் தீண்டப்பெற்ற மாசுநீங்கி) ஒளிபெற்று விளங்குவான் வேண்டி, பூமான்—பூதேவியாகியமான்; கோமான்—தலைவன். இச்செய்யுளை

'வாவா மணிவாயான் மாவின் றளிர்கோதிக்
கூவா திருந்த குயிற்பிள்ளாய்—ஓவாதே
பூமாம் பொழிலுடுத்த பொன்மதில்சூழ் காளத்திக்
கோமான் வரவொருகாற் கூவு'

என்று பெரியார் பணித்த பாடலோடு ஒப்புக்காண்க. புகழ்ச்சிக் குரியையால் என்றமையின் இப்பொழுது இகழ்ச்சிக்கே உரியநின்றமை பெறப்பட்டது.

அசு. கூவிக் கொளாமற் புவனேசா! குற்றடிமை
யாவி யெனும்பொருளை யைம்பொறியாம்—பாவித்
திருடர் பறித்துண்ணப் பார்த்திருப்பாய் தீர
புருடர்க் கிதுகொலோ பொற்பு.

கூவிக்கொளாமல்—நின்னிடத்து அழைத்துக் கொள்ளமல். குற்றடிமை—குற்றேவல் செய்யும் இவ்வடியவனது, ஆவி எனும்பொருளை—ஆன்மாஎன்னும் பொருளை. பொற்பு—அழகு; உடனுறைந்தே கீழறுக்கின்றமையின் பாவி, திருடர் என்றார்.

அஎ. பொற்பார் திருமேனிப் பூமீ சனையல்லாற்
கற்பார் பிறிதொன்றைக் கற்பரோ—முற்பாற்
மடுத்தார் கலிமுந்நீர் வார்கடல்வாய்க் கொள்ளா
தெடுத்தான் றிரிசூலத் தேற்று.

கற்பார்-கற்க விரும்புவார்கள். முன்-முன்னொருகாலத்தில், பார் ஆர்கலி முந்நீர் வார்கால் வாய் மடுத்துக் கொள்ளாது—பூமியையெல்லாம் மிக்க ஒலியையுடையதும் மூன்று நீர்மையையுடையதுமாகிய பெரிய கடல் வாய்ப்பெய்து உண்டு விடாமல். ஏற்று—தாங்கி. பூமீசனை நோக்குழி, மற்றைத் திருமால் முதலிய தேவரும் அஃறிணைப் பொருள்களோடு வாசியறக் காணப்பட்டமையின், பிறரொருவரை யென்னாது பிறிதொன்றை எனக் கூறினர் என்க. இச்செய்யுளை

'கற்பா ரிராமபி ரானையல்லான் மற்றுங் கற்பரோ
பொற்பா முதலாப் புல்லெறும் பாதி யொன்றின்றியே
நற்பா லயோத்தியில் வாழுஞ் சராசர முற்றவும்
நற்பாலுக் குய்த்தன னன்முகனர் பெற்ற நாட்டுளே'

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தோடு ஒப்புநோக்குக.

அஅ. எற்ற வடிவே லெரிமழுவாற் கொல்லாமே
கூற்றை மலர்ப்பதத்தாற் கொன்றதெவன்?—சீற்ற
முனியுரியாய்! பூமீசா! முண்டகத்தாட் கன்பின்
முனியுரியா னென்றே மொழி.

எற்ற வடிவேல்—கூர்மைபொருந்திய வேல், சிலாக்கியமான வடிவேல், கையிலே எற்ற வடிவேல். சீற்றம் முனியுரியாய்—கோபத்தையுடைய யானையின் தோலை யுடையவனே. முனி-யானைக் கன்று; இது இப்பொருளாதலை, 'முனிக்குப் பொரு களிறு நீரூட்டும் பொன்னித் துறைசை' என்பதனுன் அறிக. தன் அடியவரான மார்க்கண்டேயனைக் கொல்லவந்த மறலியை, அம்மார்க்கண்டேயனுக்கு உரியதாய்விட்ட மலரடியால் கொல்ல வேண்டுமென நினைத்தோ வேல் முதலிய ஆயுதத்தாற்கொல்லாமல், அம்மலர்ப்பதத்தாற் கொன்றனை, என வினவுகிறார் என்க. இதனுன், கடவுளது திருவடிகள் அடியருக்குரியதாய் இருக்கும் என்ற பொருள் கூறியவாறும். இச்செய்யுளை,

'நடம்புரிதாள் போற்றிநின்ற நன்முனிய தென்றே
இடங்கொள் தமிழ்க்கருவை யீசா—அடுங்கூற்றை
வேலினுற் போர்மழுவால் வெல்லாமற் செங்கமலக்
காலினுல் வென்ற கருத்து'

என்ற திருக்கருவை வெண்பாவந்தாதிச் செய்யுளோடு ஒப்பு நோக்குக.

அகூ. மொழியிற் சிறந்ததமிழ்ச் சுந்தரனே மூவாச்
சுழியற் குறைபரவை தூதா—ஒழிவின்
மனத்துக் கதிக மகிழ்ச்சிதருஞ் சோழன்
தனத்துக் கதிபதியோ சாற்று.

மூவா சுழியல்—என்றும் அழிதலில்லாததாகிய திருச்சுழியல், பிரளயப் பெருவெள்ளத்தும் அழிதலில்லா திருந்தமைப்பற்றி இங்ஙன் கூறினர். சுழியற்கு-சுழியலிடத்து, உருபுமயக்கம். ஒழிவின்-பற்றுதலொழிந்த; மொழியிற் சிறந்த தமிழ்ச் சுந்தரன்-மற்றமொழிகளைக்காட்டிலும் சிறப்புடையதான தமிழ்மொழிக்

குரியவனுன சுந்தரமூர்த்திகள்; தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் ஆதலான், மொழியிற் சிறந்த தமிழ் என்றனர். இனி, இத் தொடர்க்கு மொழியில்—சொல்லுமிடத்து, சிறந்த—சிறப்பினை யுடைய, தமிழ்ச் சுந்தரன்-தமிழ்க் கல்வியிற் பெயர்பெற்ற சுந்தர மூர்த்திகள் என்றும் கூறலாம். ஈண்டுச் சிறப்பாவது எல்லாராலும் நன்கு மதிக்கப்பெறல்; அன்றியும், மொழியினுலே உயர்வா யுள்ளனவாந் தமிழ்க் கவிகளைப்பாடிய சுந்தரன் எனவுமாம். அம்மை இம்மைச்செல்வங்களை யளிக்கவல்ல தமிழாகலான் சிறந்த தமிழ் என்ருர். சுந்தரமூர்த்திகளை, சிறந்த தமிழ்ச்சுந்தரன் என்று விசேடித்துக் கூறியவர், குபேரனை அங்ஙன்கூருது, தனத்துக் கதிபதி என்று மட்டும் கூறினமையால், பொருட்செல்வம் கல்விச் செல்வம்போலச் சிறப்புடையதன்றென்பதும், ஒற்றைக் கண்ணை யுடையவனுன குபேரன், அடிகள்போல சுந்தரவடிவத்தையுடைய னல்லன் என்பதும் உணரக்கிடந்தமை அறியத்தக்கது.

கூ௰. சாற்றிற் சகாயமுநான் சார்ந்தே னினியஞ்சேன்
வீற்றிற் கரியுரித்து வேங்கையினைப்—பாற்றி
மறைவனத்திற் சஞ்சரிக்கு மைம்முகந்தான் வந்திங்
குறையுமா லுட்குகைக்க ணுற்று.

வீற்றின்—பெருமிடுக்கினுலே, கரியுரித்து—யானையை யுரித்தும், வேங்கையினைப்பாற்றி—புலியைக் கொன்றும், மறைவனத்தில்—மறைவாயுள்ள கானகத்திலே [திருமறைக் காட்டிலே] சஞ்சரிக்கும்—வசிக்கின்ற, ஐம்முகம்—சிங்கம் [ஐம் முகத்தை யுடையவனுன சிவபிரான்], இங்குவந்து—இங்கே வந்து, உள் குகைக்கண் உற்று—உள்ளிடத்தாகிய குகையிலே உற்று [மன மாகிய குகையிலே பொருந்தி], உறையும்—உறையாநிற்கும்; சாற்றில்—சொல்லுமிடத்து, சகாயமும்—அவ் ஐமுகத்தினது உதவியையும் [சகாய வல்லியையும்] சார்ந்தேன்—பெற்றுளேன்; (ஆதலால்) நான் இனி அஞ்சேன்—நான் இனி ஒன்றுக்கும் பயப்படேன், என்றவாறு.

மறைவனம்—திருமறைக்காடென்னுந் தலம், மறையாகிய வனம்எனலுமாம். மறை-வேதம். மறைந்தபொருளுடைமையான் மறையெனப்பட்டது. ஐம்முகம்—அகன்ற முகத்தையுடைய சிங்கத்திற்குக் காரணக்குறி. மால் உட்குகை எனக்கொண்டு இருண்டதாகிய மனக்குகை யெனலுமாம். மால்—கருமை. கரியையும் வேங்கையையும் கொன்று அவற்றின் தோலை அணிந்து கொண்டு மறைவனத்தில் சஞ்சரிக்கும் பெருமிடுக்கையுடைய பஞ்சானனம் எனது உட்குகையிலே வந்து உறையாநிற்கும்; அப்பாஞ்சானனத்தினது சகாயத்தையுஞ் சார்ந்த நான் இனி ஒன்றுக்கும் அஞ்சேன் எனப் பூமிநாதனைச் சிங்கமாகக்கொண்டு கூறினர். சிலேடையணி.

(தொடரும்.)

உடல் இயலும் உடல் நல வழியும்:

திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள், B.A., L.T.,
உரத்தநாடு.

(முற்றொடர்ச்சி 364-ம் பக்கம்.)

நரம்பு மண்டலம்.

உடலின் பல பங்குகளிலுள்ள ஒற்றுமை:— இதுவரை நம்முடல் எலும்புக் கூட்டம், தசைக் கூட்டம், குருதியோட்ட உறுப்புகள், மூச்சுறுப்புகள், சமிக்கு முறுப்புகள், கழிவாய் களென்றிவற்றாலாயது என்று கண்டோம். இவை ஒன்றோ டொன்று ஒற்றுமையின்றி, ஒன்றற்கொன்று தவாது தனித் தனியே தத்தம் வேலைகளைப் பார்த்துக்கொண்டிருக்குங் கூட் டங்களாமோ எனின், அன்று என்பது சிறிதே உற்று நோக் கினும் புலப்படும். ஒருவன் ஓடுகிறதாக வைத்துக்கொள்வோம். அவன் கால் தசைகள் '(தசைக் கூட்டம்) வேலை செய்வது இயற்கையே. ஆனால் சிறிது ஓடினும் அவனுக்குப் பெருமூச்சு வாங்குவானேன்; குருதியேற்றம் வெகு விரைவாய்த் துடிப் பானேன்? அவன் கால் தசைகள் வேலைசெய்வதால் ஆங்கு உணவுப்பொருள் மிகுதியாய் எரிக்கப்படுமன்றோ? அவ்வெரிச் சலுக்கு இன்றியமையாத உயிர்க் காற்றைக் கொடுக்க நுரை யீரல் (மூச்சுறுப்பு) விரைவாக மூச்சு விடுவதும், இவ்வுயிர்க் காற்றையும் உணவுப் பொருள்களையும் உடைய குருதியை அத் தசைகளுக்கு அனுப்பக் குருதியேற்றம் விரைவாக வேலைசெய் வதும் இயற்கையே. இதனால் எரிச்சல்மிகுந்து உடல் சூடடையு மன்றோ? இச்சூட்டின் மிகையை நீக்க வேர்வைப் பைகள் (கழிவாய்கள்) வேர்வையை ஒழுகச்செய்கின்றன. இவ்வாறு

இவ்வுறுப்புகள் மிகுதியாய் வேலைசெய்யச் செய்ய அவன் ஓடிக் கொண்டே யிருப்பானுபின் இவையாவும் நலிந்து கெடவுங்கூடு மன்றோ? இஃதுண்டாகாதபடி அவன் ஓட்டத்தை நிறுத்த வலி, களைப்பு முதலியன உண்டாவது என்ன நன்மையை விளைவிக்கின்றது! இவ்வாறு தசைகளின் தேவைக்குத் தக்கபடி மூச்சுறுப்புகளையும், குருதியோட்ட உறுப்புகளையும், கழிவாய் களையும் வேலை செய்யச்செய்து வலியையும், களைப்பையும் உண்டாக்குவன யாவை? அவை தான் நரம்பு மண்டலமாகும்.! நம்முடலை ஒரு பெரும்பட்டினத்திற் கொப்பிடின் இந்நரம்பு மண்டலத்தை அப்பட்டினம் முழுவதும் பரவியிருக்கும் தொலைப் பேச்சுக் கம்பிகளுக்கு (Telephone Wires) ஒப்பிடலாம். நம்முடலிலுள்ள பலப்பல உறுப்புகளையும், இடங்களையும், கூடுகளையும் தப்பாது சடுதியில் இணைக்கும் இவ்வரிய இணைகளைப் போல் இவ்வுலகில் நாகரீகம் மிகுந்த ஒரு நாட்டிலும் அவ்வளவு இணைகள் இல்லை; இனியுண்டாகப் போவதுமில்லை யெனின் இதன் ஒப்பற்ற பெருமை இனிது விளங்கும். இத் தகைய நரம்பு மண்டலம் எதனுலாயது, எவ்வாறு வேலைசெய் கிறதென்று பார்ப்போம்.

நரம்புகள் :—இவை வெண் பொருள், சாம்பல் நிறப் (Grey) பொருள் ஆகிய இருவகைப் பொருள்களாலாயவை. இவற்றுள் முன்னையது நரம்பு நார்களாலாயது (Fibres); பின்னையது நரம்புக் கூடுகளாலாயது. ஒவ்வொரு நாரும் சராசரி $\frac{1}{400}$ அங்குலக் குறுக் குடையது; ஒவ்வொரு கூடும் $\frac{1}{4000}$ அங்குல முதல் $\frac{1}{400}$ அங்குலம் வரை வேறுபடும் நீளமுடையது. ஒவ்வொரு கூடும் ஒன்று அல்லது பல கிளைகளை யுடையது. அக்கிளைகளுக்கும் கிளைகளுண்டு. அக்கிளைகளுள் மிக நீண்டதாய், கடைசிவரை பிரியாததாயுள்ள ஓர் நரம்புக்கம்பி (Axon) உண்டு. அதன் முனையில்தான் சில சிறு கிளைகளிருக்கின்றன. இச்சிறு கிளைகள் வேறொரு நீண்ட கிளையின் சிறுகிளைகளைத் தொடுவதால் தொடர்ச்சி யுண்டாகிறது. இவ்வாறு பல நீண்ட கிளைகள் தத்தம் சிறு கிளைகளோடு உடல் முழுவதும் பரவி ஒன்றோ

டொன்று தொட்டுக் கொண்டிருப்பதால் இவற்றின் கட்டளை யின்றித் தசைகள், உறுப்புகளில் ஓ ணுவும் அசைவதில்லை.

நரம்புகளின் வேலைகள் :—இத்தகைய நரம்புகள் இருவகைப் படும். ஒன்று உணர்ச்சி நரம்புகள் (Sensory Nerves), மற்றொன்று கட்டளை(Motor)நரம்புகள். இவற்றுள் முந்தியது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலிய பல உணர்ச்சிகளி லொன்றைக் கொண்டு செல்லும். பிந்தியது உடலிலுள்ள எல்லாத் தசைகளையும் உறுப்புகளையும் இயக்கும். இன்னும் எச்சிற்பை, கண்ணீர்ப்பை முதலிய பல பைகளை ஊறச் செய்யும்; குருதிக் குழாய்களைப்பெருக்க அல்லது சிறுகச் செய்யும்; இந் நரம்புகளின் வழியே உணர்ச்சி அல்லது கட்டளை செல்லும் விரைவு நொடிக்கு 100 அடியாகும்.

இணைச் சாலைகள் :—இந்த நரம்புகளைத் தொலைப் பேச்சுக் (Telephone) கம்பிகளுக்கு ஒப்பிடலாமென்று கண்டோம். இத்தகைய கம்பிகளுள் ஒவ்வொன்றும் இரண்டிடத்தைத்தான் இணைக்கக்கூடியனவன்றோ? ஒரூரிலுள்ள பல வீடுகளையுங் கடைகளையும், தொழிற்சாலை (Office) களையும் இணைக்க எத்தனை கம்பிகள் வேண்டுமென்று பாருங்கள். மூன்றிடத்தை ஒன்றற் கொன்று இணைக்க மூன்று கம்பிகள் போதுமானாலும் நான்கிடத்தை இணைக்க ஆறு கம்பிகளும், ஐந்திடங்களை இணைக்கப் பத்துக் கம்பிகளும், ஆறிடத்தை இணைக்கப் பதினைந்து கம்பிகளும், பத்திடத்தை இணைக்க நாற்பத்தைந்து கம்பிகளும், நூறிடத்தை இணைக்க நாலாயிரத்துத் தொளாயிரத்து ஐம்பது கம்பிகளும் வேண்டியனவா யிருக்கிறதாதலின் நம்முடலிலுள்ள எண்ணிறந்த இடங்களையும் கூடுகளையும் இணைக்க எத்துணை நரம்புகள் வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள். இவ்வாறு வேண்டிய கம்பிகளைக் குறைக்க ஓர் எளிய வழியுண்டு. அதுதான் இணைச்சாலை (Exchange) ஒன்றை ஏற்படுத்தி எங்கெந்த இடங்கள் இணைக்கப்பட வேண்டுமோ அவ்விடத்தை ஒவ்வோரிடத்திற்கும் ஒவ்வோர் கம்பியால் அச் சாலையுடன் இணைத்துவிட்டால் பின் ஆங்கு ஒருவனை ஏற்படுத்தி அவனைக்கொண்டு யார்யாருக்கு எப்பொழுது

எங்கெந்த இடத்துடன் இணைப்பு வேண்டுமோ அவரவர் தெரிவிக்கிறபடி எளிதில் இணைத்துக்கொண்டிருக்கச் செய்துவிடலாமன்றோ! இவ்வாறு செய்யின் ஒவ்வோரிடத்திற்கும் ஒவ்வொரு கம்பி இணைத்தல் போதுமன்றோ? இவ்வழியே, நம்மூர்களிலுள்ள தொலைப் பேசி (Telephone) களில் கையாளப்படுகிற முறையாகும். இவ்வாறாயினும் இடங்கள் மிகுதியாக ஆக ஒருவனே யாவர்க்கும் இணைப்பு உண்டாக்கிக் கொண்டிருக்க முடியுமா? முடியாதாகையின் இடங்களைத் தொகுதி தொகுதியாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு ஆளைப் போட்டுவிட்டால் இணைப்பு சரிவர நடக்குமன்றோ? இவ்வாறே நம் முடலின் எண்ணிறந்த கூடுகளை இணைக்க நான்கு இணைச்சாலைகளிருக்கின்றன. அவைதாம் முள்ளந்தண்டும், மூளையின் முப்பங்குகளாய உயிர் முடிச்சு, சிறு மூளை, பெரு மூளையுமாம். இவற்றின் அமைப்பையும் வேலைகளையும் ஆய்வாம்.

முள்ளந்தண்டு :—இது மேற்பக்கத்துள்ள 24 தண்டுக் கூட்டுகளுக்கிடையே முக்காலங்குலக் குறுக்கும் பதினெட்டங்குல நீளமு முடையதாக இருக்கிறது. இதன் வெளிப்புறத்தில் வெண் பொருளும் உட்புறத்தில் சாம்பல் நிறப் பொருளு மிருக்கின்றன. இதிலிருந்து 31 இரட்டை (62) நரம்புகள் பிரிந்து பெரும்பாலும் தசைகளிலும் தோலிலும் சென்று தம்கிளைகளுடன் முடிகின்றன. தண்டின் வலப்புறத்திலிருந்து பிரியும் நரம்புகள் உடலின் வலப் புறத்திற்கும், வலது உறுப்புகளுக்குமே செல்கின்றன; இடப் புறத்து நரம்புகள் இவற்றிற்கொத்தனவே. இத்தண்டின் வேலைகளிரண்டாம். அவையே (1) மூளைக்குச் செய்தி யனுப்புவதும், அதன் கட்டளைகளைத் தாங்கிச் செல்வதுமாகிய வேலைகளைத் தந்திக் கம்பிபோலிருந்து செய்வதும்; (2) கீழ் இணைச்சாலையாயிருந்து எதிர்ச் செயல்களைச் (Reflex Action) செய்வதுமாம். முள்ளந் தண்டு பல நார்களைச் சேர்த்து முறுக்கிய தாம்புக் கயிறுபோல், பல நரம்புக் கம்பிகளைச் சேர்த்து முறுக்கப்பட்டதாதலினாலும், இக் கம்பிகள் யாவும் மூளைக்குச் செல்கின்றனவாதலினாலும் இத் தண்டு மூளைக்குச் செய்தி யனுப்பவும், அதன் கட்டளைகளைத்

தாங்கிச் செல்லவும் ஓர் வழியாயிருக்கிறது. இத்தண்டிலேயே பல கூடுகளிருந்துகொண்டு தம்மிடத்துவரும் உணர்ச்சிக்குத் தகத் தக்க நரம்புகளின் வழியே கட்டளைகளையும் அனுப்புகின்றன. இக் கட்டளைகள் வரும் உணர்ச்சிக்குத் தக உணர்ச்சியை நீக்குவதற்கான எதிர்ச் செயல்களுக்கு முதலாயிருக்கின்றன.

எதிர்ச்செயல்கள் :—இச்செயல்கள் சிலவேளை நம்மறிவிற்கு எட்டாமலேயும், சிலவேளை எட்டும்படிக்கும் இவ்வாறு இரு வகையாக நடக்கின்றன. இவற்றுள் முதல்வகையைப்பற்றி ஆராய்வோம். தூங்குகிறவன் காலைச் சுரண்டினால் அவன் தனக்குத் தெரியாமலே காலை இழுத்துக்கொள்ளுகிறான்; அல்லது மூட்டைப் பூச்சி கடித்தால் புரண்டு படுக்கிறான்; அல்லது அரித்தால் சொரிந்து கொள்ளுகிறான். இவ்வாறு நடக்கும் ஒவ்வொரு செயலிலும் ஐந்து உட்செயல்களிருக்கின்றன. இச்செயல்கள் முதலில் தோற்புறத்திற் றொடங்குகின்றன. ஆங்கு யாதேனுமொரு நிகழ்ச்சிபற்றி நோயுண்டாகிறது. இந்நோய் அங்குள்ள உணர்ச்சிநரம்புக் கிளையிற்பட்டு நரம்புகளின் வழியே முள்ளந்தண்டிலுள்ள ஓர் உணர்ச்சிக் கூட்டிற்கு அனுப்பப்படுவதே இரண்டாவது உட்செயல். மூன்றாவதாக அவ்வுணர்ச்சிக்கூடு அத்துடன் இணைக்கப் பட்டிருக்கிற ஓர் கட்டளைக் கூட்டிற்குத் தெரிவிக்கிறது. நான்காவதாக அது உடனே ஒரு கட்டளையை நரம்புக் கம்பிகளின் வழியே அனுப்புகிறது. ஐந்தாவதாக அக்கம்பிகள் தசைகளை இயக்கி அந்நோயை நீக்கிக் கொள்ளுகின்றன. இச்செயல்கள் யாவும் தாமாகவே நம் அறிவின்றி நடப்பதால் நினைத்துச் செய்யக்கூடிய செயலினும் வெகு விரைவாக முடிகின்றன. இவையாவும் நடக்கும் பொழுது $\frac{1}{8}$ நொடியினுங் குறைந்ததாகும்.

இவ்வாறு நடக்குஞ்செயல் தக்க வலுவுடனிருப்பின் முள்ளந்தண்டிலுள்ள உணர்ச்சிக்கூடு கட்டளைக் கூட்டிற்குத் தெரிவித்துக் கொண்டிருக்கையிலேயே (3-வது உட்செயல்) அதன் பல கிளைகளுளொன்றின் வழியாக மூளைக்கு அறிவிக்குங்

கூட்டிற்கும் அறிவிக்கிறது. அது மூளைக்கு அறிவிப்பதால் அச்செய்தி அறியப்படுகிறது. † எனினும் நம் தீர்மானத்திற்குட்படாமலே எதிர்ச்செயல் தானாகவே நடக்கிறது. நம் கை நெருப்பில் படின் நம் முயற்சியின்றித் தானாகவே கை இழுத்துக்கொள்ளப்படுகிறது; நாம் வருந்தி முயன்றாலும் நம்மால் இழுத்துக்கொள்ளாமல் கையை நெருப்பிலேயே வைத்திருத்தல் எளிதன்று. ஆதலின் இவ்வெதிர்ச்செயல் பெரும்பாலும் நம் தீர்மானத்திற்குக் கட்டுப்படாமல் நடக்கிறது. இதனால்தான் ஒருவன் நம் கண் முன் கையை வீசும்பொழுது விளையாட்டிற்கென்று தெரிந்தும் நம் கண் இமைக்கிறது; தூங்குபவர்களை எழுப்பாமலிருக்கச் சிலவேளை நாம் தும்மலை அடக்கமுயன்றும் நம்மை மீறித் தும்மிவிடுகிறோம். நல்ல உணவைக் கண்டதும் அல்லது மோப்பம் பிடித்ததும் வாயில் எச்சில் தானாகவே ஊறிவிடுகிறது; திடீரென வெளிச்சம் மிகின் கண்களிலுள்ள நரம்புப்படுதாக்கள் (Iris) அவைகளை இயக்கும் கட்டுப்படாத் தசைகளால் மெதுவாய்ப் பெரிதாக்கப்படுவதால் அவற்றின் நடுவிலுள்ள தொளைகள் (Pupil) சிறுக்கவே உட்புகும் வெளிச்சம் அளவு படுத்தப்படுகிறது.

இரக்கமுள்ள நரம்புமண்டலம்:—இது முண்டத்திலுள்ள கட்டுப்படாத தசைகளாலாய உறுப்புகளாகிய குருதியேற்றம், தீனிப்பை, குடர்கள், பைகள், குருதிக் குழாய்களின் சுவர்கள் முதலியவற்றை வேண்டிய அளவுப்படி இயக்குகின்றது. இவ்

---

† இவ்வாறு நாம் அறியும்படி உணர்ச்சி நரம்பின் வழியே மூளைக்குச்செல்லுகையில் அந்நரம்பு சீராய் இயக்கப்பெற்றால் இன்பந்தரும் உணர்ச்சியாகவும், மிகுதியாய் இயக்கப்பெற்றால் துன்பந்தரும் உணர்ச்சியாகவும் இருக்கிறது. ஆதலின் உடலைப் பொறுத்த இன்பதுன்பங்கள் நரம்புகள் இயங்கும் வலுவைப் பொறுத்தனவே யன்றி வேறல்ல. முள்ளந்தண்டு ஒன்றுதான் எதிர்ச்செயலை உண்டாக்குவதாக எண்ணக்கூடாது. மூளையின் சிற்சில பங்குகளும் எதிர்ச்செயலை உண்டாக்குகின்றன. கண், மூக்கிலிருந்து துவங்கும் எதிர்ச்செயல்கள் மூளையால் உண்டாக்கப் படுகின்றன; ஏனெனில் அவை நேரே மூளையுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

வுறுப்புகள் யாவும் ஒன்றோடொன்று ஒழுங்காய் இணைந்தலைப் பெறுவதால் ஒன்றற்கொன்று தட்டின்றித் தாமே (நம்மறிவின்றி) உதவிபுரிகின்றன; ஒன்று நோயுறின் மற்றவையும் நோயுறுகின்றன. இதனாற்றான் இதற்கு இரக்கமுள்ள நரம்பு மண்டலமென்று பெயர் கொடுக்கப்பட்டது. இதன் வேலைகளுட் சிலவற்றை விரிப்பாம். உணவு தீனிப்பையை அடைந்ததும் இம்மண்டலத்தின் கட்டளையால் குருதியேற்றம் விரைவாய்த் துடித்துத் தீனிப்பைக்குக் குருதியை மிகுதியாய் அனுப்புகிறது; தீனிப்பை உணவைக் கடைகிறது; வேண்டிய கரைநீர்கள் சொரியப் பெறுகின்றன; இவ்வாறே சிறுகுடல் பெருங்குடல்களிலும் நடக்கின்றன; சமித்த உணவு குருதியுடன் கலந்ததும் ஏற்றத்துடிப்பும், குருதிக் குழாய்களின் பருமனும் சீர்படுத்தப்பட்டுத் தசைகளின் தேவைக்குத் தக்கவாறு ஆங்காங்கு அனுப்பப்படுகின்றன. இக்குருதிக் குழாய்களே உடல் சூடடைந்தால் பெருக்கவைக்கப்படுவதாலும் வேர்வைப் பைகள் விரைவாயுழைக்கத் தூண்டப் பெறுவதாலும் முற்காட்டியபடி சூடு தணிகிறது. உடற்சூடு குறைந்திருந்தால் இதற்கு மாறான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இவை யாவும் இன்னும் இத்தகைய பல செயல்களும் இந்நரம்பு மண்டலத்தாலேயே செய்யப்படுகின்றன.

இந்நரம்பு மண்டலம் முள்ளந் தண்டிலிருந்தே பிரிந்து அதற்குமுன் வலம், இடமாக உள்ள இருநரம்பு முடிச்சுத் தொடர்களின் வழியாகச் சென்று பிரிந்து பல கிளைகளாலும் முடிச்சுக்களாலுமாகிய பல நரம்புப் பின்னல்கள் (Plexna ஆருதாரம்) ஆகின்றன. இப் பின்னங்கள் முற்கூறிய உறுப்புக்களை இயக்குகின்றனவேனும் இவைகளுக்குக் கட்டளைகள் தண்டு மூளையிலிருந்து (Cerebro spinal system) வருவதாற்றான் இயக்குகின்றன. இக்கட்டளை பெரும்பாலும் உயிர் முடிச்சிலிருந்தே வருகிறது. இக்கட்டளை பெரு மூளைக்குத் தெரிவிக்கப்படாததால் பெரும்பாலும் நம்மறிவின்றியே இச்செயல்கள் நடைபெறுகின்றன. எனினும் கேடு தரத்தக்க சிலநோய்கள் ஏற்படின் மூளைக்கும் அறிவிக்கின்றன. அப்பொழுது அந்

நோயை விரைவில் நீக்கவேண்டும். எடுத்துக் காட்டாகச்சமிக்கும் உறுப்புகள் கெடின் உடல் நலிகிறது; பசி குறைகிறது. வயிற்றுவலி, வாயாலெடுத்தல் உண்டாகின்றன. அப்பொழுது உணவைக் குறைத்தால் தீனிப்பை இளைப்பாறலடைகிறது. ஒருவன் அளவிற்கு மிஞ்சி ஓடுவானாயின் குருதியேற்றத்தி லொருவகை வலியுண்டாய் அவனை ஓடாமல் நிறுத்திவிடுகிறது. சில வேளைகளில் பெருமூளையின் வேலை இம்மண்டலத்தையுந் தாக்குகிறது. அன்பு மேலீட்டால் உண்டாம் ஒருவகை இன்பம் மயிர்க்கூச்செறியச் செய்கிறது; நாணம் மூஞ்சியைச் சிவக்கச் செய்கிறது; பயத்தால் மூஞ்சி வெளுக்கிறது; துன்பம் சமித் தலைக்கெடுத்துப் பசியின்மையை உண்டாக்குகிறது. இவ்வாறு பெருமூளையும் இம்மண்டலமும் ஒருவாறு தொடர்புடையன வேனும் பெரும்பாலும் இம்மண்டலம் தானாகவே காரியங்களை நடத்துகிறது. இதனால் மூளையின் வேலை குறைவதன்றி, உடலின் தற்காப்பு மிகுகிறது. நம் மூச்சை நாமே அடக்கிக் கொண்டு தற்கொலை புரிந்துகொள்ளல் எளிதா? இல்லவே யில்லை! இம்மண்டலத்தின் செயலால் மூச்சுவிடும்படி கட்டாயப் படுத்தப்படுவோம்! இதைப் போலவே குருதியேற்றம், சமிக்கும் உறுப்புகளின் வேலை நம் அறிவைப் பொறுக்காதிருப்பது எத்துணை நன்மை! *

---

* இரக்கமுள்ள நரம்புகளுக்கும், தண்டு மூளை நரம்புகளுக்கும் (Cerebro-Spinal system) உள்ள வேற்றுமைகளாவன:—(1) இரக்க முள்ள நரம்புகள் பெரும்பான்மை சாம்பல் நிறப் பொருளுடையன; அவை வெண்ணிறப் பொருளுடையன. (2) இவை நரம்பு முடிச்சின் (Ganglia) வழியே சென்று பிரிகின்றன; அவை நேராகச் செல்கின்றன. (3) இவை அறிவிற்குட்படாச் செயல்களைச் செய்கின்றன; அவை அறிவிற்குட்பட்ட செயல்களைச் செய்கின்றன; (4) இவை நொடிக்கு 20 அடியாகச் செய்தியை மெதுப்படச் செலுத்துகின்றன; அவை நொடிக்கு 100 அடியாக விரைவாகச் செலுத்துகின்றன. (5) இவை மெதுவாக வேலை செய்யுங் கட்டுப்படாத் தசைகளை இயக்குகின்றன; அவை விரைவாய் வேலை செய்யும் பொறிகளையுங் கட்டுப்படுந் தசைகளை யும் இயக்குகின்றன.

மூளை :—மொத்தமான மண்டையோட்டினாலும் இவ்வோட்டின் கீழ் உள்ள மூன்று தோல்களினாலும் மூளை மூடப்பட்டிருக்கிறது. இவற்றுள் அடித்தோலிலுள்ள நுண்ணிய மயிர்க் குழாய்களின் வழியே குருதி மூளைக்குப் பாய்கிறது. இத்தோலிற்கும் மூளைக்கும் இடையே ஊநீர் போன்ற ஒரு நீர்ப்பொருள் இருக்கிறது. இப்பொருள் மூளையின் வெடிப்புக்களிலும் நிறைந்திருக்கிறது. இவை யாவும் மிக மேன்மை வாய்ந்த மூளையைக் காப்பாற்றுகின்றன. இம் மூளையிலிருந்து 12 இரட்டை நரம்புகள் பிரிந்து பல உறுப்புகளுக்குச் செல்கின்றன. (படத்தைப் பார்க்க). இது முப்பங்குகளாயதென்று முன் கண்டோம். அவற்றைத் தனித்தனியே ஆராய்வோம்.

(தொடரும்.)